

Tamil Comics Ulagam - King Viswa

லயன் காமிக்ஸ்
வெளியீடு நெ: 126

# ஹாட் - லைன்



வாசக நண்பர்களே,

வணக்கம்! தீபாவளி நல்வாழ்த்துக்கள்! உற்சாகமாய் - மகிழ்ச்சியாய், இந்தத் திருநாளைக் கழித்திட நமது லயன் தீபாவளி மலர் உதவிட்டால் எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சியே! மற்ற இதழ்களைப் போல தீபாவளி மலருடன் சோப்பு; ப்வுடர்; ஷாம்பூ etc...etc... கொடுக்க நம்மிடம் சக்தி கிடையாது. "தரமான கதைகள்" என்ற வாக்குறுதியினை மட்டுமே தர இயலும்!

நமது சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லர் ஒரு முழு நீள சாகஸத்தில் இந்த மாதம் உங்களை சந்திக்கக் காத்திருக்கிறார்! வழக்கம் போல நிறையவே ஆக்ஷன் உண்டு! So - படித்து; ரசித்து முடித்த பின்னர் உங்கள் எண்ணங்களைத் தெரிவித்திட வேண்டுகிறேன்!

செப்டம்பர் மாத இதழான் மாடஸ்டியின் "புலி வருது" கதை + அட்டைப்படம் நிறைவான பாராட்டுப் பெற்றுள்ளது! அடுத்த தடவையாவது "கார்வினுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு அட்டைப்படம் போடுங்கள்" என்று ஒரு சில வாசகர்கள் எழுதியிருந்தனர். 'அதுவும் சரி தான்!' என்று எனக்குப் படுகிறது! So - அடுத்த முறை மாடஸ்டி கதை வரும் போது - அட்டையில் கார்வின் தான் இருப்பார்! மறந்து விடாதீர்கள்!

அடுத்த மாதம் புதியதொரு காமெடி ஹீரோ "ஜாக்கி ஸ்டார்" அறிமுகமாகிறார்! ஜாக்கி ஒரு இளம் ஷெரீப்! செவ்விந்திய கிராமத்திற்கு அருகே வசிக்கும் ஜாக்கி ஒரு அமைதிப் பிரியர்! செவ்விந்திய (கிழட்டு) தலைவர்; உள்ளூர் ரௌடி என்று அனைவருமே இவருக்கு தோஸ்துகள்! இவர்களோடு சேர்ந்து ஜாக்கி செய்யும் காமெடி கூத்துகள் வயிற்றைப் புண்ணாக்கி விடும்! சமீபத்தில் இந்தத் தரத்தில் நான் கார்ட்டூன் ஏதும் படித்ததில்லை! So "ஹாலிவுட்டில் ஜாலி!" என்ற முழுநீளக் கார்டூனுடன் அறிமுகமாகிறார் ஜாக்கி! படிக்கத் தவறாதீர்கள்!

புத்தாண்டில் - புதிதாக என்ன செய்யலாமென்ற சிந்தனையில் இருக்கிறேன்! இது பற்றி உங்கள் suggestions - always welcome! லக்கி லூக்கின் "ஒரு கோச் வண்டியின் கதை" யோடு புது வருஷத்தை துவக்க எண்ணியுள்ளேன்! வழக்கம் போல் கலரிலா - அல்லது இரு வண்ணம் போதுமா?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை - happy reading!

அன்புடன்,
S. விஜயன்.

லயன் காமிக்ஸ் வெளியிடுவோர்:
பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
தபால் பெட்டி எண் - 374, சிவகாசி - 626 123.
போன்/பேக்ஸ்: 04562-72649



புதிய பகுதி!



# மாதம் ஒரு முகவர்

| | |
|---|---|
| பெயர் | R.T. இளங்கோ, M.A., B.Ed., BL. |
| வயது | 37 |
| முகவரி | இமய பவனம், இராசிபுரம். |
| சொந்தமாக புத்தகக்கடை உள்ளதா அல்லது கடைகளில் விநியோகம் செய்வது மட்டும்தானா? | ஆம். உண்டு. |
| லயன்/முத்து காமிக்ஸ் விற்பனையாளராக இருப்பது எவ்வளவு காலமாய்? | சுமார் இருபது வருடமாக |
| இதர ஏஜென்சிகள் எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு? | எதற்கும் இல்லை |
| லயன்/முத்து காமிக்ஸ் இதழ்களின் குறைகள் என்று நீங்கள் நினைப்பது என்ன? | விலைகளில் ஏற்றதாழ்வுகள், மாயாவி, ஜானி, லாரன்ஸ் போன்ற இன்றும் வாழ்வதாக உணரபடும் பாத்திரங்களை உருவாக்காமை. |
| நிறைகள் | தரம்! நல்ல நடையுடன் உள்ள வசனங்கள் |
| விற்பனை உயர்விற்கு என்ன பண்ணலாம்? | வாசகர் போட்டி, வாசகர் சந்திப்பு |


நள்ளிரவு வேட்டை!
டெக்ஸ் வில்லர் சாகஸம்!
சாமான்களை எல்லாம் ஏற்றிவிட்டேன் டெக்ஸ்... கிராமத்திற்கு திரும்புவோமா?
அவசரப்படாதே டைகர்... தபாலாபீஸில் எட்டிப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்
கிட்டிடமிருந்து கடிதம் வந்திருக்கலாம்... கடைசியாக அவனிடமிருந்து கடிதம் வந்து இரண்டு வாரங்களாயிற்று!
கார்ஸனைத் தான் உதைக்க வேண்டும்...
உங்களுடைய குமாரரை எங்கே இழுத்துக் கொண்டு அலைகிறாரோ அந்தக் கிழவர்... அத்தோடு, கார்ஸன் ஒரு மகனின் கடமையை சுட்டிக்காட்டக் கூடிய ரகமும் இல்லை!
உன் பழிச் சொற்கள் இம்முறை பொய்யாகிப் போகும்... பார்!
சில நிமிடங்களுக்குப் பின் -
மில்ட்டன்... என்க்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா?
ஒரு கடிதம் வந்திருக்கிறது மிஸ்டர் வில்லர்!
இந்தாருங்கள்... இரண்டு தினங்களுக்கு முன் வந்தது!
அடடே... கையெழுத்து கிட்டுடையதில்லை - கார்ஸனுடையதும் இல்லையே!
டியர் வில்லர், சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறேன். பிரச்சனையை தனியனாக தீர்த்துவிட முடியும் என்று தோன்றவில்லை. இங்கே வர நீ நேரம் ஒதுக்க முடியுமா?
என்னுடைய பண்ணை லாரெடோவுக்கு வடக்கே நாலாவது மைலில் இருக்கிறது... நன்றி! - பில் ஆண்டர்ஸன்.


ம்ம்... நானறிந்த தலை சிறந்த ரேஞ்சர்களில் ஒருவரான பில் ஆண்டர்ஸன் இந்த ரீதியில் கடிதம் எழுதுகிறார் என்றால் நிச்சயம் பிரச்சனையின் தன்மை கடுமையானதாகத்தான் இருக்கும்!
பின்னர்...
கடிதம் வந்திருக் கிறதா?
ம்ம்... ஆனால் கிட்டிடமிருந்தல்ல! என் பழைய நண்பர் ஒருவர் எழுதியிருக்கிறார்!... கிராமத்திற்கு மட்டும் தனியாக போக வேண்டியிருக்கும்...!
ஏன் நீங்கள் என்னோடு வர வில்லையா?
என் நண்பரை ஆபத்து சூழ்ந்திருக்கிறது... நான் உடனடியாக அங்கே போயாக வேண்டும்...!
கிராமத்தை பார்த்துக் கொள்... ரேஞ்சர்களின் கமாண்டுக்கு தகவல் கொடு. அவர்கள் கார்ஸனோடும் என் மகனோடும் தொடர்பு கொள்ளட்டும்!
ம்... நீங்க போகு மிடம்...?
லாரெடோ...! சீக்கிரமே உன்னோடு தொடர்பு கொள்ள முயற்சிக்கிறேன்... வரட்டுமா?
மூன்று தினங் களுக்குப் பின்
STATION
இங்கேயா இறங்கி கொள்கிறீர்கள்? ஆனால்... லாரெடே வரை டிக்கட் வைத்திருக்கிறீர்க
பரவாயில்லை... என் குதிரையையும் இறக்குங்கள்... இங்கிருந்து சாலை வழியே போய்க் கொள்கிறேன்
ம்ம்... உங்களிஷ்டம்! ஆனால் லாரெடோ இங்கிருந்து 15 மைல் தொலைவு ஆயிற்றே!
தெரியும்! அங்கே குதிரையில் போவதையே விரும்புகிறேன்
இறங்கி வா டைனமைட்... நீண் பயணம் காத்திருக்கிறது உனக்கு!





வெப்
ல்டேஷனை
விட்டு
வெளியேறிய
டெக்ஸ்
குதிரையை
ரு லாயத்தில்
விட்டுவிட்டு, அவ்வூரில் இருந்த ஒரே ஒரு மதுபானக் கடையினுள் நுழைந்தார்...
ஜில்லென்று ஏதாவது பருக வேண்டும் போலிருக்கிறது
என்ன ஸார்... வேண்டும்? -விஸ்கி?
நோ... ஐஸ் பீர் இருந்தால் கொடு!
ஷ்யூர்... வெப் சிறிய ஊராக ிருந்தாலும் நகரில் கிடைக்கிற ிரியான தரமான பீர் இங்கேயும் கிடைக்கும் ஸார்!
ஹலோ... மிஸ்டர்! நீங்கள் இரயிலை விட்டு இறங்குவதை பார்த்தேன்...! இங்கே தங்க உத்தேசமா?
களைப்பாறிய தும் புறப்பட்டுவிடுவேன், ஷெரீப்?
ம்... வேலை டி இங்கே வில்லையே?
சொன்னேனா அப்படி?
கோபித்துக் கொள்ளாதீர்கள் - என் கடமை... கேட்டேன்!
என்னைப் பார்த்தால் கோபக்காரன் மாதிரியா தெரிகிறது?
உங்களுடைய பதிலில் சினம் வெளிப் பட்டது... அதனால் தான்
உங்களுடைய ஊருக்கு வரும் யர்களை விசாரிப்பது உங்கள் கடமை ன்று எனக்கும் தெரியும்... வேண்டிய டியும் கேட்டுவிட்டீர்கள் அல்லவா?
?
ஆங்... ஞாபகம் வந்துவிட்டது... இந்த முகத்தை தான் ஏற்கனவே எங்கேயோ பார்த்திருக்கிறேன்...! எங்கே என்று ஞாபகம் வந்துவிட்டது... பெயரும் தான்....
சொல்ல வேண்டாம்!


ஓ.கே. அப்படியே ஆகட்டும்! உங்களுக்கு பீர் கொடுத்து உபசரிக்க நினைக்கிறேன்!
தாங்க்ஸ்... கொடுங்கள்!
சியர்ஸ்!
சியர்ஸ்... ஷெரீப்!
பின்னர் -கடைக்கு வெளியே...
என்னுடைய பழைய சகா... முன்னாள் ரேஞ்சர்... அவருடைய பண்ணை கூட லாரெடோவுக்கு வடக்கே 4 மைல் தொலைவில் இருக்கிறது... அவரைக் காண போய்க் கொண்டிருக்கிறேன்
அவரை நான் அறிவேன் -பெயர்... பில் ஆன்டர்ஸன்
ஆமாம்... ஏன் அப்படிக் கேட்டீர்கள்? எனக்கு இங்கே எத்தனையோ பிரச்சனைகள்...
அங்கே பில்லுக்கும் அப்படியே!
சகஜம்தானே... இந்நாளில் யாருக்குத்தான் பிரச்சனை இல்லை?
ஆனால் பிரச்சனை இன்னதென்று அவர் எழுதவே இல்லை!
அதை நான் சொல்ல முடியும்!
சென்ற வருடம், எல்லைப் புற நகரங்களில் மை
கொண்டிருக்கும் கால்நடை கடத்தல்காரர்களும்
மற்ற போக்கிரிகளும் தங்களை வழி நடத்திச் செல்
ஒரு தலைவனை கண்டுபிடித்திருக்கிறார்கள்



அவனை எல்மோரோ என்று அழைக்கிறார்கள்... ஆனால் அவன் யார்... அவனுடைய உண்மையான முகத் தோற்றம் எப்படி இருக்கும் என்று யாருக்கும் தெரியாது...
...சமர்த்தன்... செயல் வேகமுடையவன் என்கிறார்கள் அவனை அறிந்தவர்கள்...
பில் ஆண்டர்ஸனின் பிரச்சனைக்கு இந்த எல்மோரோ தான் காரணமாக இருக்கக்கூடும் என்பது உங்களுடைய யூகமா?
அடித்துச் சொல்வேன்! அதற்கான காரணத்தையும் ருகிறேன்! ஆண்டர்ஸனின் ண்ணை ரியோ ப்ராவோ ல்லையில் இருக்கிறது...
...பாருங்கள்! அத்தோடு, ஆற்றில் அந்தப் பகுதியில் வருடம் முழுக்க ஆழமின்றி வந்து போக வசதியுடையதாக இருக்கிறது
விஷயம் இப்போது புரிந்திருக்குமே உங்களுக்கு?
MINIERA
RIO BRAVO
MEXICO
WEBB
S. DIEGO
TEXAS
NUEVA LAREDO
LAREDO
தெளிவாக புரிகிறது! கால்நடை கடத்தல்காரர்கள் பெரிய அளவில் ழிலை நடத்தினால், கால்நடைகள் ற்றைக் கடந்து மெக்ஸிகோவுக்குள் ழைய ஏற்ற இடம் ஆண்டர்ஸனின் பண்ணை இருக்குமிடம்தான்!...
... நான் இப்போதே கிளம்பி தாமதமின்றி அங்கே போய்ச் சேரவேண்டும்!
நீங்கள் ரொம்ப உஷாராக இருக்க வேண்டும் வில்லர்!
ல்மோராவின் ஒற்றர்கள் எங்கும் நிறைந்திருப்பதாகக் கேள்வி...
தான் க்கிரதை யாக ருப்பேன்!
சில நிமிடங்களுக்குப் பின், டைனமைட்டில் ஏறி புயலென வெப்பை விட்டு வெளியேறினார் டெக்ஸ்...
ஆக, ஆண்டர்ஸனின் பிரச்சனைகளுக்கு காரண கர்த்தா இந்த எல்மோரோ தான்!



சீக்கிரமே பண்ணையை சென்றடைந்து... பிரச்சனை என்னவென்று அறிந்து கொள்ளத் துடிக்கிறேன்
சுமார் மூன்று மணி நேரம் கழித்து
ஹே...! அங்கே போவது யார் - தலை தெறிக்கும் வேகத்தில்!
ஏன் அந்த வேகம்?
ஓ...! இன்னும் இரண்டு பேர் - முன்னால் போகும் நபரைவிட கூடுதல் வேகத்தில்...
அடடே.... முகமூடி அணிந்திருக் கிறார்கள்!
முன்னால் போகும் நபர் என்னை பார்த்துவிட்டு திசை மாறிப் போகிறான்... நான் அவனுக்கு எதிரி இல்லை என்று எப்படி புரிய வைப்பது?
வின்செஸ்டரை கையில் எடுத்த டெக்ஸ், முகமூடி ஆசாமிகள் சுடும் வரம்பிற்கு அப்பால் இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டே, அவர்கள் திசையில் ஒரு ரவுண்டு சுட்டார்...
டுமீல்! டுமீல்!



ஹலோ... மிஸ்டர் - இந்தப் பக்கமாக வா!
நல்லவேளை... புரிந்து கொண்டுவிட்டான்... இனி அந்த இரு போக்கிரிகள் மீது கவனத்தை தொடரலாம்!
யார் அந்த அதிகப் பிரசங்கி?
சீக்கிரமே தெரிந்து கொண்டு விடலாம்... வா?
பயப் டாதே...! நீ ஆண்டர்ஸன் ன்னையை சேர்ந்த ஆளா?
உங்களுக்கு நன்றி பல...
ஆமாம்...!
ஆண்டர்ஸனுக்கு தொல்லை கொடுத்து வரும் போக்கிரிக்கும்பலைச் சேர்ந்தவர்களா..?
ங்கள் மிஸ்டர் ஆண்டர்ஸனின் ண்பர் என்றால் உடனடியாக...
கீழே இறங்கு -மிச்சத்தை அப்புறம் பேசலாம்!
ஆ
சைத்தான்


டுமீல்!
ஆ
ஹே... துப்பாக்கி
கையாளுவதில் என்
வேகம் ?
சரி... இப்போது சொல் ஆன்டர்ஸன் எங்கே இருக்கிறார் ?
பண்ணையில் தனியாக இருக்கிறார். அவரைச் சுற்றி அரை டஜன் வல்லூறுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன...
தனியாகவா? - ஏன்?
பண்ணையை சேர்ந்
மற்றஇரு கெள-பாய்கள்
மாட்டும், ப்ளாண்டியு
மேய்ப்புக்காக
போயிருக்கிறார்கள்... ந
லாரெடோ போயிருந்தே
பண்ணைக்கு நான் திரும்பிக் கொண்டிருக்கையில் சுமார் அரைமணி நேரத்திற்கு முன் துப்பாக்கி முழக்கத்தைக் கேட்டு வேகத்தை கூட்டினேன் - சீக்கிரம் போய்ச் சேர...
ஆனால் வழியில் சுடப்பட்டேன்...
வேறெதுவும் செய்ய இயலாத நிலையில் உதவிகோர லாரெடோவுக்கே திரும்ப முயன்றேன்... இவ்விரு கயவர்களும் என்னை துரத்திக் கொண்டு வந்தனர்...
போதும்... மேலே எதுவும் நீ சொல்ல வேண்டாம்
நீ லாரெடோவுக்கு விரைந்து திரும்பு... நான் பண்ணைக்குப் போகிறேன்!
!
ஓடுடா... ராஜா -வேகமாக!



இதற்கிடையே ஆன்டர்ஸனின் பண்ணையில் தோட்டாக்கள் சரமாரியாக சீறிக் கொண்டிருந்தன...
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
ஆ
நாசமாகப் போக...
கீழே படுத்து பதுங்குடா... முட்டாள்!
என்ன...
தீர்ந்து
ஆமாம் பாஸ்... இதுதான் கடைசிப் பெட்டி!
என்னுடைய அறையில் அலமாரியில் இருக்கிறதா என்று போய் பார்... சீக்கிரம்!
சரி... பாஸ்!
நிறுத்திவிட்டார்... மடக்கிவிட்டோம் நினைக்கிறேன்
எனக்கு பாதுகாப்பு கொடு... நெருங்கிப் போய் நோட்டம் விடுகிறேன்


ஆஆஆ...
ஆவ்வ்!
அதே வேளையில்
இதுதான் அந்தப் பண்ணை!
பில்...! பில்...!
தொலைந்தது போ... யாரோ வருகிறார்கள்!
சனியனை சுட்டுத் தள்ளு!
டுமீல்!
சண்டாளன்...! குதிரைகளை நோக்கி ஓடுங்கள் தோழர்களே
நில்லுங்கடா... தொடைநடுங்கி முண்டங்களா... அவன் ஒற்றை ஆள்... பயந்து ஓடுகிறீர்களே!


அடக் கடவுளே...
க்ராஞ்!
மடேர்!
ஒழிந்தான்!
அவசரப்பட்டு துள்ளாதேடா மூடா... இப்போது பார் -
டுமீல்!
க்ராஞ்!
நாசமாகப் போக...
!
..ஓடிப்போய் குதிரையில் ஏறுங்கள் -சீக்கிரம்!
டுமீல்!
ம்ம்... துப்பாக்கி விளையாட்டுக்கு வெட்டவெளியில் இப்படி இருப்பது சரியாகாது!
டுமீல்!
மறைவிடம் தேடிக் கொள்ள வேண்டும்...
ம்ம்... இது -வசதியான இடம்!
டுமீல்
அவன் குறி வைப்பதில் சமர்த்தனாக இருக்கிறான்
டுமீல்! டுமீல்!
ஓடுங்கள்... ஓடுங்கள்...


கோழைகள்...
பில்... பில்...
பில்... காயம்பட்டு விட்டதா உங்களுக்கு?
கதவை திறங்கள்... நான்தான் - வில்லர் வந்திருக்கிறேன்
கொஞ்சம் பொறுங்கள் -மிஸ்டர்!
?!
தெய்வம் போல வந்து சேர்ந்திருக்கிறீர்கள்... மாஸ்டரை காப்பாற்ற முடியுமா -பாருங்கள்!
காயங்களை பார்த்த மாத்திரத் திலேயே தெரிந்து விட்டது பில் ஆண்டர் ஸனை காப்பாற்ற
இனி யாராலுமே முடியாது என்று!
இங்கே வந்தமைக்கு நன்றி... வில்லர் - ஆனால்... நீங்கள் தாமதித்து...
இப்போது அதிகம் பேச வேண்டாம் பில்... நீங்கள் பூரண குணமடைந்த பிறகு எல்லாவற்றையும் விபரமாக பேசிக் கொள்ளலாம்!
பொய் எதற்கு வில்லர்...? என் கதை முடியப் போகிறது... என் மகன்...
மாடியில் இருக்கிறான் மாஸ்டர்.. சற்று முன்தான் போய் பார்த்துவிட்டு வந்தேன்... நலமாக இருக்கிறான்...
சற்று அமைதியாக இருங்கள் பில்...
என் மகனை நீங்கள்தான் பத்திரமாக பார்த்து கொள்ள வேண்டு


நடக்கக் கூடாதது நடந்துவிட்டால் அவனை பார்த்துக் கொள்ள நானாயிற்று - இது சத்தியம்.
...நன்றி வில்லர்!
ஹூம்... பாவம் பில்... இவருடைய கஷ்டங்கள் இனி இவரை துன்புறுத்தாது...
ஐயோ... மாஸ்டர்!
போய்விட்டீர்களே மாஸ்டர்... ஓ... தெய்வமே!
ஆழ்ந்த சோகத்தோடு வெளியே வந்த டெக்ஸ் பழிவாங்க சபதம் பூண்டவராக அங்கே வந்து கொண்டிருந்த
டைன மைட்டை நோக்கி நடந்தார்.
ஆண்டர்ஸனை கொன்றுவிட்டதால் தாங்கள் ஜெயித்து விட்டதாக அவர்கள் நினைத்தால் அது தப்பு என்று விரைவிலேயே புரிந்து கொள்வார்கள்
உன்னை காயப்படுத்தியதற்கும் சேர்த்து அவர்களை பழி வாங்குவேன்...
ல்லவேளை... லேசான சிறாய்ப்புத்தான்
டைன மைட்டின் காயத்தை கழுவி, மருந்திட்டு அதை லாயத்தில் விட்ட பின்
மீண்டும் பண்ணை வீட்டினுள் போனார் டெக்ஸ்
ம்ம்... அதற்குள் அவரை அப்புறப் படுத்தி விட்டாளே -இந்த மெக்ஸிகன் பெண்
உண்மை யிலேயே படு சமர்த்து தான்!
...நீங்களா ஸார்...! மேலே ஏறி வருகிறீர்களா?
இதோ...
மாஸ்டர் தன் மகளை உங்களிடம் ஒப்படைத்துச் சென்று விட்டார்... மைக்கேலை பார்க்க விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன்!
நிச்சயமாக...! அது சரி உன் பெயர் என்ன?



டோனியா ஸார்...
நீண்ட காலமாக நீ இங்கே இருக் கிறாயோ?
மாஸ்டர் திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து இருந்து வருகிறேன்!...!
... மைக்கேலை பெற்றெடுத்த இரண்டாம் நாள் அவனுடைய தா
இறந்துவிட்டாள்... அன்றிலிருந்
நான்தான் அவனை வளர்த்து வருகிறேன்...
அவன் மீது உனக்
நிறைய பாசம் உள்
இல்லையா?
அவனை என் சொந்த மகன் மாதிரி பேணி வளர்த்து வருகிறேன். அவனை என்னிடமிருந்து நீங்கள் பிரித்தெடுத்துச் சென்றால்...
இல்லை டோனியா... அந்த மாதிரியான காரியம் எதையும் செய்யும் உத்தேசம் எனக்கில்லை!
மிக்க நன்றி ஸார்... இதோ இருக்கிறான் பாருங்கள்
த்சோ... பாவ
இதற்கிடையே -
இந்த வீடு தானா?
நாம் செய்யக் கூடியது எதுவுமிருப்பதாக தெரியவில்லை ஷெரீப்...
நீ இங்கேயே இ
டோனியா... ந
கீழே போகிறே
இவனும் அந்த கும்பலைச் சேர்ந்தவன் தான்!
இல்லை... ஷெரீப்!
முகமூடியை அகற்று...!
வழியில் நாம் பார்த்த இரு நபர்களைப் போலவே இவனும் அந்நியன்...


ஷெரீப்... நான் சொன்ன நபர் - அதோ!
ம்ம்...
ஹலோ மிஸ்டர்... ஆண்டர்ஸன் எங்கே?
யாரும் இனி துன்புறுத்த முடியாத இடத்துக்கு போய்விட்டார். நான் இங்கே வந்தடையுமுன் எல்லாமே நடந்து முடிந்து விட்டது!
கோல்டன் ஸ்டார் பண்ணைக்கு தான் வந்து சேர்ந்த காரணம் குறித்து
லாரெடோ வின் ஷெரீப்புக்கு சுருக்கமாக எடுத்து ரைத்தார் டெக்ஸ்...
ஆண்டர்ஸன் செத்துவிட்டார்... அடுத்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?
உங்களுடைய கடமையை நான் இங்கே நிறைவேற்ற தீர்மானித் திருக்கிறேன்!...
?
... ஆண்டர்ஸனின் மகனை சட்டரீதியாக பொறுப்பேற்றுக் கொள்வேன்... பண்ணை அதன் சட்டபூர்வ உரிமையாளரை தவிர வேறு கைகளில் போய் சேர்ந்திடாதவாறு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்...
உங்களுடைய நல்லெண்ணத்தை பாராட்டுகிறேன் மிஸ்டர் வில்லர்... ஆனால் ஏகப்பட்ட பிரச்சனைகளை நீங்கள் எதிர்கொள்ள வேண்டிவரலாம் என்று அஞ்சுகிறேன்
ஆண்டர்ஸனை கொன்றவர்கள் தங்கள் இலட்சியம் ஈடேற தடையாக வந்து முளைத்துள்ள உங்களையும் தீர்த்துக் கட்டவே முயற்சிப்பார்கள்.
வரட்டுமே...
அப்படியொரு முயற்சியை மேற்கொண்டால் அதற்காக பின்னர் வருத்தப்படுவார்கள்
என் கடமை -உங்களை எச்சரித்து விட்டேன்!
சில நிமிடங் களுக்குப் பின் ஷெரீப் தன் பரிவாரங் களோடு கிளம்பிச் சென்றதும் வழியில் தான் காப்பாற்றிய
கெள-பாயிடம் டெக்ஸ் ஒரு வேண்டு கோள் விடுத்தார்
டிம்...! பண்ணையின் கால்நடை மந்தை இப்போதிருக்கும் இடத்திற்கு என்னை அழைத்துச் செல்...
சரி ஸார்...


ஒரு மணி நேரத்திற்குப் பிறகு...
கழுகுகள்! மந்தை இருக்குமிடம் அதுவாகத்தானிருக்கும்!
விரட்டு... குதிரையை!
டுமீல்! டுமீல் டுமீல்!
சற்றைக்கெல்லாம் டெக்ஸும் டிம்மும் இரண்டு சடலங்கள் கிடந்த இடத்தைச் சென்றடைந்தனர்...
படுபாவிகள்... மேட்டையும், ப்ளாண்டியையும் கொன்று விட்டு ஓடிப் போய் விட்டார்கள்!
அரக்கர்கள்... அவர்கள் மட்டும் யாரென்று எனக்கும் தெரிந்தால்...
இதற்கிடையே பாழடைந்த ஒரு ஸ்பானிஷ் மடாலயத்தில் - ..
அவன் செத்துவிட்டானா என்பதை நீ உறுதி செய்து கொள்ள் வில்லையா?
நிச்சயம் செத்திருப்பான்...
உதவாக்கரை நாயே... உன் கண்களால் பார்த்து உறுதி செய்து கொள்ளாமல் எப்படி நிச்சயம் என்று சொல்கிறாய்?
அவன் அலறுவதை கேட்டேன் - தோட்டா பாய்ந்த மாதிரியான மரண ஓலம் அது!
முட்டாள் தனமாகப் பேசாதே டைகோ!
நீ எனக்கு வலது கை மாதிரி - ஹும்... உன் நல்ல காலம் உன் முகரையை பெயர்க்காமல் விடுகிறேன் - என் கண் முன் நில்லாதே... தொலைந்து போ... சனியனே!
?



"எல்மோரோ" நீ சொன்னால் இப்போதே நான் பண்ணைக்குப் போகிறேன்...
நரகத்துக்கே வேண்டுமானாலும் போ... ஆனால் என் உத்தரவு இல்லாமல் பண்ணைப் பக்கம் மட்டும் நீ தலைகாட்டவே கூடாது - புரிந்ததா?
நியூவோ லாரெடோ போகிறேன்... உன் உத்தரவுக்காக அங்கே காத்திருப்பேன்.
போய்த் தொலை...
பின்னர் .
பணம் கிடைத்ததா?
ம்ம்... அத்தோடு, ஒரு மூட்டை வசவுகளையும் வாங்கிக் கட்டிக் கொண்டேன்...
கவலைப் படாதே டைகோ... வசவுதானே! வலிக்கவா போகிறது உனக்கு?
கிண்டலா?
என் இடத்தில் நீ இருந்திருக்க வேண்டும்...
தாராளமாக அள்ளிக் கொடுக்கிறாரில்லையா... கொஞ்சம் திட்டிவிட்டுத்தான் போகட்டுமே!
அத்தோடு, எல்மோரோ கொதிப்படைந்ததற்கு நீ அவரை மட்டும் பழி சொல்ல முடியாது!
நீயும் ஆரம்பித்து விட்டாயா... சே!
நியூவோ போவோம்... புறப்படுங்கள்
தாக சாந்தி பண்ணிக் கொள்ளக்கூட நமக்கு அவகாசம் கிடைக்க வில்லையே!



இதற்கிடையே
நல்ல மனிதர் நீங்கள்... ஆயுளுக்கும் உங்களை மறக்க மாட்டேன்
கிளம்பு... போவோம்!
நீங்களும் நகருக்கு வருகிறீர்களா?
நகருக்கா...? இல்லை...! கால்நடைகள் என்னவாயிற்று கண்டறியப் போகிறேன்!
அப்படியானால் நான் உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன் மிஸ்டர் வில்லர்
என்னோடு வரத் தோன்றவில்லையா உனக்கு?
ஸாரி ஸார்... கோல்டன் ஸ்ட பண்ணையின் கதைதான் இத் விட்டதே! உங்களுக்கு ஒரு ஆலோசனை சொல்ல பிரியப்படுகிறேன்.
யாருடைய ஆலோசனை எனக்குத் தேவையில்லை
ம்ம்... என் மீது மனக் கசப்பு இல்லையே?
நிச்சயமாக இல்லை டிம்... நல்வாழ்த்துக்கள்!
என் உயிரை காப்பாற்றியதற்காக மீண்டும் நன்றி சொல்லி விடை பெறுகிறேன் மிஸ்டர் வில்லர்...
போய் வா... டிம்!
ஹும்... அவனை குறை சொல்வதிலும் அர்த்தமில்லைதான். தோளில் தோட்டா பாய்ந்த பிறகு, கயவர்கள் வட்டமிடும் பண்ணையில் தொடர்ந்து ஊழியம் செய்ய எப்படி தைரியம் வரும்?
முதலில் கால்நடைகள் என்ன ஆயின என்று தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்... மற்றவைகளை பின்னர் பார்த்துக் கொள்ளலாம்!



மணி நேரம் கழித்து -
ரியோ ப்ராவோவில் ஆழமில்லாத இடம்... கால்நடைகள் இந்நேரம் மெக்ஸிகோவில் எங்கே போய்ச் சேர்ந்திருக்கிறதோ...
ஆறு டெக்ஸாஸின் எல்லையில் இருக்கிறது என்பதற்காக தேடுவதை நான் விட்டொழிப்பதா..?
தோ... எது எப்படி யாயினும் தொடர்ந்து தேடிச் செல்லத்தான் போகிறேன்!
ஒரு அபாச்சேயின் பிடிவாதத்தோடு விடா முயற்சியாக தடத்தை பின்பற்றி பயணத்தை தொடர்ந்தார் டெக்ஸ்! அஸ்தமனமான சற்றைக் கெல்லாம்—
கண்டுபிடித்து விட்டேன்... அதோ பள்ளத்தில் நிற்கின்றன...
ஆனால் அந்த அயோக்கியர்கள் எங்கே..? ஆங் -அதோ சற்றுத் தள்ளி தீ மூட்டுகிறார்கள்...
யார் இங்கே வரப்போகிறார்கள் என்கிற தெனாவட்டு...
எண்ணிக்கையில் அவர்கள் அதிகம் இல்லையெனில், அதிரடியாக நான் தாக்கிவிட முடியும்!
...இரண்டு, மூன்று, நான்கு - வேறு சிலரும் கூட இருக்கலாம்!
அதோ, பள்ளத்தாக்கின் தொடக்கத்தில் ஒருவன் நிற்கிறான். இதேபோல் மறுமுனையிலும் ஒருவன் காவல் நிற்கக்கூடும்.



சுமார் ஒரு மணி நேரம் கழித்து...
அந்தப் புகையிலையை இப்படிக் கொடு ஸ்டீவ்...
போடா... உனக்கு எப்போது பார்த்தாலும் ஓசிதானா...! காசு கொடுத்து வாங்கேன்!
என்ன ஆயிற்று உனக்கு...? நிறை பணம் கைக்கு வரப்போகிற இந் தருணத்தில் கரும மாதிரி நடந்துக் கொள்கிறாய்?
அப்படி ஒரு நினைப்பா...? அந்த மெக்ஸிகன் ஆட்களோடும் பணத்தோடும் வந்து மந்தையை வாங்கிக் கொண்டு போனதும், மொத்த தொகையையும் நாம் எல்மோரோ கையில் ஒப்படைக்க வேண்டும் - தெரியாதா?
நமக்கும் பங்கு உண்டுதானே?
தெரியாமல் பேசாதே... என் பங்குத் தொகை மொத்தத்தையும் தான் கிரேனிடம் கொடுக்க வேண்டியிருக்கிறதே
ஆத்திரப்படாதே ஸ்டீவ்
சீட்டாட்டத்தில் உனக்கு அதிர்ஷ்டமில்லை என்றாலும் கிரேன் மொத்தத் தொகையையும் ஒட்டு மொத்தமாக பிடுங்கிக் கொள்ளமாட்டான்...
கஞ்சப் பயல்... அவனைப் பற்றி உனக்குத் தெரியாது
நான் கிரேனிடம் பேசி நல்லபடியாக முடித்து வைக்கிறேன் பார்...
ஓகோ! மந்தையை வாங்கிப் போக ஒரு மெக்ஸிகன் வருகிறானா!
நிலவரம் புரிந்து விட்டது. இரவின் அமைதியை குலைக்க வேண்டிய கட்டாயம் இல்லை!


டுத்து நிம்மதியாக தூங்குங்கடா சோமாறிகளா...
மறுநாள் காலை பத்து மெக்ஸிகன்கள் அங்கே வந்து சேர்ந்ததை டெக்ஸ் கவனித்துக் கொண்டிருந்தார்...
பணத்தை திருடர்களில் ஒருவனிடம் கொடுப்பதையும் கண்டார்...
கொழுத்த ...ரம்தான் ...லிருக் கிறது!
முடிவில் கால்நடைகளை ஓட்டிக் கொண்டு மெக்ஸிகன்கள் புறப்பட்டதும், ஆறு திருடர்களும் பள்ளத்தாக்கை விட்டு, கிளம்ப ஆயத்தமாயினர்.
இதுதான் தருணம்...
20 நிமிடங் களுக்குப் பின்
?
நில்லுங்கள்! கைகளை அப்படியே உயர்த்துங்கள்!
என்ன இது புது விவகாரம்... நம்மை ஒருவன் தடுத்து நிறுத்தி -
வாயை மூடுடா...!
மிஸ்டர்... நீ வீணாக அலட்டிக் கொள்கிறாய்... எங்களிடம் உருப்படியாக எதுவுமே இல்லை பறித்தெடுத்துக் கொள்ள
பிதற்றாதே!


உங்களிடம் என்ன இருக்கிறது என்று நன்றாகவே தெரியும் எனக்கு... இம்முறை பணம் எல்மோரோ கையை போய்ச் சேரப் போவதில்லை என்பதும் எனக்குத் தெரியும்.
?
?
உனக்கு சற்று அதிகமாகவே தெரிந்திருக்கிறது... மிஸ்டர்.
பேசாதே.
கைகளை உயர்த்திய நிலையிலேயே குதிரையை விட்டு நழுவி கீழே வாருங்கள்... எல்லோரும்! விஷமத்தனம் வேண்டாம் - உயிர் உடம்பில் இருக்காது!
மறு பேச்சின்றி அனைவரும் டெக்ஸ் சொன்னவாறே செய்தார்கள்...
ஒருவன் மட்டும் சுடுவதில் தனக்குள்ள அபார திறமைமீது நம்பிக்கை வைத்து துப்பாக்கியை உருவ யத்தனித்தான்.
டுமீல்!
டுமீல்!
ஆ..ஆ...
இன்னும் வேறு யாருக்காவது தனது திறமை மீது நம்பிக்கை இருக்கிறதா..?
நாசமாகப் போக...
நகர்ந்து போய் பாறைமீது கைகளை வைத்துக் கொண்டு முதுகை காட்டியவாறு - நில்லுங்கள்... ம்... அப்படித்தான்



டுமீல்!
ஓடிப் போங்கள்...
ஐயோ... குதிரைகள்!
உஷ்ஷ்... கத்தாதே! பணமும், குதிரைகளும் தானே போயிற்று என்று சந்தோஷப்படு...
சாதுரியமாகவும், விரைவாகவும் டெக்ஸ் அந்த கயவர்களிடமிருந்த ஆயுதங்களையும், ரொக்கத்தையும் பறித்தெடுத்துக் கொண்டார்...
இனி நீங்கள் திரும்பலாம்... உயிராவது மிஞ்சியதே என்ற சந்தோஷத்தோடு ஊர் போய் சேருங்கள்!
இப்படிச் நீ செய்வது ரொம்பத் தவறு மிஸ்டர். 'எல்மோரோ' யாரென்று தெரியாமல் விளையாடுகிறாய். இதற்கு நீ பதில்.சொல்லியே ஆக வேண்டும்.
என்னை என்ன மிரட்டுகின்றாயா? உன்னுடைய தலைவரைப்போல் நான் எத்தனையோ நபர்களைச் சந்தித்திருக்கேன்.
பணம் சேர வேண்டிய நபருக்குத் தான் போய்ச் சேர்ந்திருக்குது என்று உங்கள் தலைவரிடம் போய்ச் சொல்லுங்கள்.
திரும்பிப் பார்க்காமல் ஓடுங்கள். ம்ம்... ஓடுங்கள்!
டுமீல்!
கயவர்களை வில்லர் ஓடுமாறு செய்துவிட்டு பணத்துடன் அவரது குதிரையை நோக்கி விரைந்தார்.



வேகமாக டைனமைட்! நாம் யாரென கயவர்களுக்குத் தெரிந்துவிடக் கூடாது.
வில்லர் 'கோல்டன் ஸ்டார்' பண்ணையைச் சென்றடைந்தார்.
ம்ம்... பண்ணையில் ஏதோ விஷ இருப்பது போல் தெரிகின்றதே
பண்ணையை சென்றடைந்த டெக்ஸ், வேறு எந்த விஷமியும் அங்கே இல்லை என்பதை சுற்றி வந்து
நோட்டம் விட்டு உறுதி செய்து கொண்ட பின் உள்ளே நுழைந்தார்
ம்ம்... புதிதாக இங்கே ஒரு உயர்ரக குதிரை நிற்கிறதே!
அப்போது
குட் மார்னிங் ஸார்!
குட்மார்னிங்... ஆன்டர்ஸனை தேடி வந்தீர்களா?
ஆமாம்... வியாபார விஷயமாக பேச வந்தேன்... ஆனால் என் வருகை அர்த்தமற்றுப் போய்விட்டது
ஆன்டர்ஸன் தங்கமான மனித அவருக்கு இப்படி ஆகிவிட்ட மிஸ்டர்...
நான் டான் பிலி
என் பெயர் டெக்ஸ்வில்லர்!
உங்களை சந்தித்ததில் கௌரவம் அடைகிறேன் மிஸ்டர் வில்லர்.
என்ன நடந்தது என்று டோனியா சொன்னாள். உங்களை பாராட்டத் தோன்றுகிறது எனக்கு!


அந்த சோதாக்களை மிரட்டி துரத்த அதிகமாக நான் கஷ்டப்படவில்லை...
ஒன்று கேட்பேன் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே -.. ஆன்டர்ஸன் மரணமடைந்து விட்டார். அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?
உண்மையை சொல்வதானால், இப்போதைக்கு என் மனதில் குறிப்பாக எந்த திட்டமும் இல்லை!
அப்படியானால் நான் ஒன்று சொல்லட்டுமா?
ஆன்டர்ஸன் பண்ணையை எனக்கு விற்பதாக இருந்தார்... இப்போது அவருடைய ஒரே ஒரு வாரிசு..
கொஞ்சம் பொறுங்கள் மிஸ்டர் பிலிப்...
மேலே எதுவும் பேசுமுன் ஆன்டர்ஸனின் பண்ணை விற்பனைக்கு இல்லை என்கிற உண்மையை தெரிந்து கொள்ளுங்கள்!
நம்பவே முடிய வில்லையே!
பண்ணை இப்போதுள்ள நிலையில், வாங்குபவர்களுக்கு அது ஆதாயமான பேரமாக இருக்க முடியாது... எனவே வேறு எவரும் வாங்க முன் வரமாட்டார்கள்...
பின்னே நீங்கள் மட்டும் வாங்குவதில் ஆர்வம் காட்டக் காரணம்?
என்னுடைய பண்ணை ஆன்டர்ஸனின் பண்ணையை ஒட்டித்தான் இருக்கிறது. என்னுடைய கால் நடைகள் மேய புது நிலப் பரப்பு அவசியப்படுகிறது.
ஓகோ...


இப்பொழுது இந்தப் பண்ணை உங்களது கால்நடைகள் மேய்வதற்கு ஆபத்தான இடம் என்ற தோன்றவில்லையா மிஸ்டர்!
இங்கு சுற்றும் கயவர்களின் அட்டகாசங்களுக்கு பயந்தவன் நான் அல்ல.
நான் ஆன்டர்சனுக்கு மிகவும் நெருங்கியவன். கடைசியாகச் சந்தித்தபோது சட்டபூர்வமாக நிலத்தை என்னிடம் விற்பதாகக் கூறினார்.
அப்படியா!
ஆன்டர்சன் இப்பொழுது நம்முடன் இருந்திருந்தால், இந்தக் குழப்பமே இருந்திருக்காது.
அவர் அப்படி இடத்தை விற்பத யாரிடமும் சொல்லவில்லை. நா எதற்கும் விசாரித்துக் கூறுகிறே
அப்படியானால் நான் விடைபெறுகின்றேன் மிஸ்டர் வில்
டான் பிலிப் புறப்பட்டுச் சென்ற சற்றைக் கெல்லாம் -
அந்த ஆள் யோக்கியன் போல் நடிக்கிறான் என்று நினைக்கிறேன்...
டோனியா?
கூப்பிட்டீர் களா... ஸார்
யார் இந்த ஆசாமி?
டான் ப்லிப் ? நல்லவர்... நாணயமானவர்!
மிஸ்டர் ஆன்டர்ஸனின் பண்ணையை ஒட்டி இருக்கும் மிரா ப்ளோர்ஸ் பண்ணை அவருடை ... மெக்ஸிகோவில் கூட அவருக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள்...


...ன்னைச் சுற்றி உள்ளவர்களிடம் அதிகாரம் செலுத்துபவரா?
...மாம்... ஸார்! ...ம்ப செல்வாக்கு உடையவர்
தன் பண்ணையை இவருக்கு விற்கும் உத்தேசம் ஆன்டர்ஸனுக்கு இருந்ததுண்டா?
இல்லை ஸார்... தன் பண்ணையை அவர் யாருக்குமே விற்பதாக இல்லை
நல்லது!
...னியா... நீ இங்கிருந்து உடனே கிளம்பி விடுவது நல்லது
ஸார்... வந்து
நீயும், குழந்தையும் பத்திரமாக இருக்க இது ஒன்று தான் வழி... நீண்ட காலத்திற்கு வசதியாக வாழ போதுமான பணத்தை நான் உனக்குத் தருகிறேன். ஆனால் எங்கே போய் தங்குவது என்பதை நீதான் தீர்மானிக்க வேண்டும்...
...னோஸில் எனக்கு ...றவினர்கள் பலர் இருக்கிறார்கள் ...யர்... உங்களுக்கு ஆட்சேபணை ...ல்லையென்றால்
நீ அங்கேயே போ...
இனியும் நீ இங்கே இருப்பதில் அர்த்தமில்லையாதலால் உடனே புறப்பட ஆயத்தமாகு...
லாரெடோ வரை நான் துணைக்கு வருகிறேன்...
...று மணி நேரம் கழித்து லாரெடோவில் -
ஹலோ ஷெரிப்... உங்களைத்தான் சந்திக்க நினைத்தேன்
நான் என்ன செய்ய வேண்டும்... சொல்லுங்கள்
இந்த குழந்தையை சட்டரீதியாக நான் பொறுப்பேற்க தேவையான வழிமுறைகளை உடனடியாக செய்ய வேண்டும்
அதில் கஷ்டம் ஏதுமில்லை!


ஜட்ஜ் என் நண்பர்தான்... வாருங்கள் நேரே அவரிடம் போகலாம்...
நன்றி...
வாருங்கள் என்னோடு... ஜட்ஜின் ஆபீஸ் அருகில்தான் இருக்கிறது!
சற்று நேரம் கழித்து -
நீ அப்போது அங்கிருந்தாயா?
ஆமாம் ஸார்... மிஸ்டர் ஆன்டர்ஸன் தன் குழந்தை மைக்கேலை மிஸ்டர் வில்லரிடம் ஒப்படைத்தபோது நான் அங்கே இருந்தேன்
அவ்வளவு தான்...!
ஒரு மணி நேரம் கழித்து
போய் தங்க ஏற்பாடு செய்து கொண்டதும் எனக்கு கடிதம் எழுத மறந்துவிடாதே!
மறக்க மாட்டேன் ஸார்!
மைக்கேலை கவனமாக பார்த்துக் கொள்!
உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா... வில்லர்!
ஒன்று என்ன இரண்டு கூட கேளுங்கள்!
உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பண்ணையை, ஆன்டர்ஸனின் மகன் வயதுக்கு வரும்வரை, என்ன செய்யப் போகிறீர்கள்


ந்த நல்ல முறையில் சீர்படுத்தி, பராமரித்து ண்டர்ஸனின் மகன் தன் தந்தையின் கடின உழைப்பின் பயனை பிற்காலத்தில் அனுபவிக்க வழி செய்வேன்.
பொறுப்பு சற்று கடுமையானது என்று எனக்குப் படுகிறது! அந்தப் பண்ணை...
தெரியும்... பண்ணையை பராமரிப்பதில் பல சிக்கல்கள் வரலாம்... ஆனால் அதற்குப் பயந்து நான் என் கடமையிலிருந்து பின் வாங்கப் போவதில்லை...
ஊழியர்கள்?
இங்கே உள்ளவர்களை அமர்த்தாமல் அரிஸோனாவிலிருந்து நம்பகமான ஆட்களை கொண்டு வருவேன்... முன்னாள் ரேஞ்சர்கள் பலரை எனக்குத் தெரியும்... நிச்சயம் எனக்கு கை கொடுப்பார்கள்...
முன்னாள் ரேஞ்சர்கள்...? - நல்ல யோசனை!
ப்பகுதியில் நீங்களும், களுடைய நண்பர்களும் க விரோத செயல்களை ளைந்தால் என்னைவிட ச்சியடையக் கூடிய நபர் ரும் இருக்க முடியாது...
எங்களால் ஆனதை செய்வோம்... ஷெரீப்!
எங்களுடைய போக்கு சற்று அதிரடியாக இருக்கும் பட்சத்தில்...
சொல்லவே வேண்டாம்... உங்களை எனக்குத் தெரியும்.. நான் குறுக்கே வரமாட்டேன்!
விடை கிறேன்... ஷெரீப்!
சென்று வாருங்கள்... நல்வாழ்த்துக்கள்!
அங்கிருந்து நேராக போஸ்ட் ஆபீஸுக்குச் சென்ற டெக்ஸ் டைகர் ஜாக்கிற்கு நீண்ட செய்தி ஒன்றை அனுப்பினார்
பின்னர் தன் வண்டி நிற்குமிடத் திற்குச் சென்று அதில் ஏறி பண்ணையை நோக்கிப் பயண மானார்...
ஓடுங்கள்...!


அன்றிரவு - சாப்பிட்டபின்...
வெளியே சற்று காற்றாட போய் வரலாம்
பண்ணையை விட்டு வெளியேறி அருகிலிரு
மேட்டுப் பகுதியின் அடிவாரத்தை நோக்கி
விரைந்தார்...!
என் கணிப்பு தவறாகவும் இருக்கலாம்
ஆனால், இரவை திறந்த வெளியில்
கழிப்பதுதான் பத்திரமானதாக இருக்கு
பண்ணையில் இருந்தால் சுலபமாக
எதிரிகளின் பிடியில் அகப்பட்டுக் கொள்
ஆபத்து உண்டு.
இரண்டு மணி நேரம் கழித்து
என் கணிப்பு சரியாகிவிட்டது...
விளக்கு
எரிகிறது
இன்னமு
தூங்கவில்
போலிரு
கிறது
சீக்கிர
நிரந்தர
தூங்க
பண்
விடல
இறங்குங்கள்! குதிரைகளை இங்கே மேட்டின் அடிவாரத்தில் விட்டு விட்டு நடந்தே பண்ணையை நெருங்குவோம் சிறிய பல குழுக்களாக பிரிந்து!
?
பட்... குதிரைகளை பார்த்துக் கொண்டு நீ இங்கேயே இரு
தமாஷ்
பண்ணுகிற


வருத்தப்பட இதில் என்ன
ருக்கிறது? தோட்டா பாயும்
யம் இங்கே இல்லை என்று
ந்தோஷப்படுவதை விட்டு
ம்ம்...
மற்றவர்கள் என்னோடு வாருங்கள்... அவன் தப்பி ஓடிவிடாதவாறு வீட்டை சுற்றி வளைத்துக் கொள்வோம்!
அங்கேயே வைத்து சமாதி கட்டிவிடுவோம்!
டமிட்டு செயல்படும் பெரிய கும்பல்தான்...
ஓ.கே. முதலில் பட் என்பவனை அப்புறப்படுத்துவோம்?
பூனைபோல் பதுங்கி நடந்து அவனை நெருங்கினார் டெக்ஸ்
வினாடிகளுக்குப் பின் -
ஹே... பட்
?
இனிய கனவுகள் கண்டு கொண்டிரு தம்பி
அவனை கட்டிப் போட்டு, வாயில் துணியை ம் திணித்த பின்னர் திரைகளை நெருங்கி,
சேணத்தை யும், சாமான் பைகளையும் அகற்றினார் டெக்ஸ்...
ஒரு பயல்கூட துப்பாக்கியை கையோடு எடுத்துப் போக வில்லை போலிருக்கிறது...
எனவே, இப்படியொரு யுக்தியை நான் கடைப்பிடித்தேன்...



அதே சமயம் -
டுமீல்!
டுமீல்!
க்ராஷ்!
வாடா... வெளியே
டுமீல்!
க்ராஷ்!
டுமீல்!
காணோமே!
மேலே இருக்கலாம் -வாருங்கள்
நில்லுங்களடா,... வில்லர் மேல் ப
இருந்தால் முதலில் படியில் கா
வைப்பவனை சுலபமாக இலக்கு
சுட்டுவிட முடியும்...
எனவே
வேறு உபாயத்தை கையாண்டு அ
இறங்கி வரச் செய்வது தான்
புத்திசாலித்தனம்...


றவர்கள் படிக்கட்டின் மீது கண் வைத்து காத்து நிற்க ஒருவன் அருகிலிருந்த விளக்கை எடுத்து மண்ணெண்ணெயை தரையில் கொட்டினான்.
குபுக்
டுத்து ஒரு தீக்குச்சியை உரசிப் ட்டான்... குப்பென்று தீ பற்றிக் காண்டது.
ஒதுங்கி நின்று படிக்கட்டின் மீது கவனமாக இருங்கள்... அவனுடைய தலை தெரிந்ததும் தீர்த்துக் கட்டிவிடலாம்
தற்கிடையே -
ஹய்ய்... ஷ்டத்திற்கு ங்கள்! எங்கே வேண்டு னாலும் போகலாம் ஓடுங்கள்!
டெக்ஸின் சாட்டை விளாசலுக்குப் பயந்து குதிரைகள் அனைத்தும் நாலாதிசைகளிலும் விரைந்தோடி இருளில் மறைந்து விட்டன...
இத்தனை ப்பாக்கிகள் என் வசம் இருக்கும் போது, எதிரிகள் தனை பேர் இருந்தால் என்ன...
பற்றி எரிந்த தீ எழுப்பிய சலசலப்பில், குதிரைகள் வெருண்டோடியதால் எழுந்த சப்தம் எதிரிகளின் காதில் விழவேயில்லை.
எல்லோரும் வெளியேறி கட்டிடத்தைச் சுற்றி வளைத்து நில்லுங்கள்!


சண்டாளர்கள்... வீட்டுக்கு தீ வைத்துவிட்டார்கள்
இதற்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லித்தான வேண்டும் -
வில்லர்... வெளியே வந்து விடு... இல்லையேல், தீக்கு இரையாகிப் போய் விடுவாய்...
தீக்கு இரையானாலும் ஆவானே தவிர வெளியேறி வரவே மாட்டான் என்கிறான்
நிமிடங்கள் கரைந்தன... முழுவதுமாக பற்றிக் கொண்டு விட்ட பண்ணை வீட்டிலும்
யாரும் இருப்பதான தடயமே தென்பட வில்லை...
சொன்னேனில்லையா...? தோட்டாக்களை விட தீயே தேவலாம் என்று இருந்து விடுவான் என்று
ஹூம்...
குழப்புகிறது... வில்லர் துணிச்சலானவன் என்றல்லவா கேள்விப்பட்டேன்...?
ஆனால் இப்போது நாம் காணும் உண்மை... அவன் எரிந்து சாம்பலாகிப் போனதுதான்!
போவோம்



நாளுக்குப் பின் -
வில்லரின் கதை முடிந்தது...
எல்மோரோ நம்மை இம்முறையாவது பாராட்டக்கூடும்!
அவர்கள் அங்கிருந்து கிளம்ப
போது தலைக்கு மேலே தோட்டாக்கள்
சீறிக்கொண்டு போயின.
எல்லோரும் கைத்துப்பாக்கிகளை கீழே போட்டுவிட்டு கைகளை உயர்த்துங்கள் இல்லையேல், யாருமே மிஞ்சமாட்டீர்கள்!
?
?
தொலை!
டுமீல்! டுமீல்!
டுமீல்!
ஆ
எச்சரிக்கை
டைந்து விடுங்கள்!
என்னிடமிருந்து நீங்கள் தப்பவே முடியாது... உங்களுடைய குதிரைகளை துரத்தியடித்துவிட்டேன்... துப்பாக்கிகள் அனைத்தும் என் வசம்!
டுமீல்!
சண்டாளா...




இங்கே தீயின் வெளிச்சம் நம்மை காட்டிக் கொடுக்கிறது... நைஸாக நழுவி ஓடிப் போய்விடுவோம் வா
நம்பிக்கை யில்லை!
நான் மூன்று வரை எண்ணுவே
அதன் பின்னரும் யாராவது கை
உயர்த்தியவாறு எழுந்து நிற்
தவறினால் சுட்டுத் தள்ளிவிடுவே
ஜாக்கிரதை!....
...ஒன்று!
...இரண்டு
...மூன்று!
டுமீல்!
டுமீல்
டுமீல்!
டுமீல்!
ஹ
டுமீல்! டுமீல்! டுமீல்!
மூடர்கள்!
டுமீல்!
அ


ஆ!
ஆ
டுமீல்! டுமீல்!
கயவர் கும்பல், மற்ற சந்தர்ப்பமாக இருந்தால் பாராட்டுப் பெறும் வீர தீரத்தோடு போராடியது...
ஆனால் கைத் ப்பாக்கிகளுக்கு அந்த வெளி அதிகமாதலால் ட்டாக்கள் பயனற்றுப் போயின...
இறுதி எச்சரிக்கை -சரணடை யுங்கள்
சரணடை வதா... தூ
டுமீல்!
டுமீல்!
அனைவரையும் கொன்று குவித்து விடுவான் போலிருக்கிறது
நிறுத்து - சுடாதே!
டுமீல்! டுமீல்! டுமீல்!
சுடாதே...!
சுடாதே...!
இப்போதாவது உங்களுக்கு புத்தி வந்ததே - சந்தோஷம்!



வரிசையாக நடங்கள்...! உயிரோடிருக்க உங்களுக்கு அது ஒன்றுதான் வழி
உதய வேளையில் -
நாம் சென்றடைய வே
இடம் வந்துவிட்ட
ஹே... அங்கே பாரேன்!
அடக் கடவுளே!
டெக்ஸ் கயவர் கும்பலோடு வந்திருக்கும் செய்தி நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவியதை யடுத்து
ஜனங்கள் வேடிக்கை பார்க்க பெருந்திரளாக வந்து குழுமினர்...
வழி விடுங்கள்...
ஹலோ ஷெரீப்... உங்களுக்கு சில வாடிக்கையாளர்களை ஒப்படைக்கிறேன்...
நிஜம்தானா... இது?
பல மைல் தூரம் நடந்
வந்திருக்கிறார்கள்... எ
யாரும் தப்பியோட முடி
- முயற்சிக்கவும் மாட்டா
அறையில் போட்டு பூட்டியதும் குறைந்த பட்சம் 24 மணி நேரத்திற்கு அடித்துப் போட்டது போல் தூங்கிப் போய்விடுவார்கள்
?
?
தயவு செய்து சிறைச்சாலை வரை கொண்டு வந்து விட்டுப் போங்களேன்!
ம்ம்... ஓ.கே.



பார்த்தேன்... பார்த்தேன்!
வா... என்னதான் நடக்கிறது என்று கிரேனிடம் போய்ச் சொல்வோம்!
நம்பவே ...டியவில்லை... எப்படி இது சாத்தியமாகி யிருக்கும்?
சமயம் வரும்போது தெரிந்து கொள் வோம்... மார்ட்!
கிரேனிடம் போய் சொல்ல வேண்டியது நம் பொறுப்பு... அவன் ஏதாவது செய்வான்...
செய்தால் சரி!
நேரம் கழித்து -
யாரது?
மார்ட் வந்திருக்கிறேன் முக்கியமான செய்தியோடு! கதவைத்திற கிரேன்!
இதோ... வந்து விட்டேன்!
இந்த அகால வேளையில் வந்து தூக்கத்திலிருந்து என்னை எழுப்ப அப்படி என்ன தலை போகிற அவசரம்?
சற்று முன் நீ மெயின் ரோட்டுக்கு வந்திருந்தால் க்ரோடர், ஸ்மித்ஸன், கல்டர், மத்யூஸ் மற்றும் ஒரு டஜன் நண்பர்கள் நகர் சிறைச்சாலை நோக்கி அணி வகுத்துச் சென்ற காட்சியை நேரில் பார்த்திருக்கலாம்
தமாஷ் பண்ணு கிறாயா?



சிறைச் சாலைக்குப் போய் பார் - இது தமாஷ் இல்லை என்று புரியும்
ஷெரீப் எப்படி இதை -
இதில் ஷெரீப்பின் பங்கு எதுவுமில்லை... யாரோ அந்நியன் கொண்டு வந் ஒப்படைத்த நபர்களை அ சிறைச்சாலைக்கு அனுப் வைத்தார்... அவ்வளவுதா
வேறு என்ன நடந்தது அங்கே?
தெரியாது! இந்தக் காட்சியை கண்டதும் உன்னிடம் தெரிவிக்க ஓடோடி வந்துவிட்டோம்!
சரி... திரும்பி நகருக்குள் போய் என்ன பேசிக் கொள்கிறார்கள் என் அறிந்து கொள்ளுங்கள்... அரைம நேரம் கழித்து நாம் பிக் ஹார்னி சந்திப்போம்...
சரி...!
இதற்கிடையே ஷெரீப்பின் ஆபீஸில்
...இதுதான் நடந்தது!
நீங்கள் அதிர்ஷ்டக்காரர்தான்!
இல்லை...! அவர்கள் வசம் பிஸ்டல் மட்டுமே இருந்ததும், தீ வெளிச்சம் அவர்களை நான் குறிவைக்க உதவியாக இருந்ததும் தான் எனக்கு சாதகமாக அமைந்துவிட்டது
பண்ணை வீட்டை மீண்டும் புதிதாக நிர்மாணிக்கும் உத்தேசம் ஏதுமில்லையே?
இல்லை...
ஆனால் அந்த எல்மோ என்னும் அயோக்கிய சிகாமணியின் குரல்வளையில் கைவை வரை 'கோல்டன் ஸ்டாரிலேயே' தங்கு என்று தீர்மானித்திருக்கி


ஊருக்கு உபதேசம்!
ஆணி வேரை களைந்து விட்டுத்தான் ஓய்வீர்களோ?
என் நண்பர் ஆன்டர்ஸனின் மரணத்திற்கு முழுமையாக பழி தீர்த்துக் கொண்ட பின்னர்தான் இப்பகுதியிலிருந்து வெளியேறுவேன்!
இப்போது சற்று ஓய்வெடுக்க விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன்...
நிச்சயமாக... அமைதியான இடம் தேவை
அமைதியான ஒரே இடம் -என் வீடுதான்!
விருந்தினர்களுக்காக வசதியான ஓய்வறை ஒன்று இருக்கிறது என் வீட்டில்...! வரலாம் அல்லவா?
ஓ... ஷ்யூர்!
என்ன கலாட்டா இங்கே?
அமைதி...! அமைதி...! கேட்க வேண்டியதை இப்போது ஷெரீப்பிடம் கேட்கலாம்
ஷெரீப்... உங்களிடம் ஒன்றுகேட்க வேண்டும்
என்ன தான் நடந்தது -சொல்லுங்கள்
ஆளுக்கு ஆள் கத்தாதீர்கள்... ஒவ்வொருவராக கேளுங்கள்
பென்... நீ உள்ளே போய் ஜெயில் அறை மீது கவனமாக இரு...
விசேட உத்தரவு ஏதாவது?
ஜெயில் அறை அருகே யாரையும் நெருங்க விடாதே... கைதிகளை பார்க்க யாருக்கும் அனுமதி இல்லை!


ம்ம்... என்ன தெரிய வேண்டும் உங்களுக்கு?
என்ன தான் நடந்தது என்று கேட்டோம்!
நடந்ததை சுருக்கமாக எடுத்துரைத்தார் ஷெரீப்...
முடிவில் அவர்களை ம
இங்கே கொண்டு வ
என்னிடம் சேர்ப்பித்
இவர்.
த்சொ...
என்ன துணிச்சல்?
அதற்குரிய விலையை அவன் தரவேண்டி வரும்!
ஷெரீப்! நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்
ஓ...
தாராள
ஜனங்களே...! ஷெரீப் சற்று முன் சொன்ன மாதிரி... கோல்டன் ஸ்டாரை இனி நான்தான் பராமரித்து வரப்போகிறேன்... இது சம்பந்தமாக நான் சொல்லப் போகிற விஷயங்களை நீங்கள் கவனமாக கேட்டு நினைவில் இருத்திக் கொள்வது நல்லது...!
...கேட்பதோடு நில்லாமல் உங்க
நண்பர்களிடமும் சொல்லுங்கள்...
நகருக்கு நான் புதியவன் என்ப
உங்களில் நல்லவர்கள் யார் கெட்டவ
யார் என்று எனக்குத் தெரியாது... இ
எச்சரிக்கை எல்லோருக்கும் பொதுவா
?
?
கோல்டன் ஸ்டார் எல்லைக்குள் யாரும் பிரவேசிக்க நினைக்க வேண்டாம்...! ஏனெனில் அங்குள்ள புல்வெளி பரப்பில்...
...யாரைக் கண்டாலும் உடனே சுட்டு வீழ்த்திவிடுவேன்!
உங்களில் குறிப்
எவருக்காகவும்
எச்சரிக்கையை
விடுக்கவில்லை


ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி நல்லவர் யார் வர் யார் என்று தெரியாததால் இப்படி குறுக்கு பொது எச்சரிக்கை விடுக்கிறேன்...
ஆனாலும் ரொம்ப வேகமாகத்தான் போகிறீர்கள்
அப்படியில்லை... மற்றவர்கள் மீது நம்பிக்கை வைத்த தவறுக்காக ஒரு நல்ல மனிதர்... அதாவது என் நண்பர் பில் ஆண்டர்ஸன் தன் உயிரையே பலி கொடுத்தார்.....
..அந்தத் தப்பை நான் செய்வதாக இல்லை!
கேட்டுக் கொண்டீர்களா...? போய்த் தொலையுங்கள் - இனியும் இங்கே எதற்காக நிற்கிறீர்கள்?
பல் சீக்கிரமே மண்டையோடு சிதறி லோகம் போய் சேரப் போகிறான்...
நிச்சயம் அதுதான் நடக்கும்!
போய் விஷயத்தை கிரேனிடம் தெரிவிப் போம்!
அப்புறம் இருக்கிறது வேடிக்கை!
அரைமணி நேரம் கழித்து -
ரேன் எங்கே?
மாடியில் இருக்கிறார்
வாருங்கள்... ஏதாவது தகவல் கிடைத்ததா?
நிறைய!


க்ரோடரும் அவனுடைய சகாக்களும் எல்மோரோவின் உத்தரவின் பேரில் நேற்றிரவு கோல்டன் ஸ்டாருக்கு போயிருக்கிறார்கள் - வில்லரை தீர்த்துக்கட்ட!
... அவன்தான் ஆன்டர்
இடத்தில் இருந்து கொண்டு
தோழர்களை முறியடித்திருக்கிற
அவனை உனக்குத் தெரியுமா
இல்லை... பெ
கேள்விப்பட்டி
கிரேன்... சரி
சொல்
க்ரோடரும், மற்றவர்களும் விஷயம் அற்பமானது என்று தப்புக் கணக்கு போட்டிருக்க வேண்டும், விளைவு - வில்லர் அவர்களில் சிலரை கொன்றுவிட்டு, மீதிப் பேரை கொண்டு வந்து சிறையில் அடைத்துவிட்டான்!
வில்லர்... வில்லர்
அவன் இப்போது எங்கே இருக்கிறான்?
தெரிய
யாராவது ஒருத்தன் அவனை பின் தொடர்ந்து போவதற்கென்ன?
கோபப்படாதே கிரேன்... அவன் நிச்சயம் நகரைவிட்டு வெளியேறி இருக்கமாட்டான்
அவன் தன் பாதையில் போயிருக்க மாட்டான் என்று எப்படி நீ நிச்சயமாக சொல்ல முடியும்?
அவனே
சொன்னா
பண்ணை வீட்டை க்ரோடர் குழு எரித்து தரை மட்டமாக்கி விட்டது... வில்லரை தீர்த்துக் கட்டுவது அத்தனை சுலபமல்ல புரிந்து கொள்!
அவன் விடுத்த எச்சரிக்கையை நீ கேட்டிருக்க வேண்டும்
கோல்டன் ஸ்டார்
எல்லைக்குள் கால
வைத்தால் மறுகணமே
ஒட்டில் தோட்டா பா
என்றா


கேட்டதானால்
மாறாக, நான் தெரிந்து கொள்ள விரும்புவது அவன் இங்கேதான் இருக்கிறானா? அப்படியானால் எங்கே தங்கியிருக்கிறான்? என்ற கேள்விகளுக்கான பதிலை! போய் விசாரித்து வந்து சொல்லுங்கள்... நான் இங்கேயேதான் இருப்பேன்
லாயக்காகாத பயல்கள்... எவனையும் நம்புவதற்கில்லை!
க்ரோட்டும், மற்ற சோதாக்களும் உதவாக்கரைகள்...
முன்னால் தகுதியுடைய ஒரே உடனடியாக கட்டிவிட்டால் மற்றவர்களையும் கிவிடும்...
ஆனால் எல்மோரோவை இந்த சோமாறிகள் என்ன சொல்லி சமாதானம் செய்வார்களோ -செமத்தியாக வாங்கிக் கட்டிக் கொள்ளப் போவது உறுதி
இந்தப் பெயரை நான் கேட்டிருக்கிறேனே...
பதில் தேடி நான் ஏன் மூளையை குழப்பிக் கொள்ள வேண்டும்? -ஸாடான்டிஷ்ஷை கேட்டுப் பார்க்கலாம்


டென்வர்
சில்வர் என்றொருவன் என் வழியில் குறுக்கிட்டிருக்கிறான். அவன் யார்? - மிக அவசரம்!
சற்று நேரம் கழிந்து...
இதோ
விஸ்கியா... கிரேன்?
ஆமாம்... டபுள்!
க்ரோடர் குழுவைப் பற்றி மற்றவர்கள் சொல்வதை என்னால் நம்பவே முடியவில்லை
அவர்கள் பேச்சை எடுக்காதே
அது சுலபமான காரியமில்லையே...
கிடக்கிறார் -விடு..
வோ!


இரவுக்
ஆமாம்! நல்ல சேதி இல்லை!
ஹுனா! நீ போய் ஜாதிக் குதிரைகளாக, ஐந்தை தேர்ந்தெடுத்து இங்கே கொண்டு வா! ஹுமா... நீ போய் மேகலையும் டானாடோவையும் கூட்டி வா... அங்கே உருவாகியுள்ள நெருக்கடியில் நாமும் பங்கேற்க விரைய வேண்டும்.
வோ...!
வோ...!
பிரச்சனை வரப்போகிறது
முன்கூட்டியே அனுமானித்தேன்...
மான்யுகா... உங்களுடைய ஒத்தாசை தேவைப்படுகிறது
சொல்...: தம்பி!
சிலரால் இரவுக் கழுகுக்கு உருவாகியிருக்கிறது - லாரெடோ என்னும் வெள்ளையர் கிராமத்தின் அருகே... அதாவது, கமான் சேக்களின் பிராந்தியத்திற்கு தெற்கே! ....
....நானும் நான்கு வீரர்களும் டெக்ஸுக்கு உதவ இங்கிருந்து சற்று நேரத்தில் கிளம்பிச் செல்லவிருக்கிறோம்... உங்களுடைய உதவி தேவை...
கமான்சேக்களின் மாந்திரீகருக்கு நான் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்கிறாயா?
ஆமாம்... அதுவே தான்!
இரவுக் கழுகு இருக்கு மிடத்தை நாங்கள் சென்றடைய சில தினங்கள் பிடிக்கலாம்...
அதற் கிடையே... விபரீதமாக எதுவும் -
ம்ம்... உன் கிலேசம் எனக்குப் புரிகிறது!



கிராமம், கிராமமாக
அஞ்சல் செய்தால் அங்குள்ள
மாந்திரீகருக்கு என்னுடைய செய்தி
வெகு சீக்கிரமே போய்ச்
சேர்ந்துவிடும்.
நிம்மதியாக புறப்படு தம்பி... எங்களிடையே உ
ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்டவர் அங்குள்ள
மாந்திரீகர் ப்யோகன்! இரவுக் கழுகுக்கு எந்
ஆபத்தும் வந்துவிடாமல் பாதுகாக்க உடனடி
நல்ல வீரர்களை அனுப்பி வைக்க ஆவன செய்
இரவுக் கழுகு இப்போது இருக்கும் இடத்தின் பெயரை துல்லியமாக சொல்...
லாரெடோ வுக்கு வடக்கே சில மைல் தொலைவில் உள்ள கோல்டன் ஸ்டார் பண்ணை
அடுத்த இரு அஸ்தமனங்கள் ஏற்படு முன், இரவுக் கழுகாருக்கு துணையாக திறமையான வீரர்கள் அவரைச் சுற்றி இருப்பார்கள்
மிக்க ந
மான்ய
அதையடுத்து டைகரும் மற்ற நான்கு வீரர்களும் கிராமத்திலிருந்து புறப்பட்டனர்... புயல் வேகத்தில்!
முதல் புகை சமிக்ஞையும் அதே
சமயம் வானோக்கி எழும்பலாயிற்
கமான்சேக்களுக்கு விடுக்கப்பட்ட அந்தச் செய்தி நாள் முழுக்
கிராமம், கிராமமாக அஞ்சல் செய்யப்பட்டு நவஜோக்களின்
பிராந்தியத்தை கடந்து, பிமாஸ், பியூட்டஸ், மெஸ் காலெரோஸ்
பாபாகோஸ், ப்ராங்கோஸ் உள்ளிட்ட வேறுபல ஆதிவாசிகளின்
பூமியை ஊடுருவி தன் இலக்கை நோக்கி வேகமாக போய்க்
கொண்டிருந்தது...


டோவில்
தல்!
இதற்கிடையே லாரெடோவில் அஸ்தமன வேளையில்...
ஆறு மணி...! ஒ - என்ன ஒரு தூக்கம்!
ந்து முகம் கழுவி வெளியே
த்தமானார் டெக்ஸ்...
சற்றைக்கெல்லாம் -
அகோர பசி... முதலில் நல்ல ரெஸ்டாரண்டை தேடிப் போக வேண்டும்... என்ன சாப்பிட்டாலும் அடங்காது போலிருக்கிறதே இந்தப் பசி!
அவன்! டவுனுக்குள் போலும்... ஓடிப்போய் ரேனிடம் சொல்!
இதோ!
கிரேனின் பிஸ்டலுக்கு இவன் எப்படி பதில் சொல்லப் போகிறானோ...


கிரேன்... வில்லர் வந்து கொண்டிருக் கிறான்
?
!
?
மன்னிய
தோழர
ஜிம்மி... என் இடத்தில் உட்கார்ந்து ஆடு - நான் சீக்கிரமே திரும்பி வந்துவிடுவேன்...
ஓ.கே.!
தெரு முனையில் வந்து கொண்டிருக்கிறான்... அதோ... பார்!
வரட்
கிரேன்... துணைக்கு நானும் -
அவசிய மில்லை!
SALOON
எதையும் தனியாக சாதித்து பழக்கப்பட்ட இந்த கிரேன்... நீயு மார்ட்டும் இதில் மூக் நுழைக்க வேண்டா போய்விடு இங்கிரு
வாடா... ஒற்றைக்கு ஒற்றை பார்த்துவிடலாம்!
சாலையில் இருந்த ஜனங்கள் சட்டென்று ஒளிவதை கண்ணுற்ற டெக்ஸுக்கு அடுத்து நிகழப் போகிறது என்பதை யூகிப்பதில் சிர இல்லை...
ஓகோ... விபரீதமா?


சாலையின் நடுவில் நிற்கும் அந்த நபர்தான் ஜனங்களின் பீதிக்கு காரண கர்த்தாவா...?
வில்லர்?
ஆமாம்... நான்தான்!
ந்த சிறு நகரம் நம் இருவரையும் தாங்காது... எனவே, சூரியன் மறைந்த பிறகும் நீ இங்கேயே இருந்தால்...
...என் துப்பாக்கிக்கு பதில் சொல்ல வேண்டி வரும்
இதைச் சொல்ல நீ யார்?
கிரேன்...!
இந்தப் பெயரை ஏற்கனவே கேள்விப் பட்டிருக் கிறேனே!
நகரை விட்டு இப்போதே நீ ஓடிப் போனால், வாழப் போகும் நாட்களில் என் பெயரை நினைவுபடுத்திக் கொள்ளலாம்!
அப்படியா...? சரி - நான் சொல்வதை கவனமாக கேட்டுக் காள்!
பிணம் தின்னிக் கழுகுகளாக அலையும் ஈனப் பிறவிகளில் கேடு கெட்டவன் நீ...
ஓ.கே... இது போதும் உன்னை நான் ஒழித்துக்கட்ட




டுமீல்!
படு பயங்கரமாக காயமுற்ற போதிலும் சமாளித்து எழுந்து மீண்டும் தன் எதிரியை குறி
வைத்து துப்பாக்கியை உயர்த்தினான் கிரேன்...
டேய்... உ.. உன்..னை... நான்... தொலைத் -
டுமீல்!
மறு வினாடி...
GENERALSTORE
நகரில் நான் தங்கியிருப்பதில் உங்களில் இன்னும் வேறு எவருக்கேனும் ஆட்சேபணை உண்டா?


…அமைதி நிலவியது அங்கே... …உறைக்குள் செருகிவிட்டு …வழியே நடந்தார் டெக்ஸ்
சில நிமிடங்களுக்குப் பின் -
முடிந்து விட்டது... விசாரப்பட தேவையில்லை!
வில்லர்... துப்பாக்கி முழக்கம் கேட்டதே!
…பர் பில் ஆன்டர்ஸனின் மரணத்திற்கு பழி வாங்க உறுதி பூண்ட டெக்ஸ் ''எல்மோரோ'' …ழைக்கப்பட்ட கயவர் கும்பலின் தலைவன் யார் என்று அறியும் முயற்சியில் இறங்கினார்..
…கிரேன் …பவனை …யுமா உங் …க்கு...?
ஓ... தெரியுமே!
சூதாடுவதையே தொழிலாகக் கொண்டவன்... சட்டென்று குறி வைத்துச் சுடுவதில் வல்லவன்... அவனை மிஞ்சியவர்கள் இங்கே எவருமிலர்...
ஓகோ...!
…சொல்வது நிஜம்...! ஆங் …டக் கடவுளே... அங்கே அவன்தானா....?
ஆமாம்... …னே தான்!
அவனுக்கு மலர் வளையம் வைக்க அவனுடைய தோழர்கள் காசு வசூலித்துக் கொண்டு அலைகிறார்கள். என்று நினைக்கிறேன்
கிரேனை முந்திக் கொண்டு நீங்கள் சுட்டுவிட்டீர்களா! எனக்கு பிரமிப்பு அடங்கவே யில்லை!


அவன் உங்களுக்கு வேண்டப்பட்டவனில்லையே?
சத்தியமாக இல்லை!
அவன் ஒருதொழில் முறை சூதாடி...! எல்லையோர நகரம் ஒன்றில் வாழ்ந்து வந்தான்!சில காரணங்களுக்காக அவனை சகித்துக் கொண்டு சும்மா இருக்க வேண்டியிருந்தது
ஆமாம்...! இன்னொரு காரணம் - அவன் வெளிப்படையாக சட்டத்தை மீறியதேயில்லை... முறையாக சூதாடுவானே தவிர யாரையும் இதுவரை ஏமாற்றியதில்லை!
சரி... இனி வேறு ஏதாவது பேசுவோம்!
RESTAURAN
அதே சமயம் -
?
கிரேனுக்கு சற்று முன் வந்தது இந்தக் கடிதம்
கிரேன் செத்துவிட்டான் -யாரும் சொல்லவில்லையா?
அப்படியா... ஸாரி!
கொடுமை!
இருக்கலாம்!
ஆமாம்... உங்களுக்கு இது தெரிய வேண்டும் தான்! இக்கடிதம் உரிய நேரத்தில் கிரேனை வந்தடைந்திருந்தால் இப்போதும் அவன் நம்மிடையே உயிரோடு இருந்திருப்பான்
ஹே...!
அரசுப் பணியில் இல்லை.
திறமையை நான் அறிவே
அவனையும் நான்
அறிவேன்...
ஆபத்தானவன்.


சைத்தான்!
இதற்கிடையே
BIG HORN
அவன் வந்திருந் தாலும் இதுதான் நடந்திருக்கும்!
எரிமலையாகக் குமுறுவான் -அதில் சந்தேகமா உனக்கு?
சரி... உள்ளே போவோம் -சைத்தான் தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்!
?
ருபுஸ்... நலம்தானா? அனை வருக்கும் நல்வரவு!
கிரேனை எங்கே காணோம்?
ஏன்... என்ன ஆயிற்று?
செத்துவிட்டான்! ஒரு ரேஞ்சரோடு மோதினான்.. தப்பாகி விட்டது
என்ன... சுடுவதில் அவனை மிஞ்சி ஒருவனா?


கிரேனின் ஆன்மா சாந்தியடைய எல்லோரும் மதுபருக வாருங்கள் தோழர்களே...
யார் அந்த ரேஞ்சர்?
வில்லர் என்று பெயராம்!
நான் கேள்விப் பட்டதே யில்லையே!
இனி நிறைய கேள்விப்படுவாய்
அந்த ராட்சஸன் வில்லர் பில் ஆண்டர்ஸனின் இடத்தில் இப்போது இருந்துகொண்டு நமக்கு தீராத தலைவலியாகியிருக்கிறான்...
நடந்ததை வந்தவர்களுக்கு விபரமாக எடுத்துரைத்தான் மார்ட்...
!
பலியானோர் பட்டியலில் இப்போது கிரேனின் பெயரும் சேர்ந்து விட்டது...
சே...!
கிரேன் இப்போது உயிரோடு இல்லை - எனவே, பணத்தை நீங்கள்...
பணமா..? எங்களிடம் ஏது...மார்ட்?
கால் நடைகளை விற்று பணமாக்கி யதை அடுத்து அவர்களுக்கு ஏற்பட்ட விபரீத அனுபவத்தை எடுத்துரைத் தான் ருபுஸ்...
கெட்டது போ... விஷயம் எல்மோரோ காதை எட்டியதும் எரிமலையாகிவிடுவான்!
பதற



ாம் எல்லோரும் ஒரு அணியாகத் ரண்டு அந்த சனிப் பயல் வில்லரை ழித்துக் கட்டி விட்டோமேயானால் நடந்தவைகளை எல்மோரோ மன்னித்துவிடக் கூடும்
வாஸ்தவமானபேச்சு! எப்படியேனும் நாம் அந்த வில்லரை தீர்த்துக் கட்டியாக வேண்டும்
இரவில் ஒரு மோதல்!
இந்த தீர்மானத்திற்கு வந்துவிட்டபிறகு நொடிப் பொழுதையும் நாம் வீணடிக்கக்கூடாது. நகரைவிட்டு அவன் எந்த வினாடியிலும் புறப்பட்டு விடலாம்... எனவே -
உடனடியாக கிளம்புவோம் -புறப்படுங்கள்!
ரு குழுக்களாக பிரிந்து லாரெடோவில் உள்ள னைத்து சிற்றுண்டிச் சாலைகளிலும், மதுபானக் டைகளிலும் தேடுவோம். நான் ஒரு குழுவை அழைத்துப் போகிறேன். பில் இன்னொரு குழுவோடு போகட்டும்
இதற்கிடையே
மீண்டும் புத்துணர்ச்சி பெற்று விட்டேன்...
பின்னே இருக்காதா - இவ்வளவையும் முழுங்கியான பிறகு!
நேற்றிரவிலிருந்து நான் ாலை பட்டினி என்பதை மறந்து விடாதீர்கள்!
வயிற்றில் துளி இடம் காலி இருக்காதே?
ஸார்... ஆப்பிள் அவியல் இங்கே ஸ்பெஷல்
இருக் கட்டுமே...
ம்ம்...


பெண்ணே... போய் எடுத்து வா -பக்குவமாக இருக்கட்டும்!
இதுமாதிரி வேறெங்கும் சாப்பிட்டிருக்க மாட்டீர்கள் ஸார்!
இதற்கிடையே
இருக்கிறானா?
இல்லை... அடுத்த ஹோட்டலில் தேடிப் பார்ப்போம்!
PARIS RESTAURANT
இந்தாருங்கள்... இதை பில்லில் சேர்க்க வேண்டாம் என்று பாஸ் சொல்லிவிட்டார்
ஏன் அப்படி - டோலி?
உங்களுடைய நண்பருக்கு முதலாளியின் அன்பளிப்பாம்
ம்ம்... புரிகிறது!
என்ன புரிந்தது உங்களுக்கு?
கணிப்பது சுலபம்!
ஹோட்டல் முதலாளி ஒரு பெரிய போக்க பிளேயர்... காலமான கிரேனுக்கு ஆட்டத்தில் நிறைய கடன் பட்டிருக்கலாம்!



இங்கே இருக்கிறான்
-யாராவது ஓடிப் போய்
வர்களையும் அழைத்து
வாருங்கள்!
எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்...! நாம் அவியலை இப்போது சுவைக்கத் தொடங்கலாமா?
டெக்ஸ் குனிந்தார்...
ஆகா... என்ன ஒரு அருமையான மணம்!
ந்த ரசனை அவரை
ப்பாற்றியது
டுமீல்!
டுமீல்! டுமீல்!
விபரீதம்!
டுமீல்!
வேண்டாம்.. வந்து விடு
டுமீல்!
ரோட்டுப் பக்கம் இருக்கிற வாசலுக்குப் போ... அவன் வெளியேறி ஓடிவிட அனுமதிக்கலாகாது


டுமீல்!
டுமீல்!
நான் இங்கே இருக்கிறேன்... மற்ற விளக்குகளையும் அணைக்க ஒத்தாசை செய்யுங்கள்... சீக்கிரம்!
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
வில்லர் உயிரோடு தப்பவே முடியாது
வேறு வாசல் உண்டா?
சமையலறையிலிருந்தும் வெளியேறலாம்!
ஆனால் அங்கேயும் காத்துக் கொண்டு நிற்பார்கள் என்பது நிச்சயம்!



டுமீல்
வில்லர்...
ரியாஸ்தயாக வா
வெளியே!
கதவருகே சலசலப்பை ஏற்படுத்தி நான்
அவர்களுடைய கவனத்தை திசை திருப்பி
வைக்கிறேன்... ஜன்னல் வழியாக நீங்கள்
உங்களுடைய கைவரிசையை காட்டுங்கள்
சரி...
கதவை நெருங்கி அருகே கிடந்த மேஜையை
தூக்கி வெளியே எறிந்தார் டெக்ஸ்
டுமீல்! டுமீல்!
டுமீல் டுமீல்!
டுமீல்!
ஜன்னலைக் கவனி!
டுமீல்!
ஆ
டுமீல்!
டுமீல்!
சண்டாளன்
ஆ
டுமீல்!


டுமீல்!
தம்பிகளா... நான் இங்கே இருக்கிறேன்
டுமீல்! டுமீல்!
சைத்தானே... நாசமாகப் போக
டுமீல்
இனி
இங்கே நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம் - வில்லர் மறுபக்கம் இருக்கிறான்
மூடு வாயை... பின்புற வாசல் மீது கண்ணாக இருக்கச் சொல்லி தமக்கு உத்தரவு!
மண்ணாங்கட்டி...! நாம் உடனடியாக...
பேசாதே!



என்ன சப்தம்?
டுமீல்!
கொல்லைப் புரம்
வனோ இருக்கிறான்
வில்லர்! எங்கே
இருக்கிறீர்கள்
ஜாக்கிரதை... அதோ
ரேஞ்சர்
நாசமாகப் போக...
டுமீல்!
டுமீல்!
ஐயோ... அம்மா...
டுமீல்!
டுமீல்!
வில்லர்... அதிகமாக
உன்னை
வெளிக்காட்டிக்
கொள்ளாதே
விடாதே...!
டுமீல்!
டுமீல்!
தீர்த்துக் கட்டுவோம்
அவனை!
டுமீல்!
டுமீல்!


ஆஆ...
தோட்டா காலி!
த்ரிங்!
வில்லர்!
பிரச்சனை தீர்ந்து விட்டது... ஷெரீப்?
UH!
இரண்டு பேர் மிஞ்சியிருந்தா
ஆனால் தோட்டா தீர்ந்து வி
என் துப்பாக்கியில்... தப்பியே
போய்விட்டார்கள்
தப்பியோட நீ முயன்றால் தயங்காது சுட்டுவிடுவேன்
இவனை உங்களுக்குத் தெரியுமா?
இல்லை... இங்கே
இவன் புது முகம்!
இதுமாதிரி சம்பவங்கள் தினசரி இங்கே லாரெடோவில் வாடிக்கையா... ஷெரீப்?
அப்படியெல்லாம் இல்லை!
நான் ஷெரீப்பாக பதவி ஏற்ற பிறகு இவ்
பெரிய அமளி நடப்பது இதுவே முதல்


சேச்சே... அதெப்படி உன்னை பழி சொல்ல முடியும்? ஆனால் ஒன்று நீ இங்கே வந்த பிறகு நகரில் ஜனத்தொகை வேகமாக குறைந்து வருகிறது!
ம்ம்
பழிக்குப் பழி!
இதற்கிடையே - துப்பாக்கிச் சூட்டில் உயிர்தப்பிய பில்லும் இன்னொரு போக்கிரியும் சந்து பொந்துகளில் நுழைந்து ஓடி ஒரு லாயத்தை வந்தடைந்தனர்...
பிரிக்... பிரிக் -கதவைத் திற
டொக் டொக்
பிரிக்
கத்தாதே... இதோ வருகிறேன்
ஹே... என்ன ஆயிற்று?
கேள்வி கேட்க இதுவல்ல நேரம் -விலகி வழியை விடு போய் என் குதிரைக்கு சேணம் இடு!
பிரச்சனையா?
ஆமாம்... பெரிய அளவில்!
பட் உபயோகத்திற்கு இன்னொரு குதிரையும் வேண்டும்... அவன் மதுபானக்கடை முன்னால் இருக்கிறான்... நாங்கள் ஒதுங்கிப் போய்விட வேண்டும்


பிரச்சனை என்னவென்று தான் தெரிந்து கொள்ளலாமா?
ரேஞ்சரோடு மோதினோம்... அவன் கிரேனை கொன்று விட்டான்
ஒல்...! உங்களுக்கு புத்தி
போய்விட்டதா ....? அவனை
விட முடியும் என்று எப்படி
எங்களோடு மார்ட், ருபுஸ், ஸ்டீவ் ஜெஸ், ஹேல்ஸ், பின் எல்லோரும் இருந்தார்கள்...
ஓ...
அதாவது -
நானும் பட்டும்
உயிர் பிழைக்க
த்சொ... அவர்கள் எல்லோரும் சமர்த்தர்களாயிற்றே!
ஆமாம்... இதற்கு பழிவாங்காமல் நாங்கள் ஓயப்போவதில்லை
சரி... புறப்படுங்கள்... நம் ஆட்களிடம் ஏதாவது சொல்ல வேண்டுமா?
ஆமாம்.
பட்டும் நானும் பழைய மடாலயத்திற்கு போகிறோம் என்று ராடிடம் சொல்... செய்தி ஏதேனும் இருந்தால் ஆட்கள் மூலம் எங்களுக்கு தெரிவிக்கச் சொல்...
ஓ.கே.
மறு வினாடி அவ்விரு
இருளினுள் மறைந்து


மறுநாள் காலை -
ஹே... குட்மார்னிங் வில்லர்! நன்றாக தூங்கினாயா?
சூப்பர் தூக்கம்!
செய்தி ஏதுமில்லை! கைதிகளை விடுவிக்க யாரும் அத்துமீறி முயற்சிக்க வில்லை என்று என்னுடைய உதவியாள் சொல்லிச் சென்றான்...
எதிர்பார்த்ததுதான்! நேற்று நடந்த சம்பவத்திற்குப் பிறகு யாருக்குத்தான் துணிச்சல் வரும்?
ம்ம்...
நான் அப்படி நினைக்கவில்லை! இரண்டு நாட்களாக அதிர்ஷ்டம் என் பங்கில் இருந்ததால் எல்மோராவின் ஆட்களை முறியடித்து விட்டேன்...
ஆனால் அந்த மர்ம ஆசாமி அப்படியே விஷயத்தை ஆறப் போட்டுவிட்டு ஓய்ந்து விடமாட்டான்...
...அந்த தவறை அவன் செய்தால், தலைவன் என்கிற மதிப்பை இழந்து போவான்... அவனுடைய கும்பல் சூரிய ஒளியில் கரையும் பனிபோல் உருக்குலைந்து போய்விடும்...
எனவே, உன்னை தீர்த்துக்கட்ட முழு முயற்சி செய்வான்!
அத்தோடு, உங்களிடம் கைதிகளாக உள்ள நபர்களையும் விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடுவான்
ம்ம்...
அந்த முயற்சியை முறியடிக்க நீ ஏன் எனக்கு ஒத்தாசை செய்யக் கூடாது?
ஸாரி... ஷெரீப்



கோல்டன் ஸ்டாரை அது முன்பிருந்த நிலைமைக்கு கொண்டு வர நான் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறேன்!
ஹூம்... என் துரதிர்ஷ்டம்!
நான் ஒரு யோசனை சொல்லட்டுமா?
லாரெடோவை விட்டு இரவில் புறப்படும் இரயில் ஏதேனும் உண்டா?
ஓ... 2.20க்கு ஒன்று கார்பஸுக்கும் மற்றொன்று 5.00 க்கு ஸான் அன்டோனியோவுக்கும் புறப்படுகின்றன...
5.00 மணி இரயிலில் அந்தக் கைதிகளை ஏற்றி வெப்பில் கொண்டு போய் இறக்கிவிடுங்கள். வெப்பின் ஷெரீப் ஆன்டர்ஸனின் நண்பர்! விசாரணை தொடங்கும் வரை கயவர் கும்பலை வசம் வைத்திருக்க நிச்சயம் சம்மதிப்பார்!
அருமையான யோசனை! வெப்பின் ஷெரீப் ட்ரஸ்காட் எனக்கும் நன்கு தெரிந்தவர்தான்!
நல்லதாகப் போயிற்று! நிலைமையை எடுத்துக் கூறினீர்கள் என்றால் நிச்சயம் உதவி செய்வார்
இந்த தீர்மானத்தை யாரிடமும் - உங்களுடைய உதவியாளர்களிடம் சொல்லிவிடாதீர்கள்... இல்லையே
எனக்குத் தெரியாதா என்ன... ஸ்டேஷனுக்கு அழைத்துப் போகும் போது தான் தெரிந்து கொள்வார்கள்!
...நீ..? கோல்டன் ஸ்டாருக்கு திரும்புவது ஆபத்தோடு விளையாடுவதற்கு ஒப்பாகுமே!
ஆபத்துத்தான்... அதற்காக?
வீணாக என்னைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிராதீர்கள்... ஒரு சில தினங்கள் தான் தனியனாக இருப்பேன்... அப்புறம் என் தோழர்கள் வந்து சேர்ந்து விடுவார்கள்...
நல்லது!


அரைமணி நேரம் கழித்து
மிஸ்டர் வில்லர்!
டிம்!
உன்னுடைய தோள் காயம் எப்படி இருக்கிறது?
ஆறி வருகிறது ஸார்...! அதிகமாக தொல்லை இல்லை!
நல்லது! கேட்க சந்தோஷமாக இருக்கிறது...! சரி செலவுக்கு என்ன செய்கிறாய்?
...ம்ம்...
உன் ஊதியத்தை ஆண்டர்ஸன்னிடமிருந்து பெற்றுக் கொண்டியா என்று அன்றைக்கு கேட்க மறந்து விட்டேன்... சிகிச்சைக்கு பணம் தேவைப்படுமே... அத்தோடு, காயம் ஆறும் வரை நீ எங்கேயும் பணி செய்யவும் முடியாதே...!
வேண்டாம்... ஒரு டாலர் கூட வேண்டாம்!
மிஸ்டர் ஆண்டர்ஸன்னிடமிருந்து சென்ற மாதத்திற்குரிய சம்பளத்தை நான் பெற்றுக் கொள்ளவில்லை என்பது என்னவோ உண்மைதான்... ஆனால் அதைப் பெற எனக்கு அருகதை இல்லை!
என் உதவி உங்களுக்கு தேவைப்படும் என்று தெரிந்தும் உங்களை தவிக்க விட்டுவிட்டுப் போய்விட்டேன்.
உளறாதே... தோளில் தோட்டா பாய்ந்த காயத்தோடு எவ்வகையில் நீ எனக்கு உதவியிருக்க முடியும்? இந்தா... உனக்குச் சேரவேண்டிய பணம்
கொஞ்சம் பொறுங்கள்...
நீங்கள் என்னை மீண்டும் பண்ணைக்கு அழைத்துச் செல்வதானால் மட்டுமே நான் இந்தப் பணத்தை பெற்றுக் கொள்வேன்... பூரண குணமடையாத போதிலும் ஏதாவது ஒருவகையில் நான் உங்களுக்கு அங்கே ஒத்தாசையாக இருக்க முடியும்...
அதில் உள்ள ஆபத்து தெரியு மில்லையா?



நன்றாகவே தெரியும் ஆனால் நகரில் நீங்கள் நிகழ்த்திய சாதனைகளைக்கேட்ட பின் உங்களோடு இருந்தால் எனக்கு சாவே கிடையாது என்பது புரிந்து விட்டது!
ஹே... அப்படியெல்லாம் நம்பிவிடாதே!
ஓ.கே... உன் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறேன்... ஒரு நபர் துணைக்கு இருப்பது நல்லதுதான்! கிளம்பு!
ஒரு மணி நேரம் கழித்து
தோட்டா, வெடி மருந்து வாங்கினீர்கள்... சரி - இந்த முள் கம்பிச் சுருள் எதற்கு?
காரணம் விளங்க வில்லையா உனக்கு?
விளங்கவில்லை...! பண்ணையில்தான் ஒரு மாடு கூட இல்லையே!
பொறுமையாக சீக்கிரமே கொள்வாய்
அதே சமயம் - பாழடைந்த ஸ்பானிஷ் மடாலயத்தில்...
'ச்சே... இன்னொரு சமிக்ஞை அனுப்புவோம்!
அலுத்துக் கொள்ளாதே பட்... இன்னும் கொஞ்சநேரம் காத்திருப்போம்!
ஆங்... அதோ - பதில் சமிக்ஞை!
எல்மோரே எப்போதும்
அந்த சமிக்ஞையைத்தான் எதிர்பார்த்து நான் நாள் முழுக்க காத்திருந்தேன்
கால்நடை மந்தையை வாங்கிப் போக ரமோன் ஒருவேளை நேரத்தைக் கடந்து வந்து கூடும்!


அல்லது, ருபுஸும் மற்றவர்களும் வெற்றியை கொண்டாடுவதில் லாரெடோவில் நேரத்தை வீணடித்திருக்க வேண்டும்!
தாமதத்திற்கு காரணம் எதுவாயினும் அவர்கள் ஒரு வழியாக பணத்தை கொண்டு வந்து என்னிடம் ஒப்ப டைத்தால் சரி...!
இருபது நிமிடங்களுக்குப் பின் நிலவறை கதவு ஒன்றினை திறந்து கொண்டு வெளித் தோன்றினான் எல்மோரோ!
டங்! டங்!
வெளியேறி வந்து அங்கிருந்த மணியை இருமுறை அடித்தான்
டங் டங்!
வந்து விட்டார்...
என்ன...? இருவர் மட்டுமே வருகிறார்கள்!
ருபுஸ் எங்கே...? மற்றவர்கள் என்ன ஆனார்கள்?
அவ்விரு போக்கிரி களும் தயங்கித் தயங்கி என்ன நடந்தது என்று விவரித் தார்கள்.
நிஜம் தானா நீங்கள் சொல்வது?



திடீரென்று என்ன ஆயிற்று உங்களுக்கு..? எப்படி எல்லோரும் ஒரே நாளில் கையாலாகாத உதவாக்கரைகளாகிப் போனீர்கள்!
ஐயாயிரம் டாலர்கள் பறிபோயிற்று... க்ரோடரின் கும்பல் அடியோடு அழிந்துவிட்டது... கிரேன் கொல்லப்பட்டிருக்கிறான்... அத்தோடு, ஆறு நபர்கள் இப்போது ஜெயிலுக்குள்
இவை அத்தனைக்கும் காரணம் ஒரே ஒரு நபர் என்று சொல்லி அதை நான் நம்ப வேண்டும் என்கிறீர்கள்
பொய் யில்லை... எல்மோரோ!
அப்படியானால் உங்களுடைய வீரத்தை பற்றி நான் இத்தனை நா தப்புக் கணக்குப் போட்டிருந் திருக்கிறேன்
அப்படி யில்லை... ஒ அதிசயம் மாதிரி நடந்து விட்டது
கிரேன் ஒரு அசகாய சூரன்தான்... ஆனாலும்
மூடு வாயை!
கிரேனின் சாதுரியத்தை புகழ்ந்து உரை நிகழ்த்துவதானால் அவனுடைய சமாதிக்குப் போங்கள்... அதற்கு இடமோ தருணமோ இதுவல்ல...
நான் இப்போது சொல்லப்போவதை கவனமாக கேட்டு, அதன்படி செய்யுங்கள்... அதிகப் பிரசங்கித்தனமாக வேறெதையும் செய்ய முற்படாதீர்கள்...
அதே சமயம் கோல்டன் ஸ்டார் பண்ணை அரு
என்ன பா கிறீர்கள்?
நிறுத்து வண்டி



ஏதோ ஒரு புது விபரீதம் உருப்பெற்று வருகிற மாதிரி தோன்றுகிறது...
?
சிவப்புப் படை!
எதைப் பார்த்துவிட்டு இப்படிச் சொல்கிறீர்கள்!
பிறகு சொல்கிறேன்... முதலில் வண்டியின் பின்னால் பதுங்கு!
யெஸ்... சந்தேகமேயில்லை!
ஸார்... எனக்கு சஸ்பென்ஸ் தாங்கவில்லை...
செவ்விந்தியர்கள்!
ஹே... செவ்விந்தியர்களா... அவர்கள் எப்படி இந்தப் பகுதியில்
உன் சந்தேகம் நியாயமானதுதான்... ஆனால் என் யூகம் சரியே!
அதிகமில்லை... சுமார் ஒரு டஜன் பேர்... இங்கிருந்து நேராக பண்ணை வீட்டுக்குப் போயிருக்கிறார்கள்
மிஸ்டர் வில்லர்...


அங்கே பாருங்கள்!
ஓ...!
நாம் ஆபத்தில் சிக்கிக் கொண்டுவிட்டோம்!
உண்மை அதுவல்ல டிம்...
டிம் ஏதும் விளங்காமல் குழம்பி நிற்கையில், மேட்டுப் பகுதியை நோக்கி நின்று தன் ரைபிளை உயர்த்திக் காட்டினார்.
வோ... 'இரவுக் கழுகு'!
வாருங்கள்... போய் வரவேற்போம்!
பயமாக இருக்கிறது ஸார்... அந்த செவ்விந்தியர்கள் நம் தலையை கொய்துவிட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்!
என்னை நம்பு டிம்... அசம்பாவிதமாக இங்கே எதுவுமே நடந்துவிடாது!


அதையடுத்து
வோ...! இரவுக் கழுகை சந்தித்ததில் யெல்லோ ஹேண்டும் அவனது கமான்சே க்களும் பெரு மகிழ்ச்சியடை கிறார்கள்
வோ...! உங்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.
நவஜோக்களின் மாந்திரீகரான ம்ான்யுகாவிடமிருந்து எங்களுடைய மாந்திரீகர் ப்யோகனுக்கு ஒரு செய்தி வந்தது.
...அதன்படி, என் வீரர்களில் திறமைசாலிகள் ஐவரோடு நீங்கள் இருக்குமிடம் தேடி போய்ச் சேருமாறு எனக்கு உத்தரவிடப்பட்டது...
வோ...! ஒரு மோதலுக்கு நான் திட்டமிட்டிருக்கிறேன்
அதில் நாங்கள் உங்களுக்கு துணைபுரிவதில் பெருமை யடைவோம்!
வேறு ஏதாவது செய்தி கொண்டு வந்திருக்கிறாயா?
வோ...! டைகர் ஜாக்கும், நவம்ஜா வீரர் குழு ஒன்றும் உங்களை சந்திக்க வந்து கொண்டிருக்கிறார்களாம்...
நல்லது!
ரியோ கிராண்ட் நோக்கி செல்லவிருக்கிறேன்...: நீங்களும் கூட வரலாமில்லையா... உன்னிடம் தெரிவிக்க வேண்டிய செய்தி நிறைய இருக்கிறது!
வோ...!
ஸார்... இதெல்லாம் என்ன?
பிறகு விளக்குகிறேன்... இப்போது நீ வண்டியிலேறி எங்களை பின் தொடர்ந்து வா!
இந்த ஆள் செவ்விந்தியர்களிடையே செல்வாக்கு மிக்க ஆசாமி போலிருக்கிறது.


ரியோ கிராண்ட் நோக்கி போய்க் கொண்டிருக் கையில் இங்கே நடந்தது அனைத் தையும் யெல்லோ ஹேண்டுக்கு
டெக்ஸ் விவரமாக எடுத்துரைத் தார். எல்மோரேரா கும்பலை வேரறுக்க தான் உறுதி பூண்டிருப்ப தையும் சொன்னார்.
வோ... யெல்லோ ஹேண்ட் இரவுக் கழுகாருக்கு ஒத்தாசை செய்வான்!
நன்றி...!
மூன்று மணி நேர பயண முடிவில் ஆற்றின் ஆழமில்லாத பகுதியை சென்றடைந்தது அந்தக் குழு
அப்பிராந்தியத்தை தீர்க்கமாக ஆராய்ந்த பின்னர் வண்டியிலிருந்த முள் கம்பி சுருள்களை கீழே இறக்கப் பணித்தார் டெக்ஸ்...
டெக்ஸின் உத்தரவுப்படி இடம்விட்டு வரிசையாக மர தழைக்களை நட்டார்கள் செவ்விந்தியர்கள்
பின்னர் முள் கம்பிகளை வேலியாக பிணைத்தார்கள்.
உங்களுடைய நோக்கம் இப்போது விளங்குகிறது ஸார்
நீயும் தெரிந்து கொண்டாய் அல்லவா?
ஆண்டர்ஸனுக்கு எமனாக அமைந்த அம்சம் ஆற்றில் இங்கே ஆழமற்று இருப்பதுதான்...



வருடம் முழுக்க ஆற்றில் ஆழமே இல்லாமலிருப்பது இப்பகுதியில் மட்டுமே... களவாடிய கால்நடைகளை மெக்ஸிகோவுக்கு ஓட்டிச் செல்ல எல்மோரோ கும்பலுக்கு இந்தப் பாதை வசதியாக இருந்தது.
அவர்களுடைய அடுத்த முயற்சியின் போது இப்பாதையை பயன்படுத்த முடியாது போகும்போது என்ன செய்வார்கள் பார்ப்போம்!
வெறியாட்டம் ஆரம்பமா கலாம்!
ஆமாம்... அவர்கள் கோதிப் படையக் கூடும்...
தொடர்ந்து கண்காணிக்க ஏற்பாடு செய்வீர்களோ?
ஆமாம்... முறை வைத்து கண்காணிக்க குழுக்களை அமைக்கப் போகிறேன். ஆனால் காயம் காரணமாக வின்செஸ்டரை கையாள முடியாத உனக்கு அதில் பங்கு இராது
என்னை ஓரம் கட்டுவது நியாய மில்லை!
இல்லை... இந்தப் பண்ணையில் நீயும் ஒரு அங்கத்தினர்தான்... உளவறியும் பணியை எனக்காக நீ செய்ய வேண்டும்!
வண்டியை லாரெடோவுக்கு ஓட்டிச் செல்... அங்கே கண்ணையும், காதையும் கூர்மையாக வைத்துக் கொண்டிரு...
எல்லா மதுபான கடைகளுக்கும் தவறாது போ... ஊற்றிக் கொண்டு தடுமாறாமல், நகரில் ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கவனி...
புரிகிறது!
கிரேனுடைய நண்பர்களின் அடுத்த நடவடிக்கை என்னவென்று உங்களுக்குத் தெரிய வேண்டும் - சரிதானே!
கரெக்ட்!
இம்மாதிரி தகவல் சேகரிக்க ஏற்ற இடம் பிக் ஹார்ன் ஹோட்டல் தான்!
ரௌடி கும்பல்கள் சந்திப்பதும், திட்டமிடுவதும் அங்கே தான்!
குட்!


அதைப்பற்றி எல்லாம் நீயே தீர்மானத்துக் கொள்... ஆனால் நீ பூரண குணம் அடையும் வரை யாரோடும் எந்த வம்பும் வைத்துக் கொள்ளாதே!
ஆலோசனைக்கு நன்றி!
அதே சமயம் -
ஓ.கே. பட்... நாம் இங்கே பிரிகிறோம்... ஹும்... அதிர்ஷ்டக் காரன் நீ... உன் பணி சுலபமானது
சிறைச்சாலையை தாக்கும் போது அந்த ரேஞ்சர் அக்கம் பக்கத்தில் இருந்தால் உனக்கு தலைவலிதான்...
குட்லக் பில்!
உனக்கும் தான் பட்.... ந துரிதமாக செயல்பட்டா மீண்டும் நியூவோ லாரெடோவில் சந்தித்து கொள்ளலாம்
விடை பெற்றுக் கொள்கிறே பில்...
சில மணி நேரத்திற்குப் பின் -
BIG HORN
ஹலோ... பில் உயிரோடு உன்னை திரும்ப பார்ப்பேன் என்று நினைக்கவேயில்லை
சைத்தானே
அந்த ரேஞ்சர் இங்கேதான் இருக்கிறானா?
இல்லை... முள் கம்பி சுருள்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு கிளம்பிப் போவதை பார்த்தோம்!



முன் கம்பிகளா? ...ம்ம்... எதற்காக அதைக் கொண்டு போகிறான்?
ஒரு வேளை புல் வெளிக்கு வேலியிடலாம்!
ஆனால், கோல்டன் ஸ்டாரில் ஒரு சிறு கன்றுக்குட்டி கூட மிச்சமில்லையே!
ஒரு வேளை புதிதாக கால்நடைகளை வாங்க உத்தேசித்திருக்கலாம்
அப்படி வாங்கினால் நமக்கு அது நல்ல சேதிதான்!
ஹலோ... பில்!
ஹலோ ராட்... நலம்தானா?
நல்ல நலம்...
அழுத்தக்காரன் நீ... இல்லாவிடில் இங்கே திரும்பி வர துணிந்திருப்பாயா...?
ஏன் என்னை இங்கே தேடுகிறார்களா?
இல்லை... ஷெரீப் காலையில் இங்கே வந்திருந்தார்... நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார். ஆனால் உன் பெயரை பிரஸ்தாபிக்கவில்லை!
BIG HORN
ரொம்பவும் தான் அலட்டிக் கொள்கிறார்...
நியாயம் தானே...
... சமீபத்திய நடப்புகளுக்குப் பிறகு அவர் எப்படி சும்மாயிருக்க முடியும்?
அவருக்கு ஒரு பாடம் கற்பிக்கப் போகிறேன் - இன்றிரவே ....
நிஜமாகவா?


வா... ஒதுக்குப் புறமாக போய் மிச்சத்தை பேசுவோம்
கிரேனின் அறைக்கு போய்விடலாம்.
திரும்பி வருவேன் தோழர்களே... வேண்டியதை மட்டும் குடியுங்கள் - செலவு என்னுடையது
உனக்கு தாராள மனது...
அதையடுத்து மர்ம ஆசாமி எல்மோராவால் தீர்மானிக்கப் பட்ட விஷயம் பற்றி பில் எடுத்துரைத் தான்
எனவே, இம்முறை காரியத்தில் கோட்டைவிட்டுவிடக் கூடாது என்பதை உறுதிசெய்ய ஒலிவாரெஸ் ஆட்களுக்கு தகவல் தெரிவிக்க பட் போயிருக்கிறான்...
இன்றிரவே அவர்கள் இன்னொரு பண்ணையை சூறையாடி கால்நடைகளை கவர்ந்து வாடிக்கையான இடத்திற்கு வந்து சேருவார்கள்...
அதே வேளையில் நானும், நியூவோ லாரெடோ பயல்களும் சிறைச்சாலையை தாக்கி க்ரோடரையும் மற்றவர்களையும் விடுவிப்போம்...
ம்ம்... பிரளயமே நடக்கப் போகிற தென்று சொல்!
நியுவோ லாரெடோவுக்கு யாரையாவது அனுப்பி வைக்கட்டுமா?
அவசியமில்லை... எல்லாவற்றையும் நேரடியாக நானே கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது எல்மோரோவின் விருப்பம்... நீ செய்ய வேண்டியதெல்லாம் அஸ்தமனத்திற்கு அரைமணி கழித்து நகருக்கு வெளியே பெரிதாக அமளி ஏற்படுத்த வேண்டும்...
புரிகிறது!
நாலைந்து பேரை அனுப்பி வைக்கிறேன்... அவர்கள் செய்யும் கலாட்டாவில் ஊர் மொத்தமும் அங்கே போய் சேருவது உறுதி...
இந்தா... செலவுக்கு வைத்துக் கொள்!



அன்று மாலை அஸ்தமனம் ஆனபோது, பில்லும் பிஸ்டல் ஏந்திய வீரர்கள் இருபது பேரும் லாரெடோவுக்கு வடக்கே ஒரு மைல் தொலைவில் காத்துக் கிடந்தார்கள்!
அவசரப் படாதே பெனிப்!
சூரியன் அஸ்தமித்து விட்டதே... இன்னும் ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறோம்?
நகரில் ரகளை!
இதற்கிடையே லாரெடோவில் -
ஜன்னலை விட்டு விலகியே இருங்கள் ஷெரீப்... நேற்று இருந்த அதிர்ஷ்டம் இன்றைக்கும் தொடரும் என்பதற்கில்லை.
அவர்களுடைய இலக்கு நானில்லை...
...வில்லர்தான் - எனவே...
?
கதவை தாழிட்டுக் கொள்! யாரையும் உள்ளே விடாதே
ஓ.கே... ஸார்
இதற்காகத்தான் காத்திருந்தேன்
டுமீல்
டுமீல்
டுமீல்



எல்லோரும் குதிரையிலேறி கிளம்புங்கள்
புறப்படுங்கள்
ஷெரீப்...! அங்கேகுடிகாரப் பய
ஸ்வீடின் வீட்டின் மீது சரிமாரிய
சுடுகிறான்கள்.
நீசர்க
ஸ்வீடி... வா வெளியே - மரியாதையாக நீயாகவே வருகிறாயா... இல்லை -
டுமீல்! டுமீல்
குடிகாரப் பயல்கள்... என்ன திமிர் -
வேண்டாம்... வெளியே போகாதீர்கள்
அவன் வெளியே வரவேமாட்டான்... பாரேன்!
அடிமுட்டாளாக இருந்தால்தான் அந்த தப்பை செய்வான்
டுமீல்
நிறுத்துங்கள்! துப்பாக்கியை தூர எறியுங்கள்... இல்லையேல் நாயைப் போல சுடுவேன்!
ஷெரீப்...!
வாருங்கள் - ஓடி ஒளிந்து கொள்வோம்
கதையை முடித்து விட்டோமா?
இல்லை... அது அவசியமும் இல்லை. - வெறுமனே சலசலப்பை ஏற்படுத்த வேண்டும்... முடிந்தவரை நீடிக்க வேண்டும் என்பது தான் திட்டம்!


டுமீல்!
அதே சமயம்
டுமீல்!டுமீல்!
ப்பாக்கி முழக்கம்
ப்போது அதிகமாக
கேட்கிறதே
தெரு முனைகளில் காத்து நில்லுங்கள்
SHERIF
ஷெரீப் இப்போது இங்கே
இருந்திருக்கலாம்!
டுமீல்!
ஜன்னலை குறிவை!
டுமீல்! டுமீல்!



ஆவ்வ்...வ்!
கைதிகள்...
ஆ..ஆ..ஆ..
...ஓடி வாருங்கள்...
அதோ இருக்கிறான்
ஒநாய் கூட்டம் போல் எதிர்ப்பட்டவர்களை சுட்டுத் தள்ளியவாறு ஷெரீப்பின் அலுவலகத்தினுள் வெறியோடு நுழைந்தது அந்தக்


ஹைய்ய்... யா!
இந்தப் பக்கமாக வாருங்கள்!
வாசலருகே நில் - மூக்கை யார் நீட்டினாலும் சுட்டுத் தள்ளு!
டுமீல்!
சாவிக் கொத்து... இதோ இங்கே இருக்கிறது!
டயே, சரமாரியான துப்பாக்கி தைக் கேட்டு மிரட்சியடைந்த ன் அலுவலகம் நோக்கி திரும்பி ஓடினார்...
ச் சாலையை குகிறார்கள் தில் சந்தேகமே இல்லை.
டுமீல்
அதோ... அயோக்கிய நாய்கள்
டுமீல்!
டுமீல்!
டுமீல்! டுமீல்!
அக்கிரமம்...
டுமீல்


ஏதாவது பிரச்சனையா?
தெரு முனையில் எவனோ சலசலப்பை ஏற்படுத்துகிறான்... அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை!
சரி... குதிரை
ஏறி புறப்படு
-சீக்கிரம்...!
இருக்கட்டும்
டுமீல்
டுமீல்!
நீங்கள் போங்கள்... நான் கவனித்துக் கொள்கிறேன்!
பிடியுங்கள் - ஓட்டம்!
டுமீல்
டமால்!


ஓடுங்கள்... ஓடுங்கள்
தே சமயம் ரியோகிராண்டிலிருந்து அரை மைல் தொலைவில்...
வருவது... ரட் ஆரோ..
ம்ம்...
வோ...! பெரிய மந்தை... இவ்வழியாக வந்து கொண்டிருக்கிறது
எங்கே பார்த்தாய்?
பதினைந்து நிமிட குதிரைப் பயண தொலைவில்... லோ ஹில்ஸ் அருகே
பெரிய மந்தை... பல வெள்ளையர்களும் இருந்தார்கள்
குட்...! தீயை அணைத்து விடுங்கள்
கோல்டன் ஸ்டார் பண்ணையில் யாரும் இல்லை என்கிற கணிப்பில், அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள எல்மோரோ பெரிய அளவில் திட்டமிட்டிருக்கிறான் போலும்
என்ன செய்யப் போகிறோம்?
மற்ற வீரர்களிடம் விஷயத்தைக் கூறி இங்கே அழைத்து வாருங்கள்
வோ...!



இதற்கிடையே, ஆற்றில் ஆழமில்லாத இடத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் -
வாவ்!... நாலாயிரத்துக்கு குறையாது இல்லையா ஒலிவாரெஸ்?
நிச்சயமாக!
ம்ந்தை காணாமல் போனது வரும்போது கிழவன் ட்ரெண் மாரடைப்பு வந்துவிடலா
அதைப்பற்றி நமக்கென்ன வந்தது?
மாடுகளை ஆற்றோரமாகவே ஒ போகவேண்டும்...
இன்னொருவனை அழைத்துக் கொண்டு என்னோடு வா ஒலிவாரெஸ்! ஆற்றில் ஆழமில்லாத பகுதியை நோக்கி நாம் மந்தைக்கு முன்னால் போவோம்!
ஓ.கே.
மறு-வினாடி, பட்டும், இரு மெக்ஸிகன் ஆற்றை நோக்கி விரைந்தார்கள்.
வோ... குதிரைகள்!
அந்த குள்ளநரி கும்பலுக்கு இது முன்னோடிக் குழுவாக இருக்கும்...
நெருங்கி வந்து வேலியை கண்டதும் அவர்கள் மூஞ்சி போகிற போக்கை கண்டு ரசிக்க தயாராக இருங்கள்



டங்களுக்குப் பின் -
வேலி...! எவனோட வேலை இது?
நாம் கொஞ்சமும் எதிர்பார்க்காத இடைஞ்சல்!
ளிரவு
வட்டை!
அந்த திமிர்பிடித்த ரேஞ்சரின் வேலையாகத்தானிருக்கும். ஆனால் அதிர்ஷ்டவசமாக கத்தரி கைவசம் இருக்கிறது!
இங்கே வந்து சேருமுன் வேலியை வெட்டி எறிந்து விட வேண்டும்...
சீக்கிரம்...
ஆனால் அவர்கள் குதிரைகளை விட்டு கீழே குதித்த மறு கணம்...
நில்லுங்கள் அப்படியே கைகளை உயர்த்துங்கள்!
?
?
ன்ன இது?
ரேஞ்சர்!
ஆமாம்... நான்தான்... நான் தனியனாக இல்லை என்பதை தெரிந்து கொள்ளுங்கள்... விஷமம் ஏதும் பண்ண எண்ணாதீர்கள்...


ஐயோ... கமான் சே. க்கள்!
நாசமாகப் போக!
கண்ணிமை பொழு அம்மூவரும் போடப்பட்
எ. .எங்..களை என்ன செய்யப் போகிறாய்...? இந்த செவ்விந்தியர்கள்...
மூடு வாயை!
ஒய்ந்து படுத்துக் கிடங்கள்... வந்து கொண்டி தோழர்களை எச்சரிக்க முயன்றீர்களோ-தோ உரித்து விடுவேன் ஜாக்கிரதை!
-அங்கே -
நிதானமாக ஓட்டிச் செல்லுங்கள்... ஆற்றை நெருங்கிவிட்டோம்...!
ஒலிவாரெஸுக்கு உரத்து குரல் கொடு!
நெருங்கிவிட்டார்கள்! அவர்கள் மந்தையை திருப்பி ஓட்டிச் சென்றுவிட வாய்ப்புத் தராமல் மறிக்க, உன் வீரர்களில் பாதிப் பேரை அரைவட்டமாக நிற்கச் சொல்...
வோ...!
ஹே... ஒலிவாரெஸ்!


சனியன்
களே...
நில்லுங்கள்
மறு நிமிடம் -
மாட்டிக் கொண்டு
விட்டீர்கள்...
ஆயுதங்களை தூர
எறியுங்கள்!
யாரவன்?
சூழ்ச்சி!
சுடுங்கள்!
டுமீல்!
ஓடிப் போனால்தான்
உயிர்
பிழைக்கலாம்
ஒரு பயலைக்கூட
தப்பியோட
விடக்கூடாது!
வோ...!
யாயா ஹீஈஈ...
ஐயோ...
செவ்விந்தி
யர்கள்!


துப்பாக்கி முழக்கம் கேட்டு மிரட்சியடைந்த மாடுகள் தறிகெட்டு நாலாதிசைகளிலும் ஓட்டம் பிடித்தன!
டெக்ஸும், கமான்சே க்களும் போக்கிரிகளை தொடர்ந்து விரட்டிச் சென்றார்கள்
டுமீல்! டுமீல்!
டுமீல்
கடுவதில் பிரயோஜன மில்லை... குதிரையை விரட்டு - ஓடிப் போய்விடுவோம்
டுமீல்! டுமீல்!
ஆ!
மேட்டுப் பகுதியை சென்றடைந்ததும் நாம் பிரிந்து வெவ்வேறு திசையில் போவோம்...
ஹோ...! நாம் இங்கே இருப்பதை ...றியாத முடாகள்
ஹோ!
அப்பாடா... ஒரு வழியாக தப்பியோடி வந்துவிட்டோம்...


ஆஆ...
தொலைந்
தோம்!
?
டுமீல்
டுமீல்
ஐயோ...
ஆஆ...
டுமீல்!
ஆயுதங்களை
எறிந்துவிட்டு
ரணடையுங்கள்
யாயீஈஈ...
ஆற்றுப்
பக்கமாக
போவோம்
திரும்புங்கள்
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
ஆஆ...
ஐயோ...


நாசமாகப் போக...
ஆ...!
எஞ்சியிருந்த ஒரே ஒரு நபரும், ஆற்றைக் கடந்து விட்டால் தப்பிவிடலாம் என்ற நைப்பாசையில் குதிரையை நீரில் இறக்கிய கணத்தில் தோட்டாவுக்குப் பலியாகி சரிந்தான்
டுமீல்! டுமீல்!
தொப்ப்!!
அமளி ஓய்ந்து விட்டது...
வோ...!
உயிரோடு பிடித்திருக்கலாம்... ஆனால் எதிரியின் மரணம் உறுதியான பிறகுதான் என் வீரர்கள் ஓய்வார்கள்!
ஆனால் செத்தவர்கள் பேசமாட்டார்களே...
வோ...! மூன்று பேரை உயிரோடு பிடித்து வைத்திருக்கிறோமே!
ஆங்...! அதை எப்படி நான் மறந்தேன்!


ர்களுடைய மர்மத் தலைவன் பற்றிய இரகசியங்களை டியாவது அவர்களிடமிருந்து க்றக்க வேண்டும்!
வோ!
இதற்கிடையே
சே... கட்டைக் கழற்ற முடியவே யில்லையே!
நடக்கிற காரியமில்லை... வீணாக சக்தியை விரயம் செய்யாதே!
இந்தக் யிற்றை மட்டும் அறுக்க டிந்தால்...
அறுத்து நம்மை விடுவித்துக் கொண்டால் மட்டும் இந்த கமான்சே க் களிட மிருந்து தப்பிவிட முடியுமா என்ன?
நிச்சயமாக...! ஆற்றினுள் பாய்ந்து
நிறுத்து...! அவர்கள் வருவது காதில் விழ வில்லையா?
யீஈஈ...ஹி..ஹ்...!
தீ மூட்டுங்கள்...! இன்றிரவு வேறு 'விருந்தினர்கள்' யாரும் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன்
ஓ.கே. தம்பிகளா - உங்களுடைய மற்ற தோழர்கள் எல்லோரும் பரலோகம் போய்ச் சேர்ந்து விட்டார்கள்...
இதற்குரிய தண்டனையை நிச்சயம் எல்மோரோ உனக்கு வழங்குவார்.
!
முந்திக் கொண்டு அந்த மர்ம ஆசாமிக்கும் நான் பரலோகத்திற்கு வழிகாட்டிவிட்டால்...?


அந்த மாயாவியை உடனடியாக நான் சந்திக்க விரும்புகின்றேன்... எனவே அவனைப் பற்றிய முழு விபரங்களையும் மளமளவென்று ஒப்பியுங்கள்...
முதல் கேள்வி - யார் அந்த எல்மோரோ?
நீயாகத்தான் விடை கொள்ள ஏனெனில் யாரும் நேரில் கிடையாது
எப்படி இருப்பான் என்று பார்த்திராத போதிலும் யார் அவன் என்று தெரிந்திருக்குமில்லையா...! அவனோடு தொடர்பு கொள்ள ஒரு ஏற்பாடு இருக்குமல்லவா?
இல்லை...
எதுவும் பேசாதே பட்...
...ம்ம்... ஓ.கே... நண்பர்களே உங்கள் தொடங்கலாம்...
மெக்ஸிகன்கள் இருவரில் ஒருவனை கொண்டு போங்கள்... திமிர்பிடித்த பேர்வழிகள் போலிருக்கிறது...
சீக்கிரமே திமிர் அடங்கிப் போகும்
உ...த... விவிவி...!
?
அவனை சித்திரவதை செய்யப் போகிறார்கள்
அனைத்துக்கும் மூல காரணம் அந்த ரேஞ்சர் பயல்தான்
காப்பாற்றுங் கள்


இரு...
குதிரைகள்... நிறைய எண்ணிக்கையில் இங்கேதான் வந்து கொண்டிருக்கின்றன...
மனிதனே... இல்லை - சரியான குள்ளநரிப் பயல்...
புதிருக்கு பதில்!
இந்த போக்கிரிகளின் தோழர்களாக இருக்குமோ?
தீயை விட்டு விலகிப் போங்கள்..
டெக்ஸும், கமான்சே க்களும் இருளினுள் பாய்ந்து பதுங்கினார்கள்.
அதையடுத்து வந்த ஒரு டஜன் குதிரை பயணிகள் திகைப்போடு சற்றுத் தொலைவில் நின்றுவிட்டனர்
மிஸ் ட்ரென்டன்... ஜாக்கிரதை.
தரையில் வீழ்ந்து கிடக்கும் நபர் என்ன செய்து கொண்டிருக்கிறானோ தெரியவில்லை... ஆனால், அந்த திருட்டுக் கும்பல் வெகு தொலைவு போயிருக்க முடியாது என்பது மட்டும் நிச்சயம்!
யெல்லோ ஹாண்ட் சுடவேண்டாம் என்று உன் தோழர்களுக்கு உத்தரவிடு!
அங்கே நிற்கிற தோழர்களோடு முயற்சிக்காமல் நான் சொல்வதை சற்றுக் கேளுங்கள்!
பொறு
?


யார் நீ?
டெக்ஸ் வில்லர் கோல்டன் ஸ்டாரின் புது உரிமையாளன்
அரைமணி நேரத்திற்கு முன் ஆற் குறுக்கே கால்நடை மந்தையை கட செல்ல முயன்ற கயவர் கும்பலை நா என் தோழர்களும் மடக்கி நிறுத் வைத்திருக்கிறோம்
அந்த மந்தை என்னுடையது தான்!
நல்லது!... நான் சொல்வதை கவனமாகக் கேளுங்கள்!
ஆயுதம் ஏதுமின்றி நான் இப்போது உங்களிடம் நெருங்கி வரப்போகிறேன்...! ஒரு எச்சரிக்கை
உங்களை தோழர் மறைவிட லிருந்து வைத்துக் டிருக்கிறார்
ஓ.கே
நிதானமாக, தயக்கமின்றி இருட்டி லிருந்து வெளியேறி எதிரணி யினரை நோக்கி நடந்தார் டெக்ஸ்
என் மந்தை என்னவா யிற்று?
அவசரப்பட தீர்கள்!
நீங்கள் யார்?
டாம் ட்ரென்டன் -டபுள் ராஞ்ச்சின் உரிமையாளர்
திருடர்கள் கடத்திச் செல்ல முயன்றது உங்களுடைய மந்தையைத்தான் என்றால் நிம்மதியாக இருக்கலாம். உங்களுடைய மந்தை இப்போது என் நிலப்பரப்பில்தான் இருக்கிறது
இந்தப் பண்ணை எப்போது உங்களுக்குச் சொந்தம் ஆனது?


வர்கள் என் நண்பர் .
ண்டர்ஸனை கொன்றதை அடுத்து!
என்ன? பில் ஆண்டர்ஸன் செத்துவிட்டாரா? கடவுளே... அவர் தங்கமான ஆளாயிற்றே!
தீர புருஷரும் கூட!
ரேஞ்சர்கள் படைப்பிரிவில் அவரோடு பணியாற்றிய நான் அவரைப்பற்றி நன்கறிவேன்
ஆமாம்... அவர் ஒரு முன்னாள் ரேஞ்சர் என்று கேள்விப்பட்டிருக் கிறேன்... அவர் இறந்து போனது துரதிர்ஷ்ட வசமானது
என் தோழர்களை சந்திக்கும் போது பதறிப்போய் துப்பாக்கியில் கைவைத்துவிட வேண்டாம் என்று எச்சரித்து வையுங்கள்
வேறு எங்கேயும் நாம் போகத் தேவையில்லை தோழர்களே! கீழே இறங்குங்கள்!
பதறுவதா...? ஏன் -எதற்கு?
அவர்கள் -கமான்சே செவ்விந்தியர்கள்!
என்ன...? அவர்கள் உங்களுடைய நண்பர்களா?
ஆச்சரியமாக இருக்கிறதா? கடத்தல்காரர்களை விரட்டிப் பிடிக்க எனக்கு உதவி செய்தவர்கள் அவர்கள் தான்!
கேட்டுக் கொண்டீர் களல்லவா?
யெல்லோ ஹாண்ட் இனி நீங்கள் வெளியேறி வரலாம்
வோ!


யெல்லோ ஹாண்ட்... இவர் ட்ரென்ட்ன்... மந்தைக்கு சொந்தக்காரர்!
வோ...!
உங்களுடைய இந்த உதவியை நான் என்றென்றும் மறக்கமாட்டேன்... நீங்களும் உங்களுடைய வீரர்களும் என் பண்ணைக்கு வரும்போது உரிய சன்மானம் கொடுத்து அனுப்புவேன்...
அதன் பின்னர் கட்டப்பட்டுக் கிடந்த மெக்ஸிகன் அருகே அவர்கள் சென்றனர்...
அட! இவனா?
இவனைத் தெரியுமா உங்களுக்கு?
ஓ...! இவன் பெலிப் மாடெரோ! பண்ணையில் வேலை செய்து வந்தவன் - பிறகு அந்த திருடன் ஒலிவாரெஸோடு போய் ஒட்டிக் கொண்டுவிட்டான்.
ஒலிவாரெஸ்? ஓ... இப்போது புரிகிறது!
செவ்வியர் களிட மிருந்து என்னை காப்பாற்றுங் கள்
என்னை சித்திரவதை செய்யப் போகிறார் கள்... கொன்று விட்டுத்தான் ஓய்வார்கள்
வில்லர்... இவன் சொல்வது நிஜமா?
சந்தேகம் ஏன்?
இந்த நீசர்கள் கால்நடை கடத்தல்காரர்கள் மட்டுமில்லை. கொலைகாரப் பாவிகள்... இவர்களுடைய மர்மத் தலைவன் மீது கைவைக்க எனக்குத் தேவையான தகவல்களை தெரிவிக்க மறுத்தால் கொஞ்சம்கூட ஈவு இரக்கம் காட்டமாட்டேன்
யெல்லோ ஹாண்ட்...! ஆரம்பி -
வோ...
வே..ண்.. டாம்! -பொறுங்கள்!



என்னை நீங்கள்
ம் எல்மோரோ
த்மாக நான்
ல்லை...
மற்ற
ரெண்டு பேரை
விசாரியுங்கள் !
எல்மோரோவோடு
தொடர்பு கொள்வது
எப்படி என்று
அவர்களுக்குத் தான்
தெரியும்!
கோழை! நம்மை
காட்டிக்
கொடுத்துவிட்டானே!
ஆனால்
இம்முறை
அச்சுறுத்தி
நேரத்தை
வீணடிக்க
அவசியமே
யில்லாது
போயிற்று. பட்
தனக்கு
தெரிந்த
வற்றை
சொல்ல
தானாகவே
முன்
வந்தான்...
தெரிந்ததை எல்லாம்
சொல்வதால் எனக்கு
என்ன லாபம்?
உயிர் மிஞ்சும்!
ராவுக்கு
காலம்
டமாகி
தெளிவாக
கொண்டு
அந்த மர்ம
பற்றியும்
டைய
பற்றியும்
ரம் தந்தான்
எனக்குத் தெரிந்தது
இவ்வளவு தான்
குட்...!
நீ ஒரு
கோழை!
நான் பேசியிராவிடில்
கமான்சேக்கள் நம்மை
உயிரோடு போக விட
மாட்டார்களே...
லையில் சில கௌபாய்கள் கால்நடைகளை திரட்டி வரச் சென்றனர்.
ன்டனும் மற்றவர்களும் டெக்ஸிடம் விடை பெற்றுக் கொண்டு கைதிகளோடு கிளம்பினர்...
ம் நன்றி வில்லர்...
களுக்கு உதவி
வைப்பட்டால் –
தேவையிராது
ட்ரென்டன்!



நானாகவே இதை செய்து முடிக்க விரும்புகிறேன்...அத்தோடு உதவிக்கு என் பிற தோழர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள்...
நல்வாழ்த்துக்கள்!
ம்ம்... நீ...! என் பண்ணைக்கு அவசியம் வரவேண்டும் - லாஸ் பல்மாஸுக்கு தெற்கே நான்கு மைல் தொலைவில் தான் இருக்கிறது அது!
வோ...!
இதற்கிடையே - லாரெடோவில்... ஷெரிப்பின் வீட்டில்...
ஹலோ ஷெரீப்... என்னை நீங்கள் தேடியதாக கேள்விப்பட்டேன்
உள்ளே வா... டிம்!
வில்லருக்கு அவசரமாக ஒரு செய்தி தெரிவிக்க வேண்டும்-அவரிடம் போக உன்னால் மட்டுமே முடியும்!
ஓ... போகிறேனே! என்ன செய்தி சொல்ல வேண்டும்!
நேற்றிரவு இங்கே நடந்த அக்கிரமத்தை தெரிவித்து உடனடியாக இங்கே வரவேண்டும் என்று சொல்
ஓ.கே.
நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்!
நாலைந்து நாட்களுக்கு இடது காலை தரையில் ஊன்றவே முடியாது - அத்தோடு, மண்டைக்குள் ஒரேயடியாக குடைச்சல் எடுக்கிறது!
உங்களுடைய அஸிஸ்டண்ட்டோட நிலைமையும் பரிதாபம் ஸார்!
டாக்டர் என்ன சொன்னார்?
ஏழெட்டு நாட்களுக்கு முழு ஓய்வு எடுக்க வேண்டும் என்றார்
கழுத்தில் விழுந்த அடி படு மோசமானது!
சண்டாளர்கள்
SHE



...ன்முறையில் ...வர்களை ...பிடித்து ...தான் என் ... அடங்கும்
வில்லர் ஆவன செய்வார் -நிம்மதியாக இருங்கள்
செய்வார்...! ஆனால் தனியாக இருக்கும் அவரால் -
தனியாகவா...? இல்லை - அவரோடு இப்போது பத்து கமான்சே'க்கள் இருக்கிறார்கள்
...ன்சே க்களா...? எங்கே ...த்தார் அவர்களை?
தெரியாது!
ஆனால் ஒன்று - அவர்கள் ஆயுதமேந்திய பயங்கர வீரர்கள்...! அவர்களுடைய மூஞ்சியை பார்த்தாலே கொலை நடுக்கம் எடுக்கும் நமக்கு!
உற்சாக மூட்டும் செய்தி இது! சரி... கிளம்பு - எவ்வளவு சீக்கிரம் போய் நீ அவரை சந்திக்கிறாயோ அவ்வளவு நல்லது!
...ம் மதுபானக் கடையில்
அடுத்து நாம் அந்த வில்லரை தேடிப்பிடித்து தீர்த்துக்கட்டிவிட்டு மறுபடியும் இங்கே கொண்டாட்டம் போடும் நாள் அதிக தொலைவில் இல்லை . . .
...ரு ரவுண்டு ... வாழ்க ...மாரோ
வாழ்க
இப்படி கத்தாதீர்கள்!
...இந்த ...க்கை?
இங்கே நேற்றிலிருந்து அந்நியர் நடமாட்டம் இருக்கிறது. அவர்கள் காதில் செய்தி விழவேண்டாமே என்று தான்
அந்நியர் கள்...? ...ப்பூ!


எவன் வந்தால் நமக்கென்ன -
டைகோ சொல்ல வந்ததை சொல்லி முடிக்கு முன் -
டைகோ... டைகோ
?
?
ஏய்... நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்...?
ஆற்றோரம் போகச் சொல்லி எனக்கு உத்தரவு
ஆழமில்லாத பகுதி வழியாக ஒலிவாரெஸ் குழு ஒரு மந்தையோடு வந்து சேரும் என்றும், மறுகரையில் சந்தித்து ரெட் பள்ளத்தாக்குக்கு நான் அவர்களை வழி நடத்திச் செல்ல வேண்டும் என்பது ஏற்பாடு!
சுலபமான பணிதானே!
ஒலிவாரெஸ் வந்து சேர்ந்திருந்தால் பிரச்சனை இல்லைதான்....
அவன் வந்து சேரவில்லையா என்ன?
அதைவிட மோசம்...! நான் இருந்த இடத்திலிருந்து கால்நடைகள் வருவதை கேட்க முடிந்தது!
ஆனால் அதையடுத்து அங்கே ஒரே அடிதடி கலாட்டாவாக இருந்தது.ஒலிவாரெஸ் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டது புரிந்தது
அப்படியா?
அவர்கள் யார்?
தெரியவில்லை... கும்மிருட்டு - ஆனால் நிறையப் பேர் என்று யூகிக்க முடிந்தது.


இனியும் அவனை விட்டு வைக்கக் கூடாது! இப்போதே போய் அவனை ஒழித்துக் கட்டிவிட்டு மறுவேலை பார்ப்போம்... புறப்படுங்கள்!
முதலில் விஷயத்தை எல்மோரோவுக்கு தெரியப்படுத்த வேண்டாமோ?
அதற்கு ஏது அவகாசம்?
நமக்குத் ... அவர் முன்னால் ... நம்மீது
..ம்ம்...
லாரெடோவுக்கு போகாமல் இப்போதைக்கு ஒதுங்கியிருப்பதே நமக்கு நல்லது...
அந்தப் பக்கம் தலை வைத்துப் படுக்கவும் கூடாது!
மெக்ஸிகன் பக்கம் போய் ... பகுதி வழியாக ஆற்றைத் ... நுழைவோம்
புறப்படுங்கள் தோழர்களே


அதே சமயம்...
அங்கே பாருங்கள்
டிம்மின் சமிக்ஞை
லாரெடோவில் ஏதோ அசம்பாவிதம் சம்பவித்திருக்க வேண்டும் இல்லையேல், இத்தனை சீக்கிரத்தில் அவன் திரும்பியிருக்க மாட்டான்
யெல்லோ ஹாண்ட்... நீ இங்கே விழிப்போடு இரு! நான் டிம்மிடம் போகிறேன்
யாராவது ஆற்றைக் கடக்க முற்பட்டால்?
பரலோகம் அனுப்பி வை!
வோ!
ஓடுடா... ராஜா!
ஒரு மணி நேர பயண முடிவில் -
ஏதாவது கெட்ட சேதியா?
ஆமாம்... எதிர்பாராதது நடந்துவிட்டது!
முந்தைய இரவில் நடந்த அசம்பாவிதத்தை சுருக்கமாக எடுத்துரைத்தான் டிம்...
இதை உங்களுக்குச் சொல்லத்தான் என்னை ஷெரீப் அனுப்பி வைத்தார்
நீசர்கள்
எல்மோரோவுக்கு உடனடியாக ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும்
லாரெடோவுக்கு நீங்கள் வரவேண்டுமாம்!



லோ
கு ஒரு
தி
விட்டு
னே
வோம்
சற்றைக்
செல்லாம்...
இரவுக்
கழுகிடமிருந்து
செய்தி!
எச்சரிக்கையோடும்
போடும் இருங்கள்...
ளையர்கள் கலவரம்
து வருகிறார்கள்
ஆமிற்று... இனி கமான்சே க்கள் அதி
ஜாக்கிரதையாக இருப்பார்கள்
கயவர்கள் மீண்டும்
வருவார்கள் என்று
நினைக்கிறீர்களா?
தியரக நம்புகிறேன்.
ணயில் நான் இருக்கிற
ஷயம் அவர்களுக்கு
ந்திருக்கும்... என்னை
துக்கட்ட வெறியோடு
வரக்கூடும்
புறப்படு...! முந்திக் கொண்டு
தாக்குவதுதான் வெற்றியை
உறுதி செய்யுமாதலால்,
லாரெடோ போய்ச்
சேர்ந்ததும் ஒரு வேடிக்கை
நடக்கப் போகிறது பாரேன்!
லாரெடோ
விலா?
மாம்... காரணத்தை நான்
சொல்கிறேன்
?
முந்தைய இரவில் நடந்ததை டெக்ஸ்
விவரித்தார்
பட் ஒருவேளை உங்களிடம்
பொய் சொல்லியிருந்தால்?
அதற்கு
அவசியமே
யில்லை!



எல்மோரோ என்ற மாயாவி உண்மையில் யார் என்று நமக்குத் தெரியா விட்டாலும், அவன் மறைந்து வாழும் இடமும், அவனுடைய ஆட்கள் நடமாடித் திரியும் மூன்று இடங்களும் நமக்குத் தெரியும்...
...லாரெடோவில் பிக் ஹார்ன், லாஸ்பால்மாஸில் சன்ரைஸ் மதுபான ரியோ ப்ளாங்கோவில் - போஸ்
நாம் லாரெடோ போய்ச் சேர்ந்த பிறகு அங்கே என்ன நடக்கிறது என்று பார்த்துவிட்டு அப்புறம் சொல்!
அது அத்தனை சுலபமில்லை... ஷெரீப்போ அவருடைய உதவியாளரோ உங்களுக்கு எவ்வகையிலும் ஒத்தாசை செய்யும் நிலையில் இல்லை...
இரண்டு மணி நேரம் கழித்து -
ஆட்டத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் மிஸ்டர் வில்லர்
நன்றி டிம்
நீ இப்போது இருக்கும் நிலையில் ஆபத்தான பணியில் நீ இறங்க வேண்டாம்... எனக்கு பாதுகாப்பு கொடு - அது போதும்
சரி நீ போய் பிக் ஹார்னுக்கு எதிரே காத்திரு... நான் அரை மணி நேரத்தில் அங்கே வந்து சேருகிறேன்
சரி... ஸார்!
இதற்கிடையே -
வந்து விட்டோம்... ஆற்றில் ஆழமில்லாத பகுதி இதுதான்


முள் கம்பி வேலி!
ஓ... ஒலிவாரெஸுக்கு தடையாக அமைந்தது இந்த வேலிதான் போலும்
டகளின் துணை இருந்தால் இந்த ரேஞ்சர் வெகு சுலபமாக தை சாதித்துக் கொண்டு விட்டிருப்பான்!
முன்னேறுங்கள்
திமிர்பிடித்த ரேஞ்சரை தேடிப்பிடித்து பரலோகம் அனுப்பி வைப்போம்
மையப் பகுதிவரை வரட்டும்... மாக முதலில் அம்புகளை பிரயோகிப்போம்...
வோ...
வோ...
ரெஸ் திரும்பி இருப்பான் என்றா நீ க்கிறாய்?
ஆமாம்...! ல்லரை தீர்த்துக் கட்டியான பின் நேராக ஸன் ரைஸுக்குப் போவோம்


ஆ..ஆ...
அதிரடியாக தாக்கு கிறார்கள்
திரும்புங்கள்
இல்லை... முன்னேறுவோம். திரும்பினால் சுலபமாக கொன்றுவிடுவார்
ஆ..ஆ...
டுமீல்!
டுமீல்!
மறுகரையை குறி வைத்து சுடுங்கள்... ஆ..ஆ
விர் விர்...
ஆ..ஆ.. கமான்
அடுத்து -சுடுங்கள்!
வோ
டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்!
டுமீல் டுமீல் டுமீல் டுமீல் டுமீல்!
ஆ
அவர்கள் நாசமாகப் போக! -திரும்புங்கள்
ஆ..ஆ...



பனே... திரும்பு!
ஆ
என்னதான் நடக்கிறது என்று புரிந்து கொள்ள முடியாத குழப்பத்தோடு புறமுதுகு காட்டி ஓடினார்கள் எதிரிகள்
ஆ
தொப்
டுமீல் டுமீல் டுமீல்!
ஆ..ஆ...
ஆ..ஆ... ஓடு.. ஓடு
பாவிகளா...
தொலைகிறார்கள் - விடுங்கள்... இனியும் தோட்டாக்களை அவர்கள் பொருட்டு விரையம் செய்ய வேண்டாம்.
வோ...
அதே சமயம் லாரெடோவில்...
அதோ... வந்து விட்டார்!
HOTEL


நேரம் வந்துவிட்டது டிம்... நீ தயார்தானே?
நீங்கள் சம்மதித்தால் உள்ளே நுழையவும் ரெடி!
எனக்கு பாதுகாப்பு கொடு... போதும்!
முதலாளி ராட் எப்போதும் மேஜை டிராயரில் துப்பாக்கி வைத்துக் கொண்டிருப்பான்
மறுமொழி ஏதும் கூறாமல் சாலையை கடந்து பிக் ஹார்ன் நோக்கி நடந்தார் டெக்ஸ்
ஹாலில் கூட்டம் நிரம்பி வழிந்தாலும் டெக்ஸின் வரவு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது...
ஹே... அங்கே பார்!
ரேஞ்சர்!
எதற்காக இங்கே வருகிறான்!
கதவருகே போய் நின்ற டெக்ஸ் உரத்த குரலில் பேசலானார்
அனைவரும் தயவு செய்து நான் சொல்வதை கவனமாக கேட்டுக் கொள்ளுங்கள்
?
? ?
என்ன?
நான் சொல்லப்போவதை நீங்கள் நிச்சயம் ரசிக்கமாட்டீர்கள்... செய்தி இதுதான் - இங்கிருந்து வெளியேற உங்களுக்கு மூன்று நிமிட அவகாசம் தருகிறேன்
ஏன்... கேட்க வில்லையா உனக்கு? கடையை விட்டு வெளியேற நிமிட அவகாசம் உங்களுக்கு - என்றேன்!
என்ன திமிர்!
டமீல்!


ஊஹூம்... யாரும் மூச்சுக் காட்டக் கூடாது...! வெளியேற இஷ்டமில்லாதவர்களின் உயிருக்கு பிறகு உத்தரவாதம் கிடையாது!
கொஞ்சம் பொறு... என் வாடிக்கையாளர்களை இப்படி நீ அச்சுறுத்துவதை நான் அனுமதிக்க முடியாது
நீதான் முதலாளியா?
ஆமாம்... இந்த கடையின் முதலாளி... இங்கே அதிகாரம் செலுத்த நீ யார்?
மேலே ஒரு வார்த்தை கூட நீ பேசக் கூடாது
புத்திசாலியாக இருந்தால் அஸ்தமன வேளைக்கு முன் ஊரை விட்டு ஓடிப் போய் விடு
உனக்கு கடைசி
விடம் தொடர்பு என்பது எனக்குத் அவன் ஒரு உன்னை காப்பாற்ற அவன் தன் கூட அசைக்க மாட்டான் - புரிந்து கொள்!
பேசியது போதும்... மூன்று நிமிடம் கழிந்து விட்டது - போங்கள் வெளியே!


விலகிப் போங்கள்... உள்ளே பெரும் புயல் உருவாகிக் கொண்டிருக்கிறது.
இதுதான் தருணம்...
இன்னும் வேறு எவரேனும் சமர்த்தைக் காட்ட விரும்பினால் முன் வரலாம்...!
உயிர் பிழைத்தால் போதும் என்று வெருண்டு வெளியேறி ஓடியது கயவர் கும்பல்...
உன்னை பழி வாங்காமல் விடமாட்டேன்
உனக்கு வாய்க் கொழுப்பு அதிகம்!
ஓடிப் போவதானால் இப்போதே போய்விடு...



இதற்கிடையே நியூவோ லாரெடோவில்
டைகோ கூட செத்துப் போய்விட்டான்?
ஆமாம்... அம்பு பாய்ந்து அவன் செத்து விடும்போது நான் அவனருகேதான் இருந்தேன்!
தைதை யாக ராவுக்கு படுத்த டும்.
தொடைநடுங்கிகள்...! எல்மோரோவிடம் ஏன்தான் இப்படி பயந்து சாகிறீர்களோ?
டியொரு யை போய்த் தரிவிக்க ருக்காவது சல் உண்டா?
மல் பேசாதே ரெஸ்... நாங்கள் னுபவித்த நரக வேதனை ளுக்கல்லவோ தெரியும்...
உங்களில் யாருக்கும் தைரியம் இல்லை என்றால்...
போய் தெரிவிக்க நானாயிற்று!
அருமையான யோசனை!
குட்!
ற்கிடையே, லாரெடோவைவிட்டு ளியேறிக் கொண்டிருந்தார் வில்லர்
பட் சொன்ன தகவலின்படி கோல்டன் ஸ்டாரின் தெற்கு எல்லையிலிருந்து எட்டு மைல் தொலைவில் இருக்கக்கூடும் அந்த பாழடைந்த ஸ்பானிஷ் மடாலயம்
நேராக அந்த எல்மோரோ பயலின் இருப்பிடத்திற்கு போக வேண்டியதுதான்!


குறுக்காக பாறைகளினூடே போனால் இரண்டு மணி நேரத்தில் போய்ச் சேர்ந்து விடலாம்.
இரண்டு மணி நேரம் கழித்து
அதோ...!
அருகில் போய் பார்த்துவிட்டு அப்புறமாக வந்திருப்பதை தெரியப்படுத்துவோம்...
ம்ம்... இதை கட்டியவர்கள் பின்னர் ஒருநாள் இதில் திருட்டுக் கும்பல் ஒளிந்து வாழப் போகிறது என்று கற்பனையாகக்கூட நினைத்துப் பார்த்திருப்பார்களா?
புதிதாக தடங்கள் ஏதும் தென்படவில்லை... நல்லது - உள்ளே போய் ஆராய்வோம்
பட் சொன்னது நிஜமாக இருக்குமேயானால் யாரும் அறிய வண்ணம் எல்மோரோ வந்து போக இங்கே ஒரு இரகசிய சுரங்கவழி இருக்க வேண்டும்.
இந்த படிக்கட்டு கீழே நிலவறைக்கு இட்டுச் செல்கிறது
தரையையும், சுவர்களையும் துப்பாக்கியால் தட்டி நுணுக்கமாக ஆராய்ந்தார் டெக்ஸ்
ஆங்... இதன் கீழேதான் பாதை போகிறது...


ந்த மர்ம சாமி வந்து போகும் இரகசிய பா இதுவாகத்தானிருக்கும்
இந்த பலகைக் கல்லை நெம்பி அகற்ற முடியுமா?
சே... வரமாட்டேன் என்கிறதே
கல்லை நகர்த்தும் முயற்சியில் நேரத்தை வீணடிக்காமல் முதலில் செய்தி யனுப்பும் வழியை பார்ப்போம்
சற்றைக் கெல்லாம்
இனி -எல்மோரோவிட மிருந்து என்ன பதில் வருகிறது என்று காத்திருக்க வேண்டியது தான்!
ஆனால் அதே சமயம்
அடடே... இங்கே அந்நியர் யாரோ வந்திருக்கிறார்கள்
ம்ம்... யாராக இருக்கும்?
சற்றுத் தொலைவிலிருந்த பாறை முகட்டில் குதிரையை விட்டுக் கீழே இறங்கினான் பெரெஸ்...
?


வெளி ஆள் மாதிரி தெரிகிறது... நிச்சயம் கூட்டத்தை சேர்ந்த ஆசாமி இல்லை...
இருந்தும் எல்மோரோவுக்கு செய்தியனுப்பியிருக்கிறான்... ம்ம் அவன் யாராக இருக்கும்?
ம்ம்... அவனுடைய நடவடிக்கைகளை ஆராயவேண்டும்... ஒருவேளை எல்மோரோவின் புது தோஸ்த்தாக இருக்குமோ?
உண்மை எதுவாயினும் பொறுத் திருந்து தெரிந்து கொள்வோம்
அரைமணி நேரம் கழித்து
அதோ... பதில் சமிக்ஞை அனுப்புகிறான்.
ஓகே... எல்மோரோவை வரவேற்க தயாராவோம்!
அந்நியன் யாராக இருந்தாலும், அவர்களிடையே நடைபெறப் போகும் உரையாடலை நான் இரகசியமாக கேட்டறிய வேண்டும்...
உதவாக்கரை கும்பலிலிருந்து எவனாவது வந்திருப்பான்!
ப்ரெண்டனின் மந்தை ஏன் திரும்பிச் சென்றது என்று கேட்டறிய துடிப்பாக இருக்கிறேன்...
ஒலிவாரெஸும் அவனுடைய சகாக்களும் ஏன் லாஸ் பல்மாஸ் திரும்பவில்லை என்றும் எனக்குத் தெரிய வேண்டும்!



அதோ... வந்து விட்டான்!
ஆபத்து எதிர்நோக்கி காத்தி ருப்பதை அறியாத எல்மோரா இயல்பாக இரக்சிய சுரங்க வழியின் திறப்பைத் தள்ளிக் கொண்டு வெளியேறி வந்தான்.
அங்கே அப்படியே நில் எல்மோரோ
யே நிலவறை திறப்பு ாக திரும்பிப் போய் ம் என்றும் மனப்பால் குடிக்காதே!
அற்பப் பதரே... யார் நீ?
மெள்ள திரும்பிப் பார் - புரிந்து கொள்வாய்
வில்லர்...! - ரேஞ்சர்!
... என்னை உனக்கு ஏற்கனவே புமா? அதாவது நாம் ஏற்கனவே திருக்கிறோம் - அப்படித்தானே!
என்ன விஷயம்... ஏன் பேசமாட்டேன் என்கிறாய்... பயத்தில் உறைந்துவிட்டாயா... அல்லது பீதியில் பேச்சு வர மறுக்கிறதா... ம்ம்... ஏதாவது பேசு!


இன்னமும் ஏன் மௌனம் சாதிக்கிறாய்... ஓ.கே. இப்போது உன் முகமூடியை அகற்றி விவகாரத்திற்கு ஒரு தொடக்கம் கொடுக்கிறேன்!
அந்நியனே அப்படியே நில் -துப்பாக்கியை கீழே போடு
?!
என் துப்பாக்கி
பிடரியை
வைத்துக்
சரி... கைகளை மேலே தூக்கு - அசையாதே
நன்றி பெரெஸ்
இந்தக்
இதற்கு
தோட்டாக்களை உமிழ்ந்து ஒரேடியாக இவுனை தீர்த்துக்கட்டி விடட்டுமா..?
வேண்டாம் பெரெஸ்
இவனுக்கு மரணம் இவ்வளவு சுலபமாக சம்பவித்து விடக்கூடாது
சரி...
கவனித்து
கொள்...
கீழே
சில வினாடிகளுக்குப் பின் -
வேறு யாராவது..?
இல்லை... இவன் தனியாகத்தான் வந்திருக்கிறான்
சரி..நாம் வெளியே போகலாம்
கேட்டா யல்லவா... நட...



வளியே வந்ததும்
டைகோவுக்கும் மற்றவர்களுக்கும் நீயும் உன் நண்பர்களும் இழைத்த கொடுமைக்கு ஏற்றுக் கொள் இந்தப் பரிசை!
டைகோ என்று சொன்னாயே - என்ன ஆயிற்று அவனுக்கு?
அவனும் வேறு பலரும் பரலோகம் போய்ச் சேர்ந்து விட்டார்கள்!
த ஒரு சிறு வலையும் விட்டு விடாமல் நடந்த வங்களை எல்மோ ரோவுக்கு விபரமாக டுத்துரைத் ள் பெரெஸ்.
பத்துப் பேர் உயிர் தப்பியது தெய்வாதீனமானது!
ஒருவனா ஒரு கும்பலா என்பதல்ல - அவர்கள் ஆற்றின் மத்திய பகுதியில் அதிரடியாக தாக்கப்பட்டிருக்கிறார்கள்.
ஆனால் அவன் யாரென்று கூட அவர் களுக்குத் தெரியாது... சே...
டாள்ன்... அந்த ரேஞ்சரை அணு அணுவாக வெட்டி சித்திரவதை பண்ணி கொல்ல வேண்டும்!
என்ன செய்வதாக உத்தேசம்?
பட்டென்று அவனுடைய உயிரை எடுத்துவிடக் கூடாது
நியூவோ லாரெடோவில் ஒரு செவ்விந்தியன் இருக்கிறான். கொஞ்சம் பணத்தை தள்ளினால் போதும் சித்திரவதை செய்வதில் பலே ஆள்.
யார்... காலிங் டோவா?



ஓ... உனக்கும் அவனைத் தெரியுமா...! கத்தியினால் கீச்சி யாரையும் கசாப்பு போட்டுவிடுவான் என்பதும் தெரியுமில்லையா?
தெரியும்... இரத்த வெறி பிடித்த கிராதகன்
வரவழைக் கட்டுமா?
உடனடியாக! அத்தோடு மற்றவர்களுக்கும் தகவல் சொல். இன்றிரவு எல்லோரு இங்கே இருக்க வேண்டும்!
அதுவரை இவனை எங்கே விட்டு வைப்பது?
எல்மோரோவுக்கு எதிராக செயல்படும் எவனுக்கும் என்ன தண்டனை கிடைக்கும் என்று மற்றவர்களும் தெரிந்து கொள்ளட்டும்.
யார் கண்ணிலும் படாதவாறு எங்கேயாவது ஓ மறைவிடத்தில்
அதே சமயம்...
புகை சமிக்ஞை இன்னமும் வந்து கொண்டிருக்கிறது!
சமிக்ஞை ரொம்ப வித்தியாசமாக இருக்கிறதே!
எனவேதான் அதை அனுப்பும் ந யாரென்று அறிந்து கொள்ளத் துடிக்கிறேன்
நாம் பிரி கொள் வோமா
நல்ல யோசனை! மேகாலோடு நீ போ... ஆற்றின் தாழ்வான பகுதிக்கு வடபுறமிருந்து மேலே ஏறி நாலைந்து மைல் தொலைவுக்கு நோட்டமிடுங்கள்... நானும் மற்றவர்களும் மறு புறம் ஆராய்கிறோம்
வேட்டை வெற்றிகரம அமையட்டு



து ஒருவேளை இரவுக் கழுகாக இருக்குமோ?
இராது! அவரோடு இருக்கும் கமான் சே க்களின் வேலையாகவும் இருக்க வாய்ப்பில்லை!
இரவுக் கழுகு இருக்கும் பண்ணைக்கு அருகில் நாம் வந்து விட்டபடியால் சந்தேகப்படும்படியாக எது கண்ணில் பட்டாலும் நுணுக்கமாக ஆராய வேண்டும்
கரும் உடனிருந்த இரு நவஜோக்களும் மேட்டுப் குதியை சுற்றிக் கொண்டு சென்ற பாதை வழியே பயணம் செய்தனர்.
பின்னர் அவர்கள் மேட்டில் ஏறி நோட்டம் விட்டபோது சுரங்கத்தின் நுழைவாயில் அவர்களுடைய பார்வையில் பட்டது...
அங்கே பார்!
?
தே கணத்தில் எல்மோரோ சுரங்கத்தினுள்ளிருந்து வெளியேறி வந்தான்!
உய்! - கீழே இறங்கு!
வோ!
ம்ம்... புதிரான புகை சமிக்ஞை கிளம்பிய இடத்தை ஆராயத் தீர்மானித்த என் புத்திசாலித்தனத்தை மெச்சத் தான் வேண்டும்!
மூன்று ஜோடி விழிகள் தன்னை நோட்டம் விட்டுக் கொண்டிருப்பதை அறியாத எல்மோரோ, அருகிலிருந்த ஷெட்டினுள் போய் தன் முகமூடியை கழற்றி வைத்துவிட்டு வெளிவந்து குதிரை மீது ஏறி எங்கோ வேகமாக கிளம்பிச் சென்றான்.


அவனை பின்தொடருவோமா?
ஏன் அவன் சுரங்கத்தினுள் இருந்தான் என்பதை முதலில் கண்டறிவோம்
ஹுனா... போய் மற்றவர்களிடம் விஷயத்தைச் சொல்.நானும் டானடோவும் கீழே போகிறோம்
வோ...!
சற்றைக்கெல்லாம் -
அந்த மெக்ஸிகன் மர்ம ஆசாமிதான் புகை சமிக்ஞையை அனுப்பியிருக்கிறான்
நீ இங்கேயே நில் - நான் சுரங்கத்தினுள் போகிறேன்!
சுரங்கத்தினுள் நுழைந்த டைகர் உள்ளே பார்வையில் பட்ட விளக்கை முதலில் ஏற்றினான்...
என் அதிர்ஷ்டம் தான் இது!
உள்ளே என்ன மாதிரியான உண்மை தெரிய வரப்போகிறதோ?
வளைந்து நெளிந்து போன சுரங்கப் பாதையில் எல்மோ ரோவின் காலடித் தடத்தை பின் பற்றிச் சென்ற டைகர் முடிவில் -
அடக் கடவுளே...! 'இரவுக் கழுகு'!
யாரது... டைகரா வந்திருப்பது? -விந்தைதான்!


கயிற்றை அவிழ்த் தெறிந்தான் டைகர்.
நன்றி டைகர்... ஆனால் நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?
தற்செயலாக நிகழ்ந்த அதிசயம் அது
நானும் என் ஊரைச் சேர்ந்த நான்கு வீரர்களும் கோல்டன் ஸ்டார் பண்ணையை நோக்கி போய்க் கொண்டிருந்தோம்
உங்களுடைய செய்தியில் லாரெடோ வழியாக வருமாறு யோசனை றியிருந்தீர்கள். நான்தான் தாமதத்தை தவிர்க்க இந்த குறுக்குப் பாதையில் புகுந்தேன்..."
" பல மேடு பள்ளங்களை ஏறிக் கடந்த பின் இந்தப் பகுதியிலிருந்து புது மாதிரியான புகை சமிக்ஞை ஒன்று வரக் கண்டேன்..."
எல்மோரோ எழுப்பிய மிக்ஞையாக இருக்கும்!
அது சற்று புதிரானதாக இருந்தது...
அதை அனுப்பியது யாராக இருக்கும் என்றறியும் ஆவலோடு இந்தப் பக்கம் வந்தேன்... தற்செயலாக சுரங்க வாயில் கண்ணில் பட்டது... மர்ம ஆசாமி ஒருவன் உள்ளிருந்து வெளி வந்தான்
அவன்தான் எல்மோரோ!
வ்வுண்மை எனக்கு அப்போது ரிந்திருந்தால் அவனைப் போக விட்டிருக்க மாட்டேன்!
தடம் தெளிவாக இருக்கும் - எனவே
அந்த அயோக்கிய நாயைத் தேடிப் போய் நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை!


என்னை சித்திரவதை செய்து நான் துடிதுடித்துச் சாவதை வேடிக்கை பார்க்க அந்தக் கும்பல் மொத்தமும் இன்றிரவு இங்கே வரவிருக்கிறது...
அவர்களுக்கு இங்கே என்ன ஒரு அதிர்ச்சி காத்திருக்கப் போகிறது என்று நீயாகவே கற்பனை செய்து கொள்
எண்ணிக்கையில் அவர்கள் நிறையவோ?
இருக்காது...! அப்படியே இருந்தாலும் நாம் அவர்களை அதிரடியாக தாக்கப் போகிறோம் - மேலும் நம்மோடு கமான்சே க்களும் சேர்ந்து கொள்ளவிருக்கிறார்கள்
ஓ... அப்படியா!
இதற்கிடையே, நடக்க விருப்பதை எண்ணி உற்சாகமடைந்த பெரெஸ் நியூவோ லாரெடோ நோக்கி விரைந்து கொண்டிருந்தான்...
எல்லோரும் இன்பஅதிர்ச்சி அடையக்கூடும்!
அந்த ரேஞ்சர் மூக்கை நுழைத்ததிலிருந்து எல்லாமே தலை கீழாகிப் போய்விட்டது...
அவனை தீர்த்துக் கட்டிவிட்டால் எல்லாமே மீண்டும் சாதகமாகிப் போகும்... அப்புறம் ஒரே கொண்டாட்டம் தான்
ஹே... பெரெஸ் வருகிறான் பார்!
என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறானோ!
பெரெஸ்... எல்லாம் நல்லபடியாக முடிந்ததா?
தான்!



...டம் என்னை அனுப்பி ... உங்களுக்கு ரேஞ்சரை ... கட்டிப் போட்ட காட்சியை நேரில் காண கொடுத்து வைக்கவில்லை.
நீ... என்ன சொல்கிறாய்!
ரேஞ்சரை பிடித்து வைத்திருக்கிறீர்களா?
பிடித்தது -நான்தான்!
நீங்கள் என் உத்தரவுப்படிதான் காரியம் பண்ண வேண்டும் - புரிந்ததா?
... போவ ...ல்லை!
சரி... அங்கே என்ன...ான் நடந்தது?
கொஞ்சம் பொறுமையாக இருங்கள்
நீ ...போய் ...லிங்டோ எங்கிருந்தாலும் ...டிப்பிடித்து அழைத்து வா!
அந்த உன்மத்தனையும் குழுவில் சேர்த்துக் கொள்ளப் போகிறோமா?
இல்லை...! வேறொரு காரியத்துக்காக அவன் தேவைப்படுகிறான் சரி -நான் சொல்வதை கவனமாக கேளுங்கள்...
...ற்கிடையே - ஆற்றின் அருகே...
அந்த புகை சமிக்ஞை -நவ்ஜோக் களுடையது!



வரச் சொல் அழைப்பு
வோ!
ஏறுங்கள்... குதிரைகளில்!
அதே சமயம் டெக்ஸ் ட்ரென்டனின் பண்ணையைச் சென்றடைந்தார்...
?
மிஸ்டர் ட்ரெண் ரேஞ்சர் வந்திருக்கிறா
வில்லர்! உங்களை மீண்டும் சந்தித்ததில் மிக்க சந்தோஷம்! டின்னருக்கு இருக்கலாமில்லையா?
அதற்கு அவகாசமில்லை ட்ரென்டன்!
உங்களுடைய ஆட்களை உடனடியாக என்னோடு அனுப் முடியுமா?
எல்மோரேரா கும்பலை ஒட்டு மொத்தமாக பிடிக்க வேண்டுமானால் நாம் அனைவரும் உடனே கிளம்பியாக வேண்டும்!
!
என் செவ்விந்திய தோழர்கள் அந்தக் காரியத்தை செய்து முடித்துவிடுவார்கள் என்ற போதிலும் உங்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால் நல்லது!
எங்கள் பாக்கியம் -இதோ கிளம்பி விட்டோம்



கேட்டுக் கொண்டீர்களல்லவா தோழர்களே... எல்மோரோ கும்பலை பிடித்து ஒழித்துக்கட்ட அரிய வாய்ப்பு கிட்டியிருக்கிறது நமக்கு...
தக்க முறையில் பயன்படுத்திக் கொள்வோம்
எப்போது கிளம்ப வேண்டும்?
ஒரு மணி நேரத்தில்...! அஸ்தமன வேளையில் பழைய மடாலயம் உள்ள மேட்டுப் பகுதி
என செவ்விந்திய
எதிர்பார்ப்பார்
இடைப்பட்ட அவகாசத்தில் கொஞ்சம் திரப்பிக் கொள்ளலாம் - வாருங்கள்!
பலமுறை மண்டையைப்
குழப்பிக் கொண்டு விட்டேன்... விடைதான் இன்னமும் கிடைக்கவில்லை!
எல்மோரோ என்ற புனை பெயரில் திரியும் அந்த மர்ம மனிதன் யாரென்று உங்களில் யூகிக்க முடிகிறதா?
நிறையப் பேர் மீது சந்தேகம் எழுந்தது உண்டு - ஆனால் எதுவும் உறுதிப்படவில்லை!
ஊரில் அயோக்கியர்களுக்கா பஞ்சம்... அவர்களில் எவனாவது ஒருவனாக இருக்கும்!



மெக்ஸிகோ எல்லை மிக அருகாமையில் இருப்பதால் எவன் எவனோ வந்து போகிறான்... அவர்களில் எல்மோரோ யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்!
எல்மோரோ ஒரு தொழில்முறை திருடன் அல்ல!
யாரென்று உங்களுக்குத் தெரியுமா?
என் யூகம் சரியாகத் தானிருக்கும்
யார்... யார் அவன்?
பொறுங்கள்...! இன்னாராக இருக்கலாம் என்று ஒரு யூகம் தான்... உறுதியாகச் சொல்வதற்கில்லை!
இன்னும் சற்று நேரத்தில் அவன் யாரென்று தெரிந்து கொண்டுவிடுவீர்கள்... அவனுடைய அட்டூழியங்களுக்கு அப்படியே ஒரு முற்றுப் புள்ளியும் விழப் போகிறது...
ஏறத்தாழ அதே சமயம் -
ஏறுங்கள்... போவோம்
ம்ம்... உற்சாகமாக கிளம்புங்கள்
எல்லோரும் வந்து சேர்ந்து விடுவார்களா?
லாரெடோவுக்கும் லாஸ் பால்மாஸுக்கும் செய்தியனுப்பி அனைவரையும் வர சொல்லப் போவதா எல்மோரோ என்னிடம் சொன்னான்!



ஞ்சரின் வழியில் குறுக்கிடும் துரதிர்ஷ்டம் ாய்க்காத மற்றவர்களும்கூட அவனுடைய மரணத்தைக் காண வந்து சேரப்போகிறார்கள்.
இதற்கிடையே -
ரஞ்சர் இன்றிரவு ஒழிந்துவிட்டால் ப்புறம் என் கை வலுப்பட்டு விடும்
அவனுடைய கொடூரமான மரணம் அவனுடைய சகாக்களுக்கு ஒரு பாடமாக அமையும்... அப்புறம் என் வழியில் குறுக்கிட ஒரு பயலுக்கும் தைரியம் வராது!
அரைமணி நேரம் கழித்து -
அதோ வருகிறான்...
வோ...!
கடந்து போகட்டும் -அப்புறமாக சமிக்ஞை அனுப்பு வோம்!



அதே. சமிக்ஞை -எல்மோரோ வந்து கொண்டிருக்கிறான்
வோ...! ஓடிப் போய் இரவுக் கழுகிடம் சொல்!
இதற்கிடையே பெரெஸின் கூட்டம் மடாலயத்தை நெருங்கிக் கொண்டிருந்தது...
பல ஜோடி விழிகள் அவர்களை உன்னிப்பாக கனித்துக் கொண்டிருப்பதை அறியாத மூடர்கள்...
மற்றவர்கள் இன்னமும் வந்து சேரவில்லை போலிருக்கிறது
எல்மோரோவும் மற்றவர்களும் வந்து சேருவதற்குள் நாம் தீ மூட்டி சிறப்பான விருந்து தயாரிக்க முன்னேற்பாடுகளைச் செய்து முடிப்போம்!
ஹா...! ஹா...! காலிஸ்போ... கேட்டாயா இதை!
சிரியுங்கள்...! அப்புறம் என் கைவரிசையை பார்த்த பிறகு ஆயுளுக்கும் சிரிக்கத் தோன்றாது!
?
இன்னும் சற்று நேரத்தில் தங்களுடைய சரித்திரம் முடியப் போகிறது என்று அந்தக் கோமாளிகளுக்குத் தெரியாது...


அதே சமயம் -
அடேய் குள்ள நரிப்பயலே... எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டாய்!
நடக்கப் போவதை அறியாத எல்மோரோ சுரங்கத்தினுள் நுழைந்தான்
அடுத்த முப்பதாவது வினாடி டைகர் சுரங்க வாசலில் இருந்தான்
உள்ளே போய் சுரங்கத்தின் கூரையை தாங்கி நின்ற உத்திரம் ஒன்றில் கயிற்றின் ஒரு முனையை பிணைத்து
விட்டு டைகர் சுரங்கத்தின் வாயிலுக்குத் திரும்பினான்.
இன்னொரு நவஜோவின் உதவியோடு கயிற்றின் மறுமுனையை உறுதியாகப் பற்றி இழுத்தான் டைகர்...
ம்ம்... இழு - விடாதே!
இர்ண்டு மூன்று தடவை கடுமையாக முயன்ற பின் முயற்சி வெற்றியளித்தது...
க்ராங்
?
ஹா... ஏதோ சரிந்து விழுந்துவிட்ட மாதிரி தோன்றுகிறது


ஓரிரு கணங்கள் செய்வதறியாது தயங்கிநின்ற எல்மோரோ திரும்பி நடந்தான் - வழியில் அவ்வப்போது சுரங்கத்தின் சுவர்களை பரிசீலன் செய்தவாறே!
அட அநியாயமே!
எதிர்பாராத அசம்பாவிதம்! நல்ல காலம்... அந்த இடிபாடுகளுக்கு அடியில் நான் மாட்டிக் கொண்டுவிடவில்லை!
ஓ.கே. இதை சரி செய்வதைப் பற்றி அப்புறம் ஆலோசிக்கலாம்... முதலில் ரேஞ்சரை ஒழித்துக்கட்ட வேண்டும்
சற்றைக்கெல்லாம் -
அட... எங்கே காணோம்! தப்பி ஓடிப் போயிருக்க வாய்ப்பே இல்லையே!
பெரெஸின் வேலையோ...! அவனுக்கு சீக்கிரமே ஒரு முடிவு கட்டும் அவசரத்தில் முன்னேற்பாடுகள் செய்ய கொண்டு போயிருப்பானோ?
ஹே... பெரெஸ் -வேடிக்கை எப்போது ஆரம்பிக்கும்?
எல்மோரோ வந்து சேரும்வரை சற்று பொறுமை யோடிருங்கள்
ரேஞ்சரை உயிரோடு தோலுரிக்கும் ஆனந்தக் காட்சியை கண்டு களிக்க துடிதுடித்துக் கொண்டிருக்கிறோம்
எல்மோரோ நேரத்திற்கு வந்துவிடக் கூடும்...!
நான் நினைத்த மாதிரியே அந்த பெரெஸ் மடையன் தான் ரேஞ்சரை கொண்டு போயிருக்கிறான்


அதோ எல்மோரேரா...
வருக... வருக..!
ரேஞ்சர் எங்கே -சொல்லுங்கள் ? நாங்கள் போய் கொண்டு வருகிறோம்
நீ என்ன சொல்கிறாய்?
ரேஞ்சர் உங்கள் வசம் இல்லையா?
எங்கள் வசமா? என்ன உளறுகிறாய்? உன் உத்தரவின்படி நாங்கள்....
சொல்ல வந்ததை பெரெஸ் சொல்லி முடிக்க அவகாசம் இல்லாமல் ஒரு முரட்டுக் குரல் கணீரென்று இருளினூடே எழுந்தது...
எல்லோரும் கைகளை உயர்த்துங்கள்... மடாலயத்தை என் ஆட்கள் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறார்கள் - ஜாக்கிரதை!
நாசமாகப் போக -நாம் மாட்டிக் கொண்டுவிட்டோம்
டுமீல்!
ம்ம்... ஓடிப் போய்விட வேண்டும்
ஆ...
டுமீல்!
டுமீல்!
ஐயோ...
விடாதீர்கள்... விரட்டிப் பிடியுங்கள்
டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்!
யாயா ஹிஹி...


ஆஆ...
டுமீல்! டுமீல்
யாஹூ!
ஆஆ...
சண்டாளன்
அந்த கிராதகன் நைச்சியமாக தப்பியோடிவிட நினைத்தால் அவனுக்கு இங்கே ஒரு அதிர்ச்சி காத்துக் கொண்டிருக்கிறது
தப்பி வெளியேறுவது சுலபமில்லைதான்... ஆனாலும் புதிரான இந்தச் சுரங்கத்தினுள் என்னை தேடிப் பிடிப்பது அவர்களால் முடியாத காரியம்...
எல்மோரோ... நில் அப்படியே
ரேஞ்சர்...! தொலைந்து போ!
டுமீல் டுமீல்
யார் என்று கேட்டீர்களல்லவா ட்ரென்டன்... நீங்களே வந்து பார்த்துக் கொள்ளுங்கள்
அடக் கடவுளே..! இது - டான் ப்லிப் அல்லவா!




யார்தான் நினைத்துப் பார்த்திருப்பார்கள்? மிகப் பெரிய பண்ணையின் சொந்தக்காரர்... ஏகப்பட்ட கால்நடைகளுக்கு அதிபதி... பெரும் செல்வந்தர் - அவரா இப்படி?
பணத்தாசை யாரை விட்டது...! மேலும் மேலும் செல்வம் குவிக்க வேண்டும் என்ற பேராசை... அழிவுக்கு வித்திட்டு விட்டது!
மூன்றும்.




ஏப்ரல் '97-ல்
டெக்ஸ் வில்லர் குழுவின்
மிகப்பெரிய சாகஸ விருந்து!
கோடை மலராக வருகிறது!
பக்கங்கள் - 250
விலை - ரூ. 25/-
விபரங்கள் விரைவில்...
லயன் காமிக்ஸ்

## லயன் வாசகர் வட்டம்



பெயர் : K. கருப்பண்ணன் வயது : 22

கல்வித் தகுதி : +2

முகவரி : K. கருப்பண்ணன்,
ஸ்ரீ பழனிமுருகன் பைனான்ஸ்,
ஆனங்கூர் - 637 213
பரமத்தி - வேலூர் (T.K) சேலம் (D.T)

பொழுதுபோக்குகள் : காமிக்ஸ், க்ரைம் நாவல் படித்தல், செஸ் விளையாடுதல், திரைப்பாடல் கேட்பது.



பெயர் : M. அதிவீரராம பாண்டியன் வயது : 18

கல்வித் தகுதி : தற்போது பன்னிரெண்டு


முகவரி : M. அதிவீரராம பாண்டியன்
20-A, பாரதிநகர்,
சிவகாசி.

பொழுதுபோக்குகள் : புத்தகங்கள் படித்தல், டி.வி. பார்த்தல், படம் வரைதல்.




நரகத்தைப் பார்த்தேன்...!
10
ஒரு புத்தாண்டு தினத்தில் அம்மா சுகவீனமடைந்தாள்..
டா... டாக்டர் அம்மாவுக்கு...?
இன்று இரவு அபாய கட்டத்தைக் கடக்க வேண்டும். எது நேர்ந்தாலும் சந்திக்கத் தயாராக இருங்கள்!
நான் வீட்டை விட்டு வெளியேறினேன். அம்மா சுகம் பெற எல்லா வகையான மருந்துகளையும், சேகரித்தேன்.
இந்த நிலையில் அம்மா சாகக்கூடாது! அவள் பட்ட வேதனைகள் எல்லாம் போதும்! அவளுக்கு நான் நிறைய வசதிகள் செய்ய வேண்டும் அந்த நினைவுகளே அவளுக்கு இருக்க வேண்டும்...
என் அம்மா உயிர் பிழைத்தாள். ஆனால் அடுத்த மூன்று ஆண்டுகளையும் ஹிரோஷிமாவில் அணு குண்டு வீச்சால் பாதிக்கப்பட்டவர்களின் ஆஸ்பத்திரியில் அவள் கழிக்க வேண்டியதாகிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவளது உடல்நிலை தேறியது.
இந்த கால கட்டத்தில் காமிக்ஸை முழு நேரமும் வரைவதில் செலவிட வேண்டியதாயிற்று. அதுவே என்னை தேற்றியது..
நீ ஹிரோஷிமாவிலேயே இருந்தால் எதுவும் ஏற்படப் போவதில்லை! நீ டோக்கியோவிற்கு போ கெய்ஜி...! அங்கு போய் திறமையைக் காட்டு!
மீண்டும் வாலைச் சுருட்டிக் கொண்டு இங்கு வந்துவிடாதே


ஒரு சித்திரக் கலைஞனாக மாற நான் டோக்கியோ போகிறேன், அம்மா!
அந்த வழியை நீ தேர்ந்தெடுத்தால், கெய்ஜி உன்னால் முடிந்த வரை நன்றாகச் செய்!
அடுத்த தடவை நான் வீட்டிற்கு வரும் போது நீங்கள் சொந்தக் காலில் நிற்பதைக் காணவேண்டும்! அதன் பிறகு டோக்கியோ நகர் முழுவதையும் உங்களுக்குச் சுற்றிக் காட்டுவேன்!
ரொம்ப நல்லது டியர்...
'எனக்கு 22 வயதான போது டோக்கியோவிற்குப் புறப்பட்டுச் சென்றேன். எதை எதிர்பார்த்து நான் போகிறேன் என்பதற்கான ஐடியா கூட எனக்கில்லை!'
'ரெயில் அங்கிருந்து கிளம்பிய போது ஹிரோஷிமா நகரை விட்டுப் போவது குறித்து கண்ணீர் சிந்தினேன். ரெயிலில் இருந்து குதிக்க கூட விரும்பினேன்!'
நோ! இப்படிச் செய்வது முட்டாள் தனம்! நான் போவேன். நான் எப்போதும் வரைய விரும்பிய காமிக்ஸ்களை அங்கு போய் வரைவேன்...!
'டோக்கியோவில் ஃபூமியோ இஸ்ஹி என்ற ஆசிரியர் என்னுடைய சித்திரங்களைப் பார்த்தார். உடனே அவர் டெய்ஜி குஸுமி என்பவருக்கு உதவியாளராக இருக்கும்படி வேலை கொடுத்தார். ஒரு சின்னஞ்சிறு அறையில் தங்கினேன்.'
'கார்டூன்களை வரைவது மேலும் மேலும் கடின்மான வேலைபோல் எனக்குத் தெரிந்தது.'
'ஆறுமாதம் சென்ற பின்பு, சிறுவர்களுக்கான சித்திரக் கதைகளை வெளியிடும் நிறுவனத்தில் ஓர் ஆண்டு தொடர்ச்சியாக வெளியிடக்கூடிய கதை ஒன்றை விற்றேன். இதேபோல சிறுவர்களின் பத்திரிக்கைக்கு பல்வேறு கதைகளை விற்றேன்.'



வாகி இஸுஜி எனபவரிடமும் ஓர் ஆண்டு உதவியாளராகப் பணியாற்றினேன்.'
லம் பறந்தோடியது...
ங்கு வந்து அதற்குள் 5 ஆண்டுகள் ஆகிவிட்டன!
ண்டும் அம்மாவின் முகத்தைக காண இது தான் சரியான நேரம்...
' ஐந்து ஆண்டுகள் கழி, ஹிரோஷிமாவுக்குத் திரும்பினேன். என் அம்மா சுகமாக, இருந்தாள். ஆனால் அவளால் இன்றும் சுதந்திரமாக நடமாட முடியவில்லை!
' என்னைக் கண்ட உடன் அம்மா அழுதாள். அம்மா அழுவதை முதல் தடவையாக அப்போது தான் கண்டேன்.'
உன்னுடைய காமிக்ஸ் வெளிவந்த எல்லா இதழ்களையும் வைத்திருக்கிறேன்! உன்னை நினைத்து ரொம்பப் பெருமைப்படுகிறேன், கெய்ஜி!
போர் நடந்த போதும் அணுகுண்டு வீசப்பட்டபோதும் அவள் கண்ணீர் சிந்தியதில்லை. ஆனால் என்னைக் கண்டவுடன் அழுதாள்.'
'பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பற்றி உண்மையிலேயே பெருமைப் படுவதை நான் உணர்ந்தேன்.'
சீக்கிரம் குணமாகி விடுவீர்கள், அம்மா! அப்போது தான் என்னால் உங்களை டோக்கியோவிற்குக் கூட்டிப் போக முடியும்!
' நான் ஹிரோஷிமாவுக்கு போன அந்தப் பயணத்தின் போது ஒரு பெண்ணைச் சந்தித்தேன். இப்போது அவள் தான் என் மனைவி.'
'எனக்கு 27 வயதானபோது எனது காதலியை ஹிரோஷிமாவில் திருமணம் செய்து கொண்டேன்'
தொடரும்

# புலி வருது! வாசகர் கடிதம்



**A. செந்தில் குமார்,**

உதகமண்டல

இதுவரை வந்த லயனின் வெளியீட்டில் மிகவும் அருமையா அட்டைப்படம் இதுதான்! இது போன்ற அட்டைப்படங்களை இ வெளியிடுங்கள்! கதை நன்றாக இருந்தது!

**M. இராஜவேல், M. இராஜ்குமார்.**

அருப்புக்கோட்டை

புரபஸர் லாம்பெட்டை காப்பாற்றிய மாடஸ்டி & கார்வின் லோடி நம்ம ஊ ராமர் பிள்ளையை (தண்ணீரிலிருந்து பெட்ரோல் கண்டறிந்தவ காப்பாற்றுவார்களா?

**ச. முருகன்,**

பேரையூர்

மாடஸ்டியின் ''புலிவருது'' இதழின் அட்டைப்படம் அருமை. கதை திகிலாகவும் நகைச்சுவையாகவும் இருந்தது. இந்த அட்டைப் படத்திலாவது வில்லிக்கு ஒரு சான்ஸ் கொடுத்தீர்களே!

**G. முத்துகிருஷ்ணன்,**

சென்னை - 114.

''புலி வருது'' அட்டைப்படம் பாராட்டும்படி உள்ளது. கதை **Average** மாடஸ்டி கதைப் போல தான் உள்ளது. Special ஆக இல்லை.

**V. பரமசிவம்,**

கவுந்தி.

டெக்ஸ்வில்லர் கதை எத்தனை விலை (Rs. 30 அல்லது Rs. 40) ஆனாலும் ஒரே பாகமாக வெளியிடவும். என்து அன்பான வேண்டுகோள் இது. இரத்தப் படலம் VII ஐ விரைவில் எதிர்பார்க்கிறேன். ஸ்பைடர் என்ன ஆனார்?


லயன் காமிக்ஸ்

**ஆண்டுச் சந்தா**

**லயன் காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 75/-**


**முத்து காமிக்ஸ் - ஓராண்டுச் சந்தா - ரூ. 60/-**

**ஓராண்டுக்குக் குறைவான சந்தா ஏற்க இயலாது.**

# மாதம் ஒரு வாசகர்



| | | |
|---|---|---|
| வாசகர் பெயர் | : | வ. பிரகதீஸ். |
| முகவரி | : | 75, மெனிங் பிளேஸ்,<br>கொழும்பு - 06. |
| வகுப்பு | : | எட்டாம் வகுப்பு |
| பொழுதுபோக்கு | : | காமிக்ஸ் புக் சேகரிப்பது,<br>லயன் காமிக்ஸ் படிப்பது (2 வருடமாய்) |
| முதல் கதை | : | பாட்டில் பூதம் |
| லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி | : | நண்பன் மூலம் |
| நீங்கள் படிக்கும் இதர பத்திரிகைகள் | : | தினமுரசு, ராணி காமிக்ஸ் |
| இதுவரை வந்த லயன் காமிக்ஸில் நீங்கள் மிகவும் ரசித்து படித்தது எந்தக் கதை ? | : | பாட்டிலில் பூதம், டாக்டர் டக்கர், டெக்ஸ் வில்லர். |
| உங்களை தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? | : | ஆம். என் அப்பாவும், அக்காவும். |
| படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள் | : | சேர்த்து வைத்திருக்கிறேன். |



# வாசகர் ஹாட்லைன்

மதிப்பிற்குறிய ஆசிரியர் விஜயன் அவர்களுக்கு,

நான் ஒரு லயன் வாசகன் என்பதால் சில கருத்துக்களை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சமீப காலமாக நீங்கள் விளம்பரப்படுத்தும் கதைகள் எதுவும் வெளியிடுவதில்லை. கீழ்கண்ட இதழ்கள் விளம்பரத்தோடு வெளிவராமல் அப்படியே இருக்கின்றன.

1) மூன் தீவு மர்மம் - லயன் செஞ்சுவரி ஸ்பெஷல்
2) கம்ப்யூட்டர் கொலைகள் - பல புத்தகங்களில்
3) ஒரு தவளையைத் தேடி...!
4) மிஸ்டர் மரணம் - பிரின்ஸ் in Africa.
5) ஒரு கோச் வண்டியின் கதை
6) நடுங்க வைக்கு நிஜங்கள்
7) பெர்முடா படலம் - லயன் Top 10 ஸ்பெசல்
8) மரண தூதன் - லயன் Top 10 ஸ்பெசல்
9) திகில் நகரில் டெக்ஸ் - விபரீத விதவை
10) MR. மஹாராஜா - விபரீத விதவை
11) இருளின் மைந்தர்கள் - திகில் நகரம் டோக்யோ
12) பூத வேட்டை!

இவைகளை தயவுசெய்து இனிமேலாவது வெளியிடுங்கள்.

முக்கியமாக இன்னொன்று பழைய ஹீரோக்களான ஸ்பைடர், ஆர்ச்சி, இரட்டை வேட்டையர், நார்மன் போன்றோரை மறந்தது. எப்படியாவது இவர்களை திரும்ப கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடுவீர் என நம்புகிறேன். ஆமாம் மறுபதிப்பு என்ன ஆயிற்று சார் ?

இப்படிக்கு,
என்றும் அன்புடன்,
ர. திருநாவுக்கரசு,
வழுக்குப்பாறை.

## ஆசிரியர் பதில் :

எக்கச்சக்கமான ஞாபகசக்தியோடு - எக்கச்சக்கமான கேள்விகள் கேட்டுள்ள வாசகருக்கு இதோ பதில்.

**I. 1. "மூன்தீவு மர்மம்"**

இந்தக் கதையினை பம்பாயிலிருந்து வெளிவந்த "இந்திரஜால் காமிக்ஸ்" ஏற்கனவே தமிழில் வெளியிட்டு விட்டனர். தவிர - ஏஜெண்ட் காரிகனின் கதை இது! காரிகன் கதைகளை "மேகலா காமிக்ஸ்" சில மாதங்களாய் வெளியிட்டு வந்ததால் 'மூன் தீவு மர்மம்' மூலையில் உறங்க நேரிட்டது. தற்போது 'மேகலா' வருவதில்லையாதலால் - காரிகன் மீண்டும் ஒரு ரவுண்ட் வருவார் நமது லயனில்.

2. கம்ப்யூட்டர் கொலைகள் - வந்து விட்டதே!

3. "ஒரு தவளையைத் தேடி"

இயந்திரப் போலீஸ்காரரான 'மிஸ்டர் ஜெட்டின்' கதை இது! துரதிர்ஷ்டவசமாக - இக்கதையினை வெளியிட்டு வந்த அயல்நாட்டு நிறுவனம் (ஏதோ பிரச்சனைகளால்) திடீரென்று மூடப்பட்டு விட்டது! So - கதைக்கான உரிமைகளைப் பெற இயலவில்லை.

4. மிஸ்டர் மரணம்! :

போன கேள்விக்கான அதே பதில் தான் இதற்கும்!

ரு கோச் வண்டியின் கதை :

லக்கி லூக்கின் அடுத்த சாகஸம் இது தான்!

டுங்க வைக்கும் நிஜங்கள் :

கதைகள் மொழிபெயர்ப்பில் உள்ளன! '97ல் எதிர்பார்க்கலாம்!

பர்முடா படலம் :

லயனின் ஆரம்ப வருடத்தில் ஒரேயொரு சாகஸம் செய்திட்ட மீட்போர் ஸ்தாபனத்தினரின் கதை இது! இதனையும் கூட - தமிழில் வேறு ஒரு பத்திரிக்கை பிரசுரித்துவிட்டது என்று தெரிய வந்தேன்! So - repeat வேண்டாமே?

8. மரண தூதன் :

9. திகில் நகரில் டெக்ஸ் :

இரண்டுக்கும் ஒரே பதில்! கதைகளின் நீளம் காரணமாய் டெக்ஸ் கதைகளை ஸ்பெஷல் வெளியீடுகளில் மட்டுமே போட முடிகின்றது! So - பொறுமை ப்ளீஸ்!

10. மிஸ்டர் மகாராஜா :

சிக் பில் குழுவினரின் கார்டூன் கதை இது! நமது "மினி லயன்" காமிக்ஸ் தற்போது வராமலிருப்பதால் கார்டூன் கதைகளுக்கு சரியான சான்ஸ் தர முடியாமலே போய் வருகிறது! எனினும் அடுத்த ஸ்பெஷல் வெளியீட்டிற்குள் மிஸ்டர் மகாராஜாவிற்கு இடம் ஒதுக்கப் பார்க்கிறேன்! (அது சரி - மீண்டும் **மினி** - லயனை கொண்டு வரலாமா?)

11. இருளின் மைந்தர்கள் :

12. பூத வேட்டை :

பதில் நம்பர் 8 & 9 பார்க்க!

II. "புது ஹீரோக்கள் பற்றி சேதி இல்லையே . . . ?

இந்தக் குற்றச்சாட்டில் நிஜம் உள்ளது! சமீபத்திய புதுமுகங்கள் அனைவருக்கும் நமது முத்து காமிக்ஸில் சந்தர்ப்பம் தரப்பட்டுள்ளது! (கேப்டன் டைகர்; டைனமைட் ரெக்ஸ்; கேப்டன் அலெக்ஸாண்டர், சி.ஐ.டி. ராபின் etc...)

So - லயனிற்கு அடுத்த set புதுமுகங்கள்! அடுத்த மாதம் புது கார்ட்டூன் ஹீரோ அறிமுகம் ஆகிறாரே!


III. பழைய ஹீரோக்கள் என்ன ஆனார்கள்?

ஏற்கனவே (இதே பகுதியில்) இதற்கான பதில் எழுதியிருக்கிறேன்!

IV. மறுபதிப்பு?

நல்ல ஹீரோக்கள்; புத்தம் புதிய கதைகள் என்று இப்போது தான் ஒரு groove க்குள் செட்டில் ஆகி வருகிறோம்! இந்த வேகத்தை மறுபதிப்புகள் தடை செய்யுமென நினைப்பதால் - மறுபதிப்புகளுக்கு தற்காலிக டாடா!

அன்புடன்,
S. விஜயன்.





# க்ரைம் - க்விஸ் 32 - விடை




"புலி வருது" இதழில் வந்திருந்த க்ரைம் - க்விஸ் 32க்கு சரியான விடை யாருமே எழுதிடவில்லை! (இது மிகவும் நுணுக்கமான புதிர் என்பதாலோ என்னவோ தெரியவில்லை!)

## சரியான விடை


இன்ஸ்பெக்டர் டேஞ்சர் வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது சூரியன் அஸ்தமன வேளை. காரின் இடதுபுறம் சூரியன் உள்ளதால் **அந்தத் திசை** மேற்கு. இலண்டன் நேர்சாலையில் உள்ளதாக மைல் கல் **காட்டுகிறது. So** - இலண்டன் இருப்பது வடக்கு திசையில்.

கொலை நடந்த கிராமத்திற்கு சாலையிலிருந்து கிழக்காகப் **போக** வேண்டியுள்ளது. So - கிராமம் இருப்பது கிழக்கில்!




**So** - மிஸ்டர் ரைலி சொல்வது போல அவர் இலண்டன் போய் விட்டு திரும்பியிருப்பாரேயானால் - அது வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பயணம். அப்பட்சத்தில் சூரியன் அவருக்குப் பின்னே தான் இருந்திருக்க வேண்டும்! ஆனால் மிஸ்டர் ரைலியோ முகத்தில் வெயில் படாமல் இருப்பதற்காக காரின் **Sun shade** ஐ இறக்கி வைத்துள்ளார்! வெயில் முன்னே இல்லாத போது **Sun shade** எதற்கு?

ஆக மிஸ்டர் ரைலி சொல்வது பொய்! கொலை செய்து விட்டு அலிபிக்காக பொய் சொல்கிறார்!


விரைவில் வருகிறது!
லயன் காமிக்ஸ்
லக்கி லூக் தோன்றும்
ஒரு கோச் வண்டியின் கதை!




வாசக ஓவியர்: ச.காணிக்கைராஜ், 139-அ.சீனிவாசபுரம்
கடாரங்கொண்டான்-610003.



...ங்கும் தேர்தலைப் பற்றியே ...பேச்சு...
...இப்ப நடக்கிறது புது மாதிரியான ...தேர்தல். அதிக செலவில்லை ...ண்ணாவிகள் கூட இல்லை.
என்னது!?
?
ஆமாம், வாக்காளர்கள் நபர் ஒன்றுக்கு ஒரு சிறிய கல் எடுத்து வந்து பிடித்த வேட்பாளரின் முன் வைத்தால் போதும். முடிவில் கற்கள் எண்ணப்பட்டு வெற்றி தோல்வியை அறிவிப்பார்கள்!
கிழிஞ்சுது போ..!
...தேர்தல் நாளன்று...
...டேய் பரட்டை! இன்னிக்காவது குளிச்சு சுத்தமா தேர்தல் களத்துக்கு வந்து சேரு...!
ஹி ஹி
ஹா.. ஹா! ஹா..!
ஞே...
நானும் குளிச்சிட்டு கஜா வின் மேல் ஏறிக் கிளம்பறேன் அதோ கஜா...!
அடேய் என் நண்பனே, கஜா...! கிளம்பு. குளத்திற்குப் போய் குளித்து விட்டு வருவோம்..!
?


குளத்துக்குப் போகும் வழியில்...
டேய் கஜா! எதுக்குடா நீ இவ்வள பெரிய கல்லைத் தூக்-கிட்டு திரியறே?
இதுதான் என்னோட வாக்கு...! உனக்காக போடனுமி-ல்லையா இன்னு..!
அடப்பாவி! இந்த கல்லை என் தலையில் ஏதும் போட்டு தொலைத்து விடாதே...!
பரட்டை எனக்கு ஒரு சந்தேக
என்னவாம்.., சொல்லித்தொலை வாத்தக்கா...!
என் அலகால் இந்த கல் தூக்கிட்டுப் போகிற வேலையெல்லாம் ஆகாது! அதற்கு பதிலா பேசாம அங்கே வந்து உன் எதிரே ஒரு முட்டை போட்டு விடுகிறேனே சம்மதமா...?
அடச்சீ! அந்த மாதிரி ஏதும் செய்து விடாதே! பிறகு அது செல்லாத வாக்காகிவிடும் முட்டாள்..!
என்ன தேர்தலோ, மண்ணாங்கட்டி! இவ்வளவு சந்தேகமான கேள்வியெல்லாம் எழுகிறது.. எப்படி ஜெயிக்கப் போறேனோ!
அடடா பரட்டை இங்கே பார் குளத்தில் தண்ணீர் ரொம்பவும் வற்றிடுச்சே!


டய் கஜா தண்ணீரை உறிஞ்சி
வாளி நீர் மாதிரி ன் மீது கொட்டு!
ய் பரட்டை
ருக்கிற
ணீரையும்
சிட்டா
கதி?
கொஞ்சூண்டு
குளிச்சிக்-
-கிறேனடா
கண்ணுகளா!
தயாரா இரு பரட்டை
தண்ணீரை உன்மேல்
கொட்டப்
போறேன்!
டேய் கஜா வெள்ளியும்
அதுவுமா இப்படி மீன்
நாற்றத்தோட வாக்கு
சாலைக்குப் போனா இன்-
னிக்கு நான் சைவம்னு
எவனும் நம்ப மாட்டான்.
பொய்யன் பாங்களே...!
ஐயையோ!
மீன்களா...!
அடப்பாவி
கஜா நிறுத்துடா!
பரவாயில்லை
நேரமாச்சு, சீக்கிரம்
புறப்படு..!


அங்கே தேர்தல் களத்தில் குரங்காரு-
க்கு கல் வாக்குகள் குவிகின்றன...
குரங்கார்
பரட்டைக்கும் வாக்குகள் வந்து விழுகின்றன...
பரட்டையை எங்கே இன்னும் காணோமே..!
பரட்டை
ஒரு முறை வாக்கிட்டவர்கள் வர்ணத்தால் குறியிடப்பட்டார்கள்.
ம்.. சீக்கிரம் ஆகட்டும்...
அதோ வாக்களிப்பு நடந்து கொண்டிருக்கு சீக்கிரம் நாம் போய் கலந்துக்கனும்...!
சே! இந்த பரட்டை மேல என்ன ஒரு துர்நாற்றம்..!


குரங்கானுக்கு வாக்கு அதிகமா ஆகிறா-
-ப்போலத் தெரியுது. நீயும் நேரத்தோட
வந்திருந்தா உனக்கு அதிகமாயிருக்கும் பரட்டை
போ, போய் அங்கே உட்காரு..!
வாத்தக்காவுக்கும்
மாபெரும் பிரச்சனை.
வேணாண்டா கஜா, இந்த
மீன் வாசனை பிடிக்காம
எல்லாரும் எனக்கு வாக்க
ளிக்காம விலகிட்டாங்க
ஒதுங்கியே நிற்போம்!
அம்மாடி
இந்த கல் எவ்வளவு
கனமாயிருக்கு!
இனி ஒரு அடி எடுத்து
வைக்க முடியாது,
அட! இப்படி ஒரு
வேலை செய்யலாமே!
கல்லோடு சேர்த்து இப்படி இழுத்து
விட்டா பரட்டையோட இடத்தில்
போய் விழுந்திடும்...!
உய்ய்ய்ங்ங்
வெற்றி!
வெற்றி!!
இந்த கொம்பில்
வாரை மாட்டி....
பட்
ஐயோ அந்த
கல் கஜாவின்
கண்ணிலா
பட வேண்டும்.
ஆ...



முழு விசையோடு வந்த கல் கண்ணில் படவே வலியால் கஜா துள்ள...
ஐயோ! கண் போச்சே!
யாரடா. மடையன். கஜா மேல் கல்லெறிந்தது.. ஆவ்..!
வலி தாங்கலை ஐயோ..!
பரட்டை நிலை தடுமாறி தலை குப்புற வர்ணக் கலவையை நோக்கி விழ...
சுதாரித்து மேலே எழுந்து வந்த பரட்டையைக் கண்ட கஜா மேலும் அலறியது...
ஆவ்வ்வ் பே.. பேய்.. கரும் பிசாசு ஐயோ!



ரட்டையின் தோற்றம் மற்ற
விலங்குகளையும் கலவரப் படுத்த...
ஐயோ! பேய்! அடி..!
அம்மாடி! கல்... தலை போச்சு! முதுகு போச்சு!
அடச்சீ! என்னை அடையாளமே தெரியலையா!
பேசாம அந்த மரப் பொந்துக் குள்ளே போயிடலாம்!
அந்தப் பிசாசு மரப் பொந்தில் புகுந்துடுது விடாதே! அடி..!
பட்
பளர்
பட்
கிட்டே போகவேணாம்! எட்ட நின்னே கல்லெறியலாம். ம்... அடிங்க...!


கஜாவும் அவனுடைய தோழர்-
-களும் தண்ணீரை பீய்ச்சியடிக்க..
கல்லைறிஞ்சே பாதி பொந்தை மூடிட்டானுங்க இப்போ இது ஒரு வழிதான் உண்டு!
தண்ணீர் வைத்தியத்திற்கு பலனிருந்தது... பரட்டைக்கு சாயம் கலைய...
எல்லேய்ய்.. முட்டாப் பசங்களா.. மூச்சு திணறுது.. ம்..ஹ்.. தண்ணீர் கொ.. கொட்டுவதை நிறுத்துங்கடா.. ம்.. ஹம்.... ஹப்... ஹப்பா...!
போதும்டா சாமி..!
அட! இது நம்ப பரட்டை..!
?
அட்டகாசம் போ. பரட்டை!
அட! நம்ப பரட்டை கற்கள் மேலே உக்காந்திருக்கிற கம்பீரமே தனிதான்!
இவ்வளவு வாக்கு கல் குவிஞ்சிடுதே!
அப்போ பரட்டை அதிக வாக்குகளில் ஜெயிச்சுட்டான்..!


பரட்டைதான் எங்க ராஜா!
...லா மிருகங்களும் பரட்டையை ...ந்து கொண்டு பாராட்டலாயின.
என்னடாது ஒன்னுமே புரியலையே!
ஆமாம் பரட்டை தேர்தல் விதிப்படி அதிகமான வாக்கு கற்களைப் பெறுபவரே ஜெயித்தவர் இல்லையா?
...தன்படியே பார்க்கும் போது ...திகமான கற்கள் தற்போது ...க்குத்தான் கிடைத்துள்ளன ...வே நீதான் ராஜா.
அநியாயம்! எனக்கு விழ வேண்டிய வாக்குகளெல்லாம் அநியாயமா பரட்டை-க்கு விழுந்துடுச்சு இதை எப்படி ஏத்துக் கொள்வது?
முடியாது! ... முடியாது..!
கொஞ்சம் பொறு குரங்கா!
இரு குரங்கா நான் என்னோட வாக்கை போட்டுடறேன், ஓடாதே!
ஐயோ! காப்பாத்துங்க..!


அடுத்த வெளியீடு!




# ஒரு நிமிஷம் ப்ளீஸ்...!

**"வாசகர் ஸ்பாட்-லைட்"** பகுதி சமீப மாதங்களாக் நமது லயனில் இடம் பெறுவதில்லை! (காரணம் தான் தெரியுமே!) அதற்கு மீறி வந்தாலும் மிகக் குறைவான பக்கங்கள் தான் ஒதுக்கி வருகிறேன்!

**ஆனால்** - ஒரிரு மாதங்களுக்கு முன்னர் வாசக ஓவியர் காணிக்கராஜ் ஒரு 10 பக்கக் கதையை எழுதி; வரைந்து அனுப்பியிருந்தார். மிகவும் தரமான படைப்பு! இதற்கும் நமது மாமூலான அளவுகோலைப் பயன்படுத்தி "நீளமான கதைகளைப் பிரசுரிக்க முடியாது" என்று சொல்வது பொருத்தமாகப் படவில்லை! So - இந்த மாத **ஸ்பாட்-லைட்** மூலம் நண்பர் காணிக்கராஜின் திறமையை **highlight** செய்துள்ளேன்! **Congrats!**



இது போன்ற தரமான கதைகள் அனுப்பினால் நிச்சயம் பிரசுரமாகும்!



**Flash!**

திரைப்பட விமர்சனத்திற்கென்று அநேகமாக எல்லா பத்திரிகைகளிலும் ஒரு பக்கம் உண்டு! நமது லயனில் வரும் கதைகளை **Comprehensive** ஆக விமர்சனம் செய்து எழுதினால் எப்படி இருக்கும்? So - அடுத்த இதழ் முதல் வாசகர் கடிதம் பகுதி தவிர, விமர்சனப் பகுதியும் இடம் பெறும்! இந்த தீபாவளி மலர் வெளியீட்டிலிருந்து உங்கள் விமர்சனங்களைத் தொடங்கலாமே...?!



**S. விஜயன்**

# மர்ம மோதிரம்!



ஒரு திகில் சிறுகதை!
1935ம் வருஷம், இங்கிலாந்தின் பார்ன்மவுத்தில் ரயில்வே தொழிலாளி ஒருவர் இரவில் தண்டவாளத்தை பரிசோதித்த வண்ணம் சென்றார். அப்போது பாலத்தின் அடியில் இருந்த குளக்கரையில் பளிச்சென்று மின்னிய பொருள் ஒன்று அவருடைய கவனத்தைக் கவர்ந்தது.....
அங்கு என்ன மின்னுகிறது? உள்ளே இருந்தல்லவா வெளிச்சம் வருகிறது... ஆனால் ஒரு கத்தி போலத் தெரிகிறதே!
ஏதோ ஒரு வகை கத்தி தான்!
ஆனால் அந்த இடத்தை அடைந்தபோது...
காணோமே! இப்பத்தான் என் இரு கண்ணாலும் பார்த்தேனே! ஆனால் ஒன்றையும் காணோமே! ஐயோ இதை நினைத்தாலே உடம்பு நடுங்குதே!
அது என்ன? கிறுக்குத்தனமாக குளத்தின் தண்ணீர் தானாக சுத்துதே! செந்நிறத்தில் சுழல்சுழலாக வருதே! இந்த நீரை எது சுழலச் செய்கிறது?


சுழலும் தண்ணீரின் மத்தியில்.....
... பெண்ணின் கை!
...பாவம்! மூழ்கி விடுவாளே...
வர்றேன்! உன்னை அங்கிருந்து
வெளியே இழுக்கிறேன்!
வியப்பினால் திருதிருவென விழித்த கண் எதிரே.....
மறைந்துவிட்டதே! இந்தக் கை மறைந்து விட்டதே! கை நீரில் மூழ்கவில்லையே! எப்படி.... மாயமாய் மறைந்தது! இதை போலீசில் சொல்வது தான் நல்லது!
தலில் கத்தி... பின்னர் தேங்கிக் கிடக்கும் தண்ணீரில் நீர் சுழலுக்கு மத்தியில் ஒரு பெண்ணின் கை... அப்புறம் இரண்டும் றைந்து விட்டது! நாளைக் காலை யாராவது ஒருவரை அங்கு அனுப்புகிறேன்!
சார்! அங்கே நான் பார்த்தது ஏதோ ஒரு அமானுஷ்ய நிகழ்ச்சியை! உடனே போய் பார்க்கலாமே சார்?


மறுநாள் காலையில்
ஹூம்ம்! காய்ந்த இந்த நிலப்பகுதியில் உங்களுடைய கால் தடத்தைத்தான் என்னால் பார்க்க முடிகிறது. ஆனால் கத்தி இங்குதான் கிடந்தது என்பதற்கான அறிகுறி எதுவும் இல்லையே! ஒருக்கால் மிகவும் எடையற்ற கத்தியாக இருந்ததால் அதன் அடையாளம் பதியவில்லை போலும்!
இந்த இடத்தில் தான் நீரில் சுழல் தெரிந்த அதனுள்ளே இருந்துதான் ஒரு பெண்ணி கை எழுந்தது!
இப்போது தண்ணீர் மிகவும் அமைதியாக உள்ளதே!
குளத்தின் அடியில் பிணம் எதுவும் கிடக்கும் என நான் நினைக்கவில்லை. ஆனால் அப்போது தண்ணீருக்கு மேலே ஒரு கையை மட்டும் பார்த்ததாகச் சொன்னாயே.....
வெறும் கையல்ல! ஒரு பெரிய மாணிக்ககல் மோதிரமும் கையில் இருந்தது! பகலில் பார்ப்பது போலப் பார்த்தேன்!
நீங்கள் என்னை நம்பவில்லையா? நான் கனவு கண்டேன் என நினைக்கிறீர்களா அல்லது கயிறு திரிக்கிறேன் என நினைக்கிறீர்களா?
நீங்கள் கொடுத்த புகாரை பதிவு செய்து கொண்டேன்! நான் எதையும் முடிவு செய்யவில்லை!



ண்டு நாள் இரவுக்குப் பின் உள்ளூர் பள்ளி ரிியை மேரி சைக்கிளில் வீடு திரும்பிக் ண்டிருந்தாள்...
எங்கே இருந்து இவள் வந்தாள்? ஒரு ினாடிக்கு முன்பு கூட அங்கு நான் ரயும் பார்க்கவில்லையே... ஏன் அவள் வீட்டை சுற்றிக் கொண்டு வருகிறாள்?
ிரியமான உருவம் அவள் அருகில் து.....
அவள் முகத்தில் மூக்கு, முழி எதையும் காணோமே!
நான் வேகமாக போயும் கூட அவள் என்னுடனே போட்டி போட்டுக் கொண்டு நடந்து வருகிறாளே! இதை நம்பமுடியவில்லையே!
ஒரு பே... பேயாகத் தான் இருக்க டும். ஆனால்... அந்த மாணிக்ககல் ம் உண்மையானது போல் உள்ளதே!



ஐயோ காணோமே!... ஒரு வினாடிக்கு முன் இங்கு இருந்தாள்-அடுத்த வினாடி.... ஒன்றுமில்லை! நேரில் பார்த்த என்னாலேயே இதை நம்பமுடியவில்லை! இந்த நிலையில் போலீசார் இதை எப்படி நம்புவார்கள்?
பின்னர் அன்று மாலை.....
மிஸ் மேரி. நீங்கள் பள்ளி ஆசிரியை என்பதால் உங்கள் புகாரை நான் மதிக்கிறேன்! ஆனால் பேயை நான் எப்ப விரட்டிச் செல்வது? அதுமட்டுமில்லாமல் இப்போது வேறு அவசர வேலையும் உள்ளது!
அப்படி என்னதான் வேலை சார்?
இந்த படத்தில் உள்ளவரை கொலை செய்த கொலையாளியை பிடிப்பது தான்! ரோலன்பரி கத்தியால் குத்திக் கொல்லப்பட்டு ஒரு மாதமாகிவிட்டது. அவரது மனைவியும் மாயமாய் மறைந்து விட்டாள்.
எனக்கு புரிகிறது... ஆனால் அங்குள்ள குளத்தை நீங்கள் ஆராய வேண்டும் என விரும்புகிறேன்!
உண்மையைச் சொல்லப் போனால், வேறு சில வினோத சம்பவங்களுக்காக நீங்கள் சொன்ன அதே குளத்திற்கு ஒரு ஆபீச் ரை அனுப்பினேன்! ஆனால் அவரால் ஒன்றும்....கண்டுபிடிக்க முடியவில்லை!
மிகவிரைவில் மாணிக்ககல் மோதிரம் அணிந்த பேய் பற்றி பரவலாக செய்தி பரவியது.....
பேய்கள் எல்லாம் உன் சமாச்சாரம் ரொனால்டு! என்ன செய்யப் போகிறாய்?
ஆவிகளுடன் பேசும் ஆற்றல் கொண்டவன் நான்! முதலில் அந்தக் குளத்திற்குப் போய் பார்க்கப் போகிறேன்!





நிரவு - ரொனால்டு அந்தக் ளத்திற்கு சென்று பார்வை யிட்டார்! ரென்று ஒரு ஆவி உருவம் ர் மீது மிதந்து வருவது தெரிந்தது!
நிலா வெளிச்சத்தில் பேய் உருவத்தின் கைவிரலில் இருந்த மாணிக்ககல் மோதிரம் மின்னியது. அந்த உருவம் கையை உயர்த்தி ரொனால்டை முன்னே வரும்படி சிக்னல் கொடுத்தது
வசியம் செய்யப்பட்டவர் போல ரொனால்டு தண்ணீரில் இறங்கி அந்த வத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்! க நடக்க ஆழம் அதிகரித்து நீரில் மூழ்கக் கூடிய நிலைக்கு எட்டினார்.
.தண்ணீரில் இருந்த கடுமையான குளிர்ச்சி அவரை சுயநினைவுக்கு கொண்டு வந்தது...
உடனே வெளியேற வேண்டும்...
ள் போய்விட்டாள்! ஆனால் இந்தக் ளத்தில் ஏதோ இருக்கிறது. என்னை தக் கண்டுபிடிக்க முயற்சி யும்படி சொல்லியுள்ளாள்!
நான் சொல்வதை நீங்கள் கவனிக்க வேண்டும்! ஏதோ மோசமான ஒன்று அந்த குளத்தில் உள்ளது! அதை வெளியே எடுக்க வேண்டும் அல்லது அந்த கெட்ட ஆவி நம்மை தொடர்ந்து வேட்டையாடும்...
நாங்கள் என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதை உங்களுக்குத் தெரிவிப்போம்!



அன்று பிற்பகலில்.....
இறந்தவர்களுடன் 'தொடர்பு' கொள்ளும் உன் சக்தியை நான் நம்புகிறேன்!
நிதானமாக இழு! ஏதோ சிக்கியுள்ளது... பெரிய அளவில் சிக்கியுள்ளது!
கவனமாக இழுத்து, மேலே கொண்டு வந்த பொருள் ஒரு கொடூரமான பரிசை அளித்தது...
அடையாளம் காண்பது கடினமாக உள்ளது ? யார் இந்தப் பெண் சார்! நீண்ட நாட்கள் இவள் தண்ணீருக்குள்ளேயே இருந்திருக்க வேண்டும்...
இந்த மாணிக்க மோதிரத்திலிருந்து... இவள் மிஸஸ் ரோலன்பரியாக இருக்க வேண்டும் ! நீரில் மூழ்கி இவள் செத்துப் போயிருக்கலாம் என நினைக்கிறேன்!
இதோ பார்! கத்திக்குத்து காயம்... அவளுடைய கணவன் உடலிலும் இதே போன்ற காயம் இருந்தது! ஒருவேளை அவள் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என நினைக்கிறேன்!


குளத்தை இன்னும் ஒரு தடவை சோதியுங்கள்!
இன்ஸ்பெக்டர்! மீண்டும் ஏதோ சிக்கியுள்ளதை வெளியே கொண்டு வருகிறோம்!
அ... அந்த வேடிக்கையான கத்தியைத் தான்... அன்று இரவு நான் பார்த்தேன்!
மலேயா கத்தி! இப்போது எல்லாமே புரிகிறது! மனவாழ்க்கையில் ஏற்பட்ட மோதலால் மிஸஸ் ரோலன்பரி கணவனை கொன்றுவிட்டு அவளும் குளத்தின் கரையில் தன்னைத்தானே குத்திக் கொண்டு நீரில் விழுந்திருக்க வேண்டும்!
எப்போது கொலையாளியின் விபரம் தெரிந்ததோ அது முதல் மாணிக்ககல் மோதிரம் அணிந்த அந்த பேயை குளத்தின் அருகில் ஒருபோதும் யாரும் பார்க்கவில்லை... நம்பினால் நம்புங்கள்




ஜார்ஜ் நோலனுடன் நீங்களும் துப்பறியலாம்!
அமெரிக்காவின் பென்ஸ்பர்க் நகர நெடுஞ்சாலை ரோந்துப் பிரிவு போலீஸ் அதிகாரி ஜார்ஜ் நோலன். காயிலான் கடை வியாபாரி சேத் ஹட்டரை ஒரு கும்பல் வழிப்பறி செய்யும் போது எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்தார்!
ஹேய்... உன்னைத்தான் -அங்கு என்ன கலாட்டா?
அங்கு எதையும் தேட அவசியமில்லை! அதைத்தான் இவன் அணிந்துள்ளான்!
வழிப்பறி செய்தவர்களை விரட்டுவதா அல்லது சேத் ஹட்டரைப் பார்ப்பதா என்ற கேள்வி எழுந்த போது... அவர்களைத் தப்பிச் செல்ல விட்டுவிட்டார்...
உனக்கு ஒன்றுமில்லையே சேத்?
இந்த நகருக்கு என்ன தான் வந்தது? போட்டிருந்த கோட்டைக் கூட களவாணிப் பசங்க உறிஞ்சுகிட்டு ஓடுறாங்களே?
அற்பமான வழிப்பறி ஜார்ஜுக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது...
முட்டாள் தனமாகத் தெரியவில்லை. கோட்டை மட்டும் அவர்கள் பறித்துச் செல்ல காரணம் இருக்க வேண்டும்! உன்னிடமிருந்து அவர்கள் வேறு எதையும் எடுக்கவில்லையே! அந்த கோட்டில் என்ன விஷேசம் உள்ளது?
எனக்கெப்படி அது தெரியும்? ஒரு மணி நேரத்திற்கு முன்பு தான் வாங்கினேன்.


அதோ அந்த மூலையில் உள்ள ஒரு வீட்டிலிருந்து பழைய சாமான்களுடன் அதையும் வாங்கினேன்!
அந்த வீட்டை எனக்கு காட்டு!
பழைய சாமான்களை காயிலான் கடை வியாபாரி சேத்திடம் விற்ற மனிதன் அங்கு லாட்ஜும் நடத்தி வந்தான்...
நான் தான் அவரிடம் பழைய துணிகளையும் மற்ற பொருட்களையும் விற்றேன்! அதன் பின்பு 3 தடியர்கள் இங்கு வந்தனர். அவர்களை நான் ஒரு போதும் பார்த்ததில்லை. கோடுபோட்ட கோட் ஒன்றைக் கேட்டனர். அதை விற்றுவிட்டேன் என்ற உடன் பைத்தியம் பிடித்த நிலையில் வெளியேறி விட்டனர்!
இந்த பழைய சாமான்களை விற்க எனக்கு உரிமை உண்டு! இங்கு பார்ட் நோலஸ் என்ற ஒருவன் தங்கி இருந்தான். ஆறுமாத காலம் வாடகை பாக்கிவைத்து விட்டு மறைந்து விட்டான்! அவனுடைய பழைய சாமான் தான் அவை!
பார்ட் நோலஸ்? அவன் சிறையில் அடைபட்டுக் கிடக்கிறான். பென்ஸ்பார்க் நகரில் 6 வழக்குகளில் அவன் சம்பந்தப்பட்டுள்ளான்!
பர்டுக்கு ஒரு தம்பி உண்டு! பெயர் கிளைடி! ஊருக்கு வெளியே குடியிருக்கிறான்! எதற்கும் அவனை ஒரு 'விசிட்' பண்ணலாம்!


கிளைடி நோலஸிடம் விசாரித்த போது அவன் எரிந்து விழுந்தான்...
எனக்கும் பார்ட்டுக்கும் பல ஆண்டுகளாக தொடர்பே இல்லை! அவனைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது! உங்களுக்கு என்னால் உதவ முடியாது!
உன்னைத் தாக்கியவர்களில் இவனும் இருந்தானா?
நோ! என் வாழ்நாளில் ஒரு போதும் இவனைப் பார்த்ததில்லை!
பார்ட் ஏதாவது தப்பு பண்ணியிருந்தால் அதற்கும் எனக்கும் எந்த வித தொடர்பும் இல்லை!
நான் அப்படி நினைக்க வில்லை!
தடயத்தை கண்டு பிடித்து விட்டீர்களா?
வீட்டுக்குள் ஜார்ஜ் அவனைப் பின் தொடர்ந்த போது கிளைடி நோலஸ் பெரிதும் கோபமடைந்தான்...
என்னை வேவு பார்ப்பதை நிறுத்தப் போகிறாயா? இல்லையா?
நான் கேட்கும் ஒரு சில கேள்விக்கு பதில் அளித்து போலீசுக்கு உதவ விருப்பமில்லையா?
ஹேய் கிளைடி! இதில் உள்ள சாவிகள் எதுவுமே பூட்டைத் திறக்கவில்லை! ஒன்றுமில்லாத சாவிக்கு இந்தப்பாடு பட்டுள்ளோம்! பேசாமல் சுத்தியலைப் பயன்படுத்தி திறப்போம்!
வாயை மூடு!




என்னை மடக்கிய மூன்று ஆசாமிகளில் இவனும் இருந்தானே! உடனடியாக உதவிகோரிப் பெறுவது தான் நல்லது!
அங்கு கீழே என்ன நடக்கிறது?
டேய் ஓட்டை வாயா! இவனை பிடிடா!
போலீசா!
போலீஸ்காரன்! அவன் எப்படி உள்ளே நுழைந்தான்?
அவன் நம்ம சங்கதிகளைப் பார்த்து விட்டான்!
KNOWLES
நிலைமை மோசமடைந்த போது சேத் உதவிக்கு போலீசுடன் வந்து விட்டான்...
அவனைத் தீர்த்துக் கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை!
இடத்தை விட்டு நகராதீர்கள். இந்த இடத்தைச் சுற்றி போலீஸ் நிறுத்தப்பட்டுள்ளது!
போலீசார் வந்து பார்ட்டின் இரும்பு பெட்டியை உடைத்து திறந்த போது...,
இவையனைத்தும் திருடப்பட்ட பணம்! பார்ட் ஜெயிலுக்குப் போன போது இவற்றை தம்பியிடம் விட்டுப் போய் உள்ளான்! உனக்குப் போலீசார் சிறப்பான பரிசு தருவார்கள் சேத்!




# சித்திரம் பேசுதடி!

## கார்ட்டூன் வரைவது எப்படி என்று விளக்கும்

## மினி தொடர்!



## இந்த மாத முத்து காமிக்ஸில் தொடங்குகிறது!

**Don't Miss it!**



தொலைதூர நடைப்போட்டிக்காக நான் வாங்கியிருக்கும் இந்த ராட்சஸ பூட்சைப் பற்றி உன் அபிப்ராயத் தைச் சொல்லு விச்சு!
கொஞ்சம் பெரிய அளவாக தோன்றுகிறதே!
எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது விச்சு...என்ன செய்வது ..இந்த டிசைனில் இந்த சைஸ்தான் கடையில் கிடைத்தது.
கொஞ்சம் காகிதத்தை அளவாக வெட்டி உள்ளே வைத்து விட்டால் சரியாகிவிடும்!
நடக்கும் போது காகிதம் நகருமே கிச்சு!
நன்றாக பசை கொண்டு ஒட்டிவிடலாம்!
படுக்கைக்குச் செல்லும் வரை போட்டு நடை பழகி பார்க்கப் போகிறேன்....நாளைக்கு காலை கடிக்கக் கூடாது பார்!


படுக்கை நேரம்-
இதேதடா வம்பு! கழற்ற வரமாட்டேனென்கிறதே! கிச்சு... கிச்சு!
வலுவாகப் பற்றி இழுடா பொடியா!...
நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டது போலிருக்கிறது!
நடு இரவு-
எல்லா வகையிலும் முயற்சி செய்தாகிவிட்டது கிச்சு... கொஞ்சம்கூட அசையக்காணோம். தானாக தேய்ந்து கிழியும்வரை அவற்றை நீ போட்டுக்கொண்டே இருக்கவேண்டியதுதான்!
கவலைப்படாதே கிச்சு!... போட்டிதான் வருவதற்குள் நன்றாக பழகிப்போய்விடும் உனக்கு!
கிர்-ர-ர்ர்!



Tamil Comics Ulagam - King Viswa